14462

Dr. U.V. Swaminatha Iyer Library MADRAS 41
TIRUVANMIYUR

ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசதேசிகரவர்களால்

இயற்றப்பட்ட

# திருமழுவாடிப் புராணம்.

இது

தஞ்சை

கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

மகா-ள-ள-ஸ்ரீ

உலகநாதபிள்ளையவர்களால்

பார்வையிடப்பட்டு

திருமழபாடி

ஸ்ரீமத் கோ. சச்சிதானந்தசுவாமிகளால்

தஞ்சை


“ஸ்ரீவித்தியாவிநோதினி முத்திராசாலையில்”

பதிப்பிக்கப்பட்டது.

கீலக-௵ ஆவணி-மீ

Copy-Right Registered..

1908



திருநாவுக்கரசுநாயனார்.

| | |
|---|---|
| நீறேறு திருமேனி. | தாண்டகம். |
| அலைபடுத்த பெருங்கடல். | தாண்டகம். |

சுந்தரமூர்த்திநாயனார்.

| | |
|---|---|
| பொன்னார்மேனியனே. | நட்டராகம். |

| | |
|---|---|
| விநாயகர் திருநாமம்: | சுந்தரவிநாயகர். |
| சுவாமி திருநாமங்கள்: | வச்சிரதம்பேச்சுரர், மழுவாடீசர், வைத்தியநாதர் என்பன. |
| அம்பிகை திருநாமம்: | சுந்தராம்பிகை. |
| தீர்த்தங்களின்பெயர்: | சிவகங்கை, லக்ஷ்மிதீர்த்தம். |
| தலவிருக்ஷம்: | பனை. |

வழிபட்டுப் பேறு பெற்றோர்கள்:— புருடாமிருகர், மார்க்கண்டேயர், திருமால், முருகர், இலக்குமி, துர்க்கை, காளி, சூரியன், சந்திரன், அக்கினி, அசுவினிதேவர், தேவர்கள், அகத்தியர், பராசரர், வசிட்டர், பீமன், காவேரிமுதலியோர்கள்.

மேற்கூறிய விசேடங்களோடு மிகப்பழமை வாய்ந்த இந்த மழுவாடிப்புராணத்தை, வடமொழியினின்றும் மொழிபெயர்த்து, இனிய செய்யுள் நடையாக இயற்றியவர்,

இற்றைக்கு முந்நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னிருந்த, கமலைஞானப்பிரகாசதேசிக ரென்பவர். இவருடைய சரித ஆராய்ச்சிக்குப் போதுமான ஆதாரங்கள் கிடைக்காமையின் இவரைப்பற்றித் தற்காலம் அதிகமாக எழுதக் கூடவில்லை.

இப்புராணம், முதலில் கடவுள்வாழ்த்தும் பாயிரமும் அமையப்பெற்றுப் பின்னர் தலச்சருக்கமுதலிய ஏழுசருக்கங்களாகப் பகுக்கப்பெற்றுள்ளது. இதன் செய்யுள் தொகை 610. இப்போது கிடைத்துள்ளன 581.

இப்புராணத்தில் இலகுவான செய்யுளாகவும் இடையிடையே விரவியுள்ள சொன்னயம் பொருணயங்களும், சைவசித்தாந்தக் கருத்துக்களும், சிவபுண்ணியங்களும், சிவோத்க்ருஷ்டமான ஸ்துதிகளும் அமைந்திருத்தலின் மிகப் பாராட்டற்பாலன.

அலைகாவன்பும் வெலைகாவுள்ளமும், வித்தகமார்தரு மெய்த்தவவொழுக்கமும் வாய்ந்து நூல்பலவாய்ந்தடங்கறிவினு டுத்தமர்புகழுமித்தலவாசியாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள், கைம்மாறு சிறிதுங்கருதாமல் மெய்வருத்தமும் பொருட்செலவும் நோக்காமல், பலரும் இத்தலமகிமையை அறிந்து வழிபட்டுய்தல் ஒன்றுமே காரணமாகப் பெருமைவாய்ந்த இம்மழுவாடிப்புராணத்தை வெளியிட

முயன்று முடித்தது யாவராலும் மிகவும் நன்குமதிக்கற்பாலது.

இந்நூலை வெளியிட முயன்ற சுவாமிகள் அரிதிற்றேடி வைத்திருந்த பிரதி ஒன்றைத்தவிர வேறு ஏட்டுப்பிரதிகள் பலவாறு முயன்றும் கிடைக்கவில்லை. கிடைத்த ஒன்றும் அடிகுறைந்தும், பிறழ்ந்தும், பிழை செறிந்துங்காணப்பட்டது. அங்ஙனமிருக்கினும் என்சிற்றறிவுக்கெட்டிய அளவு ஒருவாறு திருத்தி வெளியிடச்செய்தேன். ஆகையால் இந்நூலிற் காணப்படும் பிழைபலவற்றையும் அறிவிற்சிறந்த பெரியோர்கள் மன்னிப்பார்களென நம்புகின்றேன்.

தஞ்சை<br>29—8—08.

இங்ஙனம்<br>எல். உலகநாதன்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மழபாடியெனவழங்கும்

# திருமழுவாடிப்புராணம்.

## பாயிரம்.

### காப்பு.

வான நாடர்கண் மாதவ நாடரு
மோன ஞான முழுது முணர்ந்திடத்
தான மேவுந் தடவிக டாசல
வானை மாமுகத் தண்ணலை யேத்துவாம்.

வேறு

வடமொழிப்படமழுவையின்புராணத்துவகுத்த
திடமொழிப்படச்செந்தமிழாகவேசெப்பக்
குடமொழித்திடுமோதகங்கொடுப்பவர்கொடுஞ்சங்
கடமொழித்திடுங்கடமொழியாவிபங்காப்பு.

### கடவுள் வாழ்த்து.

வச்சிரதம்பேச்சுரர்.

வேறு

இளநிலவுமிசையிலங்கமிடற்றின்மரகதச்சோதியெரிக்க
மிக்கோ, ருளநிலவுமடித்தலத்துப்பதுமராகச்செவ்வியொ

ளிரவி றுந்,தளநிலவுமீரேழுசகதண்டமுழு தினையுந்தாங்கியோ ங்கும்,வளநிலவுமழுவையில்வாழ்மணிவயிரத்தூணினையாம் வழுத்தல்செய்வாம். (க)

## மழுவாடீசர்.

சரசவுமைமனமகிழத்ததும்புகங்கையலைமோதிச்சடைக டாழ, நிரைசெயிளநகையினுடனெரித்தசிவப்பிறைக்கொ ழுந்துநிலவுகால, வரசரிகவருந்தவஞ்சேர்மார்க்கண்டன்கண் டுதொழமழுவைமீதிற்,பரசுநடம்புரிந்தருளும்பரசிவரூபந்த னையாம்பரசுவோமே. (௨)

## சுந்தராம்பிகை

முன்னையாரணம்பரவுமுழுவயிரத்தூணிடஞ்சேர்முழுநீ லத்தைத், தன்னையாதரிப்பவர்க்குத்தருஞ்சிந்தாமணியைய ருந்தவமேசெய்யு, மென்னையாட்கொண்டருளியீரேழுபுவ னமுமீன்றெடுத்துக்காக்கு, மன்னையாமழுவையில்வாழழகி யநாயகியைமனத்தன்புகூர்வாம். (௩)

## சுந்தரவிநாயகர்.

செழுமணிசேர்பொற்பதங்கள்செறிந்துமுழுத்தந் தத் தாற்சிறப்புமேவி, மழுவைதனிலகிலாண்டமண்டபத்துக்கி சைந்தவொருவயிரத்தூணர், தழுவுமணியோட்டாகந்தயங் குமரகதவுருவந்தாங்கியோங்கு, மழகியகுஞ்சரவடிவமான முதன்மதலையையாமகத்துள்வைப்பாம். (௪)

## சுப்பிரமணியக்கடவுள்.

### வேறு

மெத்திபமலர்க்கடம்பும்வெட்சியுமேந்திநேயம்
வைத்திடுங்குறவர்போற்றும்வஞ்சியைப்பயின்றுவஞ்சித்
தத்திசேர்மாவைச்சாடியமரர்நாட்டரசுவிறக்
கைத்தலவேலெடுக்குங்கந்தனைச்சிந்தைசெய்வாம். (௭)

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பெருந்தகையிடத்துவாழும்பெருந்தேவிஞானந்தன்னை
யருந்தெனவள்ளந்தன்னிலளித்திடுமுறைதயுண்டு
திருந்தவெம்பிரான்றனக்குச்செந்தமிழமுதவெள்ளந்
தருந்திறற்காழிவேந்தன்சரணங்கடலைமேற்கொள்வாம் (௮)

## திருநாவுக்கரசுநாயனார்.

சிவனருள்பயின்றபேர்க்குத்தீயவுநல்லவாதல்
புவனியோர்காணக்கற்றூண்புணையெனத்தன்மைசெய்யப்
பவநெடுங்கடலைநீந்திப்பயிறல்போற்கடல்கடந்த
வவமிலாச்செய்யநாவுக்கரசர்தாளகத்துள்வைப்பாம். (௯)

## சுந்தரமூர்த்திநாயனார்.

பொங்கெழிற்பரவைதன்பாற்புகுந்துறப்படிதல்வேண்டிச்
சங்கிலித்துவக்கைநீக்கித்தனதருந்துதிக்கையாலே
யங்குசபாசன்றன்னையடைந்தேவல்கொண்டுவிறுங்
துங்கமுத்தமிழ்மதச்சிந்துரத்தினைத்துதித்தல்செய்வாம். ()

### திருவாதவூரடிகள்.

பெருங்கருங்கடல்கடந்துபெருந்துறைதன்னிலேறி
யருங்குருந்தடியினோங்குமாசினதடியைச்சேர்ந்து
நெருங்குனாதுருமெய்ஞ்ஞானனோயமுப்பலமும்பெற்ற
விருங்கலைவாதவூரரிருபதந்தொழுதல்செய்வாம். (௪௰)

### சூதபுராணிகர்.

நந்தியாங்கடலின்மொண்டுநற்சனற்குமரமேகந்
தந்திடவியாதனென்னுந்தடங்கிரிதன்னிற்றங்கி
மூந்தியபுராணவெள்ளமுனிவராம்பயிர்க்குநல்கு
முந்தியாஞ்சூதன்றன்னையுளத்துடன்றுதித்தல்செய்வாம்.()

## நால்வரலாறு.

---

தொழுவருமண்ணோர்விண்ணோர்துதித்திடுமொலியினோடே
முழவினிலொலியுமிக்குமூதண்டந்தனையடர்க்க
மழவையிலெம்பிரானார்மாசிலாமாசித்திங்கள்
விழவினிற்றிருவுலாச்செய்மேன்மையைவியந்துரைப்பாம்

### வேறு.

பொருந்துநல்விழாத்தொழப்போதும்வானவ
ரருந்தவேவிளைந்தபுத்தமுதமைத்திடுந்
திருந்திடுமெண்ணிலாத்திங்கள்போல்வன
விரிந்திடுமுளையெழுவெள்ளிப்பாலிகை. (௪௨)

உறைந்திடும்வெங்கதிர்க்கோதுங்கிவானினு
நிறைந்திடுமுடுக்கணநிலத்திழிந்தெனக்
குறைந்திடாவீதியிற்குலவுதெற்றிசூழ்
செறிந்தனநவமணித்தீபராசிகள். (கங)

சீரணிமுத்தணிசெறிந்தமங்கையர்
வாரணிமாமுலைவளமைகாட்டல்போற்
றோரணவீதிசூழ்சுதைவெண்பாளைசேர்
பூரணகும்பமேபுடைவளர்ந்தன. (கச)

வரும்பவனியிலரன்மாலைபெற்றிட
விரும்பினர்பான்மதன்வினைசெய்விற்கள்போ
லரும்புவமலருடனளியொழுங்குசேர்
கரும்புகணிறைந்தனகனகவீதிகள். (கரு)

ஊற்றமாமெம்பிரானுலாவிழாத்தொழப்
போற்றிடுமரம்பையர்பொற்கவானுடன்
றேற்றெதிரவர்தமைத்தொழுதணிற்றல்போ
றுற்றிளவரம்பைகடழைப்பவீதியே. (கசா)

பைம்பொனீள்வீதியிற்பத்திசேர்ந்திடு
மம்பவளத்திரளாரமாலைபோற்
கம்பமாய்நிறைந்தபைங்கமுகராசியிற்
செம்பழுக்காயுடன்செறிந்தபாளைகள். (கஎ)

தூண்டியநவமணித்தோரணங்களி
லீண்டியதட்டையோடிசைந்தசல்லியே
மாண்டகுவனந்தவெண்மதியொழுங்குசேர்
காண்டகுவெண்ணிலாக்கற்றையென்னவே. (க௮)

இசைத்திடுநறும்புகையிசைந்தவீதிசூழ்
மதித்திடுஞ்செம்மணிமாலைதூங்குவ
கதித்தடர்ந்தெழுந்திடுகாளமேகமு
டுதித்துமேனகுமின்னொழுங்குபோலவே. (க௯)

வேறு.

தேசினாற்சிவலோகம்போற்சிறந்திடுமழுவைதன்னி
லாசிலாவயிரத்தூணரளவிலாவளமைபெற்ற
மாசிநல்விழவுக்கெய்தும்வானவர்வேடைதீர
வீசதற்கென்னவோங்கும்வீதிசூழ்துவசராசி. (௨0)

வேறு.

மருங்குடனன்னமாமலையின்பாலறற்
பெருங்கடனெய்க்கடல்பெருங்கருப்புநீர்த்
தருங்கடறேன்கடறந்தவெண்டயி
ரருங்கடனெருங்குவலன்னசாலைகள். (௨க)

குருந்தணிநகைச்சியர்குங்குமத்தொடு
நிரந்தரந்தண்பனிநீரிறைத்தனர்
விரைந்தொலிவிழாவெழுவீதியெங்கணுஞ்
சொரிந்திடுநறுமலர்த்துகளடங்கவே. (௨௨)

அம்பரத்திழிந்திடுமருணர்கோடிக
ளெம்பிரான்றனைவிழைந்திறைஞ்சல்போலவே
செம்பொனீள்வீதியிற்செங்கைமங்கையர்
பைம்பொனாலாத்திகள்பலவெடுத்தனர். (உ௩)

அரிவையர்நெருங்கவங்கவரணிந்திடு
மருவுபூணுதிர்ந்திடுமணியும்வானவர்
பொருமுடியுதிர்ந்தபொற்பொடியுமேமிக
விரவுகதிர்மணிவீதியெங்கணும். (உ௪)

பரம்பியேபணிந்திடுபத்தர்தம்முடன்
வரும்பலவமரர்கள்வணங்கிப்போற்றிரு
ரரம்பையர்தம்முடனவனிமங்கையர்
விரும்பியனுடகவியனடத்தினர். (உ௫)

வேறு.

வியனுறுவிண்ணவர்விமானகோடியும்
பயிறருநவமணிப்பைம்பொன்வீதியி
னுயர்நிலத்தேர்களுமொன்றிநின்றன. (உ௬)

படுமணிவீதியிற்பச்சைக்காம்புசேர்
வடுவறுசந்திரவட்டஞ்சூழ்வன
வுடுபதியனேகமுடுரகராசிக
ணடுவுறக்கவ்விவானுன்றல்போலவே. (உ௭)

பரந்தவெண்ணிலவுசூழ்பளிங்குவீதியிற்
பொருந்துவெண்சாமரைபுடையிரட்டவே
விரிந்திடுபொற்கடன்மீதுபொங்கியே
திருந்திடவெழுந்தவீழ்திரைகளென்னவே. (௨௮)

நற்றிருமகளுளநயக்குகிற்குமா
றுற்றபல்லாவணமொலிவிழாத்தொழப்
பற்றியவாடைபொன்பலவுமேந்தியே
துற்றிடுகற்பகச்சோலையன்னவே. (௨௯)

உமையொருபாகனுரோங்குநல்விழா
விமையுறுதினிதுகண்டிறைஞ்சியேத்தவே
ந [illegible] மவகுத்திலனயனுகர்போலவென்
[illegible] விலாதரத்துடனன்பர்சூழ்ந்தனர். (௩௰)

புண்ணியமாதர்கைப்போர்பொழிந்திட
மண்ணினிலமரர்பூமழைபொழிந்திட
எண்ணியகவிஞரினிசைபொழிந்திட
நண்ணியமழுவையினடந்ததவ்விழா. (௩௧)

வேறு.

அண்டர்நாயகனைமிக்கவவனிமண்டலத்தினோடு
விண்டலம்போற்றுமாசிவிழாவெதிர்கண்டுபோற்றிக்
கொண்டல்வானளவுமோங்கக்கூத்துடையான்வகுத்த
மண்டலத்தினிதிருந்தார்மாதவக்குழுவினுள்ளார். (௩௨)

4462



அத்தவக்குழுவினுள்ளுமறிவினுற்றவத்தான்மிக்க
வித்தகனுலகநாதன்விரிந்தநற்றமிழினாலே
யித்தலபுராணந்தன்னையியம்புதல்வேண்டுமென்ன
வுத்தமமெனமுன்னூல்கண்டுரைத்தனன்விருத்தப்பாவால்.

வேறு.

*அருளாரும்பூங்கடப்பந்தாரான்றந்தவருங்காந்தபுராண
த்தினடைவேயெல்லா, மிருளாதவறிவுடையமுனிவர்கேட்க
வேதமில்சீர்சூதமுனியினிதுகூறும், பொருளாகவகுத்தே
ழுசருக்கமாகப்புகல்விருத்தத்தொகையறுநூற்றொருபதாக
மருளாதசெந்தமிழின்செய்யுளாகமரமழுவைப்புராணத்தை
வகுத்துரைத்தான். (௧௪)

நூலியற்றியகாலம்.

வேறு.

தழுவியகலியுகஞ்சேர்சகாத்தமாயிரத்துநானூற் [ண்டின்
றுழிதருமெண்பத்தேழாண்டொழிந்தபின்குரோதனா
மொழிதருமாசித்திங்கண்முற்பக்கமுதனுடன்னின்
மழுவையம்புராணந்தன்னைவகுத்தனன்றமிழினாலே. (௧௫)

நூலாசிரியர் பெயர்.

மாசிலாவயிரத்தூணர்மழுவையம்புராணந்தன்னை
யாசில்செந்தமிழினாலேயணிபெறவகுத்தமைத்தான்
பேசரும்புகழ்சேர்ஞானப்பிரகாசன்கமலைவாழுந்
தேசிகனறிஞர்போற்றுஞ்செங்கமலப்பொற்பாதன். (௧௬)

## அவையடக்கம்.

### வேறு.

சின்னூல்பெருநூலெனுநூல்கடெரியாதெனினுந்தெரிந்தார்போற், புன்னூலறிவான்முன்னூலைப்புகன்றேன்மழுவைப்புராணமென, மின்னூன்மருங்கினுமைபாகர்மேன்மைப்புகழேவிளம்புதலா, லின்னூறன்னைமுதனூல்களெல்லாம் வல்லோரிகழாரே. (௧எ)

## பாயிரமுற்றிற்று.

---

## தலச்சருக்கம்.

இலங்குபொன்னித் தடம்பயினத்தினஞ்சூழ்தாலவனந்தன்னிற், புலங்கொள்புருடமாமிருகம்பொருந்துந்தவத்தில் வருந்திடவே, நலங்கொள்சதுமாமுகனுலகைநயவாதவனிநயந்துமிகத், துலங்கும்வயிரத்தூண்வந்துதோற்றும்புராணஞ்சாற்றுவாம். (௧அ)

### வேறு.

இலகுமேதினியியற்றிடுந்தவப்பயனென்ன
வலகினல்லறமமைத்திடுமாலையமென்ன
மலர்கொள்பூந்தருவளந்தருகைமிசமென்ன
வுலகமீதினிலொருபெருந்தபோவனமுளதால். (௧௯)

வேறு

உற்றசைவாகமங்களோது நூல்வேதமுற்றுங்
கற்றதனிலையினிற்குங்கருணையேவடிவதாகிச்
சற்றுமாசிலாதசிந்தைதத்தபோதனரினிதுவாழப்
பெற்றனைமிசவனத்தின்பெருவளஞ்சிறிதுசொல்வாம். ()

அக்குலியடராதோங்குமரனைனப்பேரின்பத்தின்
புக்ககமென்னஞானப்புகழ்பிறந்தகமேயென்னத்
தக்கநன்னெறிசேர்கல்விச்சரக்கறையென்னநாளு
மிக்கநற்றேசுமேவிவிளங்குமத்தபோவனந்தான். (சக)

கலந்திடுகளிறுதானேகளிமதமயக்கமெய்து
மலர்ந்திடுதருக்கடானேவயிரமுங்கவடுமெய்தும்
புலந்திடுசகோரந்தானேபுதுநிலாவிச்சைகூரு
நலந்தருதருப்பைதானேநகநுதிப்பூணுமெய்தும். (சஉ)

வேறு.

பாடலின்புறுவனவசுணம்பத்திசேர்ந்
தாடலின்புறுவனமயில்களாரையிற்
கூடலின்புறுவனவன்றில்கூர்மதுத்
தேடலின்புறுவனசிறைகொள்வண்டினம். (சங)

வேறு.

இனிமைதந்திடுதண்புனலேரியினிடத்திற்
கனிபயின்றிடுதருநிழற்றோற்றியகாட்சி
முனிவர்சந்ததம்போய்ப்புனன்மூழ்கவேகண்டு
புனிதமாதலத்தருக்களுமூழ்குதல்போலும். (சச)

வேறு.

சோலைசுற்றிய தடத்துச்சூழ்தரப்பொருங்கமக்க
மாலையைப்பற்றிச்சிந்துமருவெனுமருக்கியத்தால்
வேலையிற்கதிரோன்றன்னைமென்முகமலர்ந்துநோக்கிக்
காலையிற்கடனைத்துங்கழிப்பனகமலமெல்லாம். (௪௫)

தக்கமாமலரினீட்டந்தந்திடாவருக்கைதன்னிற்
பக்கவேரிடைகிலத்துட்பழுத்திடுசுளையினீட்ட
மைக்கடலுலகினுள்ளோர்மதித்திடற்கரியவாழ்க்கை
மிக்கவரறிவினுள்ளேவிளைந்தபேரின்பம்போலும். (௪௬)

ஏரியினுலவைதன்னுலெழுந்திடுந்தரங்கமெங்குஞ்
சூரியன்றனதுசாயைதுலங்குறநலங்கொள்காட்சி
கூரியவருந்தவத்தோர்கொடுத்திடுமருக்கியங்கள்
பாரில்வந்தேற்கவெய்யோன்பலவுருவெடுத்தல்போலும்.

வேறு.

வழிநெறிமாதவரிடத்துமாரவேள்
பொழிதருதண்மலர்பூட்டியெய்திடும்
பழியதகுறித்தெனப்படருமுல்லைக
ளுழிதருமுலவையாலுறநடுங்குவ. (௪௮)

பெருகவேளுடன்செயும்பிழைகடீரவே
யருகுறத்தபாவனத்தணைந்துமெல்லவே
சருகனைபொாதுக்கியேதருமலைத்தளி
பருகுந்தன்றுளிப்பனபருவத்தென்றலே. (௪௯)

வற்கலைசமித்திலைமலர்செழுங்கனி
நிற்குமேதினிநெடுந்தருக்கள்போலவே
யொற்கமின்மாதவர்க்குதவலின்மையாற்
சொற்கவைந்தருக்களைச்சூருநீத்தவே. (௫0)

வேறு.

போர்தலர்புனல்கொளேரிப்புறந்தனினிறைந்துதோன்றிக்
கோதறவிளைந்துசாயுங்குளச்செந்நெற்கதிர்களெல்லா
மோதனமாகவெம்மையுகந்தருள்புரிகவென்றே
மாதவமுனிவர்தம்மைவணங்கியேநிற்றல்போலும். (௫௧)

வேறு.

வாயதுபுலர்ந்திடமானின்கன்றுக
டாயயல்புலர்ந்திடுந்தளர்வுநீங்கவே
மேயதன்குட்டியைவிலக்கிவெம்புலி
தூயபாலருத்துவசுரந்தமாமுலை. (௫௨)

கடகரிக்கன்றுகளாரக்கைகளாற்
பிடர்தருசடைமயிர்பிடித்திழுக்கவுந்
திடமுறுசீயமுஞ்சினமதின்றியே
யிடர்செயாதகமகிழ்ந்தினிதுநிற்குமே. (௫௩)

தனிநெடுந்தருக்களிற்சார்ந்தமென்கனி
முனிவர்தஞ்சிறார்பெறமுயன்றுதாவமேன்
மனிதர்பாலிணங்குறுவானரங்களுங்
கனிபலபறித்தவர்கரத்தளிப்பன. (௫௪)

கழங்கெனவண்டெழுகானமீதினின்
முழங்குவன்கேழலுமுனிவொன்றின்றியே
கிழங்கினையெயிற்றினாற்கிண்டிமண்ணிடை
வழங்குவமாதவர்மகிழ்ந்தருளவே. (௫௫)

புற்றுணவருந்திடப்புகும்பல்லூகமுந்
துற்றதேனிறாலினைத்தூக்கியக்கையாற்
குற்றமொன்றிலாதெதிர்கொணர்ந்தளிப்பன
நற்றவத்துறுவர்கணயக்குகிற்பவே. (௫௬)

பெற்றமேல்கொடுவருபிரானையுள்ளியே
யுற்றமாதவத்தவரோங்குவேள்வியிற்
சுற்றினிதுரைத்திடுசுருதிமாமொழிக்
கற்றினிதுரைப்பனகாவிற்கிள்ளைகள். (௫௭)

வேறு.

இத்தனையெனவகுத்தியாவர்க்குமியம்பவொண்ணா
வத்தனைவளமையெய்தியாசிலாச்சிவலோகத்தை
யொத்ததைமிசவனத்திலொப்பிலாமுதல்வனன்ன
முத்தனையேத்துகின்றமுனிவர்தம்பெருமைசொல்வாம். ( )

காந்தியாலிரவிபோல்வார்கருணையோர்மிகப்படைத்த
சாந்தியானிறைவுபெற்றசந்திரவுதயம்போல்வார்
போந்திடுமனத்திலுற்றபொறையினாலவனிபோல்வார்
மாந்திடாதோங்குகின்றமகிமையான்மலையேபோல்வார். ( )

1446



எண்ணியவுலகனைத்துமெழுவகைப்பிறப்பினுள்ளும்
பண்ணியவினையனைத்தும்பராபரத்துண்மைதானுந்
திண்ணியமனவிருட்குத்தீபமாகியமெய்ஞ்ஞானக்
கண்ணினலங்கைநெல்லிக்கனியெனக்கண்டிருப்பார். (கூ0)

ஆக்கமுங்கேடுமென்றுமன்னியமென்றுகாண்பார் [வார்
நீக்கமின்மெய்ஞ்ஞானத்தினிலைமையைப்பொருளாக்கொள்
தாக்கியகரணபேதஞ்சஞ்சலமவைகடீர்ந்தே
வாக்கொடுமனமுமெட்டாவாழ்வுபெற்றினிதிருப்பார். (கூக)

மனத்திடைச்சிவனையன்றிமற்றொன்றைநினையாராவின்
றனத்தினையன்றிமாதர்தனந்தொடலறியார்பாசஞ்
சினத்தலையன்றியார்க்குஞ்சினஞ்செயக்கருதார்தக்கோ
ரினத்தினையன்றிச்சுற்றமினமெனவியந்திடாதார். (கூ௨)

வேறு.

சேவவடத்தல்லதுசிந்தைமீதினி
லவமுறுசஞ்சலமகத்துளெய்திலார்
தவமதிலன்றியேசகத்துவாழ்க்கையிற்
கவலைகூர்முயற்சிதான்கருதலொன்றிலார். (கூ௩)

வேறு.

மறைநூல்கடெரிந்திடுமிம்முனிவர்களுமருவியகைமிசவ
னத்திற்பிரமவேள்வி, நிறைவுறுநன்மறைவகுத்தநெறியிற்
செய்துநிறைவேற்றிக்கவலையறநிறைந்திருந்தே, குறையிய

துமிலரேனுமறியவேண்டுங்குறையெமக் கொன்றுண்டெனக்கைகுவித்துநின்றே, முறையாரும்புராணகலைவல்லசூதமுனிவருடனொருவார்த்தைமொழியலுற்றார். (சுச)

கதியுதவுசிவாகமங்கள்புராணமெல்லாங்கட்டுரைத்தீர்பாரதத்தின்கதையுஞ்சொன்னீர், விதிமுறைமேயவிதிசிரங்கைக்கொண்டோன்வாழுமெய்ப்பதிகளவையனைத்தும்விதித்தீராங்கே, பதிகளினுமழுவாடியென்னுமிக்கபதியொன்றுண்டென்றீரப்பதியின்மேன்மை, மதியுடையீரியாங்கண்மதித்தறிதற்கன்பால்வகுத்துரைக்கவேண்டுமெனத்தொகுத்துச்சொன்னார். (சுரு)

திருந்துவயிரத்தூண்வந்துதித்தவாறுஞ்சிற்பரமன்மழுவாடலுற்றவாறு, மருஞ்சிவகங்கையடியார்க்கருளும்வாறுமண்ணல்வயித்தியநாதனனவாறு, மிருந்திறன்மான்மாதுவிந்தைகாளிசெவ்வேளிரவிமருத்துவரங்கியிமையோர் பொன்னி, வருந்துவசிட்டன்கும்பமுனிவன்வீமன்வரம்பெறலுங்கேட்கவிருப்புற்றேமென்றார். (சுசு)

சொன்னவிவர்மொழிசெவியாற்பருகிமிக்கசூதமுனிசூதரியாமுனிவர்தம்மைப், புன்னகைசெய்தன்னகர்வாழ்வயிரத்தூணர்புராணநினைந்தங்கமெல்லாம்புளகஞ்செய்ய, நன்னயமேதருமுள்ளமிகக்களிக்கநயனங்களானந்தநலமேபொங்க, முன்னமகத்தியன்றனக்குமுருகனார்தாமொழிந்த புராணத்தடைவுமொழியலுற்றார். (சுஎ)

## வேறு.

நன்றுரைத்தீர்நீர்நாதனுரானந்தநடஞ்செய்
மன்றுரைப்பினுமுரைப்பரிதாகுமிம்மழுவை
யன்றுரைத்தனனறுமுகனகத்தியர்க்கியாமு
மின்றுரைத்திடவுமதுபேரன்புகண்டிசைந்தாம். (சுஅ)

திகழ்திரைக்கடலேழையுநீந்தலாமெனினு
மகலிடத்துடன்வானையுமளக்கலாமெனினுந்
தகைமைபெற்றிடுதாணுவாழ்மழுவையம்பதியின்
மகிமையைக்கரைகண்டெவருரைத்திடவல்லார். (சுகூ)

ஆயிரந்தலையனந்தனுரனந்தநாளாக
வாயிரங்கவேமொழியினுமழுவைமாநகர்வாழ்
வேயிரங்குதோண்மின்னொருபாகனூர்புகழின்
பாயிரந்தனைப்பகுத்தினிதுரைக்கவும்படுமோ. (எ0)

முத்தலம்புதெண்டிரைக்கடன்முழுதையுமிமைப்பிற்
கைத்தலந்தனிலமைத்தவன்கதிபெறுவதற்கே
யத்தலங்களாமனைத்தையுங்கருதிநிச்சயித்த
வித்தலந்தனையாவரேயியம்புதல்வல்லார். (எக)

உலகடங்கலுமுழன்றிடுமொற்றையாழித்தே
ருலவுபாற்கரன்றுகளிலாவரம்பெறத்துணிந்தே

யலகின்மெய்ப்பதியனைத்துமாராய்ந்துவந்திறைஞ்சு
மிலகுமித்தலம்புகழ்சொலவல்லவரியாரே. (எ௨)

பொய்வழங்குசொற்புகன்றிடுவியாதனுர்தமது
கைவழங்கிடக்கருதியதித்தலமென்றான்
மைவழங்கியகண்டனார்மழுவையின்மகிமை
மெய்வழங்கியசொற்களால்விளம்புதற்கெளிதோ. (எ௩)

தன்னில்கங்கையேயமுனைநன்னதிமுதறம்பா
லுன்னியாடினருருவினையொழிக்கவந்தாடும்
பொன்னிமானதிபுனிதமாவதற்குவந்திறைஞ்சு
மன்னிலங்கியமழுவையின்மகிமையார்வகுப்பார். (எ௪)

களங்கமின்றியகாசியாம்பெரும்பதியினிலும்
விளங்குவெண்பிறைவேணியரினிதுவீற்றிருக்க
வுளங்கொள்பேரருண்மகிழ்ச்சியேயுதவுதற்கிசைந்த
வளங்கள்பெற்றதிம்மழுவையென்றுரைத்திடுமுதூர். (எ௫)

ஒன்றிலாதொழியுகாந்தகாலங்கள்வந்துறினு
மன்றுகாசியாமழுவையம்பதியினைமுன்றுந்
துன்றுமுத்தலைச்சூலத்தினுனியினிற்காப்ப
தென்றுரைத்தலினெளியதோவிதன்புகழியம்ப. (எ௬)

கலைகொணான்முகன்காசியைமழுவைதன்னுடனே
துலையினூடுசேர்தூக்கவேதூக்கியபோது

வுலைவில்காசியேயுயர்ந்ததென் றுரைக்குநூலென்று
லலைவிலாத்தவமழுவையின்மகிமையார்மதிப்பார். (எஎ)

திறன்மிகுந்திருவம்பலஞ்சீர்கொள்காளத்தி
குறைவின்மெய்ப்புகழ்க்குடந்தையோடிடந்தருங்காசி
யறமுடன்பொருளின்பம்வீடடைவினிலுதவும்
பெறலரும்பயனுன்கையும்பெறத்தருமழுவை. (எஅ)

வேறு.

புவனமேல்வயிரத்தூணர்பொருந்தியமழுவைதன்னி
லவரவர்சரிப்பதெல்லாமாலையஞ்சூழ்வதாகுஞ்
சிவனருந்துதியேயாகுஞ்செப்பியமொழிகளெல்லாந்
தவமுயன்றிடுவதாகுந்தகுந்தொழிலனைத்துந்தானே. (எகூ)

உறப்பணிந்திடுவோர்துன்பமொழித்திடுமொழியாமேன்
சிறப்புளவயிரத்தூணர்திசையெல்லைதன்னின்மேவி [யமைச்
யறப்பயன்றனைவிரும்புமவர்தமக்கவமாயுள்ள
பிறப்பெனுமொன்றேயன்றிப்பெறலரும்பேறுமின்றே. ()

வேறு.

மதித்திடுமெப்பதிமருவுமெல்லையின்
மிதித்திடுமவர்தமைவிட்டுநீங்கியே
குதித்தயலகன்றிடுங்கொடியபாவமுங்
கதித்தெழுமிரவிமுன்கங்குல்போலவே. (அக)

அருந்திறற்பாதகமஞ்சுஞ்செய்யினும்
பொருந்துமித்தலத்தொருபோதுவைகியே
யிருந்திடலருந்தவமியற்றியெய்திடுந்
திருந்தியகயிலையிற்சென்றிருப்பரே. (அ௨)

அடைந்தவர்தங்களுக்கருநிழறருந்
தடமுயர்தருங்கதிசாருமென்பரான்
மடந்தனிலன்பொடுவந்தமாதவர்க்
கிடந்தருமவர்பயனியாவர்சொல்வரே. (அ௩)

இந்தநற்பதியினிலிடத்திற்காகமே
வந்தொருவாயவிழ்வவ்விச்செல்லினு
மந்தணர்நூறுபேர்க்கானபோசனந்
தந்திடுமவர்பயன்சார்தலுண்மையே. (அ௪)

பிடித்திடுமொருபிடிபிச்சையாகவந்
தெடுப்பவர்தங்களுக்கியப்பெற்றிடி
லடுத்திடுபன்னிரண்டாண்டுகாசியிற்
படைத்தசத்திரந்தருபலனைநல்குமே. (அ௫)

யோகமேபயின்றிடுமுத்தமர்க்குநற்
பாகமேயமுதினைப்படைக்கவென்றிட
லாகமேவருந்திடவசுவமேதமா
யாகமேபுரிவதோடணையதாகுமே. (அ௬)

1440



தருந்திறலித்தலந்தன்னிற்காகமே
யருந்தியவிரையுநல்லறம்விளைத்தலாற்
பொருந்துமாமயேச்சுரபூசைசெய்பவர்
திருந்தியபயனையார்செப்பவல்லரே. (௮௭)

வேறு.

விண்ணீர்க்கங்கைச்சடாமகுடவிமலன்மழுவைப்பதிதன்னி
லுண்ணீரென்றேயுபசாரத்தொருவர்தமக்கேயொருகரகந்
தெண்ணீர்தருவார்நெடுஞ்சுரத்திற்றெறுகோடையினிலொ
ருகோடித், தண்ணீர்ப்பந்தர்வைத்தவர்க்காந்தருமப்பயனை
[ச்சாருவரே.

வேறு.

நேர்ந்திடுஞ்சிவலிங்கத்தினீராடுகளிறுவாவிற்
சார்ந்தநீர்தன்னைவீசத்தகுங்கதிபெற்றதென்றாற்
சேர்ந்திடும்வயிரத்தூணர்திருமேனிக்கபிடேகங்கள்
கூர்ந்திடப்பெறுவோர்பேறுகுறித்தெவருரைக்கவல்லார். ()

வண்டறைபழுதுறாதமலர்பலவயிரத்தூணர்
தெண்டிரைமவுலிக்கேற்கத்திருநந்தவனம்வைப்போர்கள்
தண்டளிர்மலரொன்றுக்கோர்சகத்திரவருடமாக
வெண்டருங்காலம்வாழ்வரியலுடன்சிவலோகத்தில். (௯0)

நொய்தினுநொய்யதேனுநுவறுபொற்பூவொன்றைச்
செய்துநம்மழுவையீசன்றிருமுடிதன்னிற்சாத்தி
லெய்துமிந்திரபதங்களீரேழுதொலையுமட்டு
மெய்திகழ்மவுலிசூடிவிண்ணரசாகிவாழ்வார். (௯௧)

நிறைந்தபொன்னானமேனிநிமலன்றன்சன்னிதிக்கே
யுறைந்திடுநெய்யினாலேயொருவிளக்குதவப்பெற்றார்
குறைந்திடாவொளிபொருந்தக்கோடிசெங்கதிர்கள்போலச்
சிறந்திடுவிமானமேறிச்செல்லுவார்சிவலோகத்தில். (௬௨)

நமைத்திடமாகக்காக்குநாதனாரமுதுசெய்யச்
சமைத்திடுமமுதுதன்னிற்சார்ந்திடுமவிழொன்றிற்கு
வமைத்திடுஞ்சதுர்யுகங்களாயிரஞ்சிவலோகத்தி
லிமைத்திடாவவர்க்குங்கிட்டாவின்பமுற்றினிதுவாழ்வார்.

பீடிகைதன்னிலிட்டபெலிநுகர்கழுகுதன்னை
வேடுவனொருவனெய்யவீழ்ந்தபின்யாளிகவ்வி
யோடியேயெம்பிரான்றனுயர்திருக்கோயில்சூழ
நாடியவவையிரண்டுநயந்தனசிவலோகத்தில். (௬௪)

வாழ்ந்திடவுலகளிக்கும்வயித்தியநாதன்றன்னை
யாழ்ந்தபேரன்பினோடேயட்டாங்கபஞ்சாங்கத்தாற்
சூழ்ந்துறப்பணிவோர்பாவஞ்சஞ்சிதவினையனைத்தும்
வீழ்ந்திடுங்கூடமீளவிரைந்துடனெழுவதன்றே. (௬௫)

யாதானும்வறியோர்தங்கட்கியைந்தனவன்பானல்க
மாதானப்பயனளிக்கும்வயித்தியநாதனார்க்குக்
கோதானசெய்கையில்லாக்கோதானம்பிறதானங்கள்
பூதானம்புரிவோர்பேற்றைப்புகலுதற்கெளிமையன்றே. ()

வேறு.

மறித்தொருதலத்தினில்வழங்குதானமுஞ்
செறித்திடுபூசனைசிவத்தியானமு
மெறித்தசெம்மணிதிகழித்தலத்தினிற்
குறித்ததொன்றேபலகோடியாகுமே. (௬௫)

வேறு.

உறுதியாச்சிவாலயத்திற்கொருசெங்கலடுக்குதற்குச்
சிறிதுதந்திடுவோர்தாமுஞ்சிவலோகத்தடைவரென்றாற்
பெறுதிருப்பணிதனக்குப்பெரும்பொருளுதவும்பேற்றை
யறுதியிட்டிவளவென்றேயறைவதற்கெளிமையன்றே. ()

வேறு.

தட்டிலாதிப்பதிதனிற்றிருப்பணிக்
கிட்டிகைவேகுதற்கிடுவதாகவே
வெட்டியதருக்களுமிக்கவண்டியிற்
கட்டியகிடாக்களுங்கதிபொருந்துமே. (௬௬)

வேறு.

இரும்புகழ்மழுவைவாழுமெம்பிரான்றிருப்பணிக்குப்
பெரும்பொருண்மிளகுநல்கப்பெற்றிலமென்பார்முற்றுந்
தரும்பலசரீரவாக்குச்சகாயங்கள்புரிவோர்கூலிக்
கரும்பணிமுயல்வோர்தாமுங்கயிலையிலமர்ந்துவாழ்வார். ()

சாலவித்தலத்தின்மிக்கதருமங்களுவந்துசெய்வோர்
சீலமோடவைசெய்விப்போர்செயக்கண்டுமகிழ்ச்சிகூர்வோர்
ஞாலமீதுதவிசெய்வோர்நன்றெனவனுமதிப்போர்
பாலனஞ்செய்வோர்தாமும்பயிலுவர்கயிலைதன்னில். (௧0௧)

வேறு.

புலன்கொள்புருடாமிருகமுள்ளம்பொருந்துந்தவத்தின் வருந்திடவே, யிலங்குபொன்னித்தடம்பயினத்தினஞ்சேர் தாலவனந்தன்னி, னலங்கொள்சதுமாமுகனுலகைநயவாத வனிநயந்துமிகத், துலங்கும்வயிரத்தூண்வந்துதோற்றும் பான்மைசாற்றிடுவாம். (௧0௨)

வேறு.

பூசைபுரியுமாசையினுற்புருடாமிருகமாமிருடித்
தேசுபரவுஞ்சிவலிங்கந்தேசமனைத்துந்தேடியுழன்
றேசில்சதுமாமுகனுலகிலெய்தியவன்றனினிதிறைஞ்சு
மாசின்மணிவச்சிரலிங்கமதுகண்டர்ச்சித்தன்பாகி. (௧0௩)

அந்தாமரையினிருந்தோன்றனடியேவணங்கியடியேனுக்
கிந்நாவிந்தச்சிவலிங்கமெனவன்பாகவிரங்கியிங்குத்
தந்தாலுய்வேனெனவந்தச்சதுமாமுகனுமதுகேட்டுச்
சிந்தாகுலமுற்றிங்கிதற்கென்செய்வோமென்றேயையுற்றான்

வேறு.

பொய்யின்றியநேயமிகுந்திடுநற்புருடாமிருகம்பலபோற் றிடநீ,வையர்தனில்யாதுவிரும்பிடினும்வழுவாதவையாவும்

வழங்குவதற, கையஞ்சுறுதில்லையிலிங்கமதிங்கான்மாத்த
மதாகிவருச்சனையான், செய்யுஞ்சிவலிங்கமதென்றனனூற்
செந்தாமரைமீதிலிருந்தபிரான். (௧0௫)

அலர்கொண்டிடுபங்கயமாளிகையோனருளின்றிமறுத்
திடலுங்கதுவும், புலர்கின்றமனத்தொடுவந்துநெடும்புவிமீ
திலிழிந்துவழிந்திடுநீர், நலகங்கையின்மன்னியபொன்னி
யெனுநதியின்றடமீதினினண்ணியபின், னிலகுஞ்சிவலிங்க
மதெய்திடுமாறியலுந்தவமுற்றுமியற்றியதால். (௧0௬)

வேறு.

கற்பமேமுதலாயோதுங்கற்பனைப்படியேவந்த
வற்புதவிபூதிதன்னையாகமெங்கணுமேயார்த்தல்
சிற்பரானந்தமெய்துஞ்சிந்தையில்விளங்கிவீறும்
பொற்பமர்ஞானச்சோதிபுறம்பினிற்பொழிதல்போலும். ()

புண்ணியகரதலத்துப் புனைந்திடுஞ்செபவடத்தி
லண்ணலாரஞ்செழுத்துமடைவுறச்செபமேசெய்தல்
பெண்ணரும்பாகர்நேயம்பெறுதன்முன்றான்றொலைத்த [ம்
வெண்ணருஞ்சனனமுற்றுமெண்ணுதற்கெண்ணல்போலு

பெறுதிங்களிரண்டுநொய்திற்பிராணாதாரலூண்பெற்றுச்
சிறுதிங்கடிங்களுக்கோர்தினமுணவருந்திப்பின்னு
மறுதிங்களுணவாயவ்வாறுண்டுணவாகிநாளு
முறுதிங்களவலைப்போலவுடன்மிகமெலிந்ததன்றே (௧0௯)

வேறு

பாகமேசெய்திடும்பலகிழங்கொடு
சாகமுங்கனிபலசருகருந்தியே
யாகமேமெலிந்துபினருந்திவாயுவைத்
தாகமோகங்களுந்தவிர்ந்துநின்றதே. (கக0)

வேறு

கோடைவெங்கதிரைநோக்கிக்கொடுங்கனலுன் குஞ்சூழப்
பீடையான்மெலிவுபெற்றும்பிரானிடத்தன் பினாலே
யோடைசூழ்பொழிலிடத்துமுலாவுவெண்ணிலாவிசைந்த
மேடையினிடத்துமென்னமெய்த்தவம்புரிந்ததன்றே. ()

வேறு

ஒருகோடிவருடநரமிருகந்தானங்குன்னியமாவருந்தவத்
தில்வருந்தவாங்கே, வருகோடிகதிருதயமென்னமிக்கார்மா
னிலத்தைப்பிளந்தெழுந்தவயிரலிங்கத், தருகோடியானக்
தக்கண்ணீர்பொங்கவந்தலிங்கமிந்தலிங்கமென்றேயெண்ணி
த்,தருகோடியயருமனத்தளர்வு நீங்கித்தருக்கினுடனருச்ச
னைசெய்திருக்குநாளில். (ககஉ)

வேறு

நியமமானவைமுடித்தேதெரித்தியார்ச்சனைதான்செய்ய
வியலுடன்வந்துபோற்றலிங்கந்தான்காணாதுச்
செயலதிங்கென்னேநந்தஞ்சிவலிங்கமெங்கேயென்று
வயனுமங்கயர்ந்துநின்றனருநிதிகெடுத்தார்போல. ()

ஐயமில்காட்சிபெற்றவறிஞனெல்விரிந்தறிந்தே
வெய்யகோபத்தினோடுவிரிசிறையெகினமேறி
னையுநெஞ்சகத்தினாலந்நரமிருகந்தான் பூசை
செய்யுமவ்வேலை தன்னிற்றிசைமுகன் கடுகிவந்தான். ()

அங்குநாமினிதிறைஞ்சுமாத்துமலிங்கந்தன்னை
யிங்குநீகரந்துவந்ததென்கொலோவெனவியம்பிப்
பொங்குகோபத்தினோடுபுருடமாமிருகந்தன்னை
வெங்கயந்தன்னைக்கண்டவிறற்சிங்கமெனவெதிர்ந்தான். ()

வேறு

அடலொடுபொருதிடுமவனெதிரடைசிப்
புடைவளைகடல்பயில்புவிமிகவதிரப்
படைகொடுமுனையுகிர்பலகொடுமுடுகித்
திடமொடுபொருததுதிறனரமிருகம் (ககசு)

குனைகடலொடுகடல்குழுறியதெனநீள்
வரையொடுசெருவியவரையெனவரைசூழ்
தரைமிசைபுயவலிதருமெனமிகவே
யிருவருமியலுடனெதிரெதிர்பொருதார். (ககஎ)

தவலருமடல்பெறுசதுமுகனுடனே
சிவனருள்கருதியதிறனரமிருகங்
கவலைகொண்மனமொடுகவசமதறவே
யவனியிலிகலொடுமமர்பொருமளவில். (ககஅ)

ந்சியிரேடைசியெதிரறைதருமளவிற்
றிசைதிசைதொறுமெழுதெறுகனலெனவே
வசைதருகணையெதிர்வருகணைவிலகப்
பொசிதருகுருதிகொள்புயமொடுபொருதார். (ககசு)

வேறு

தான்றனதடியவன்றனக்கிரங்கியாங்
கூன்றியவயனிகலொழித்தல்வேண்டியே
வான்றிகழ்கதிர்மணிவயிரத்தூணிடைத்
தோன்றினன்மான்மழுதோன்றுசெங்கையான். (கஉ0)

வேறு

திருந்துமன்பொடுவணங்குந்திசைமுகன்றன்னைநோக்கிப்
பொருந்தியவருந்தவத்தாற்புருடமாமிருகருற்ற
வருந்துதல்கண்டியாமேவந்தனமதனையோரா
தருஞ்சமர்புரிவதென்னென்றறைந்தனனகிலநாதன். ()

உத்தமமகிமையாலேயுன்பதிதனிலும்போத
வித்தலநமக்கன்பாகியிருத்தலாலிருந்தோர்நீயும்
வைத்தபேரன்பானும்வந்தெமைப்பணிவாயென்றே
யத்தனங்கருளிச்செய்யவயன்விடைபெற்றகன்றான். (கஉஉ)

நான்முகனகன்றதற்பினரமிருகந்தாண்கங்கைக்
கூன்முகவிளவெண்டிங்கட்கொண்டவேணியனைக்கண்டே

கான்முகமகிழ்ச்சியெய்தித்தரைமிசைக்கரங்குவித்தே [ர்.
தென்முகம்பொழிவதென்னச்செஞ்சொலாற்றுதிக்கலுற்றா

அருமையாயிருந்துமன்பரானவர்க்கெளியாய்போற்றி
பெருமையாலடியேன்செய்தபிழைபலபொறுப்பாய்போற்றி
புரிமையாயுலகுக்கெல்லாமுயிரெனநின்றாய்போற்றி
தரும்மாமழுவைவாழுந்தாணுவேபோற்றிபோற்றி. (௧௨௪)

வெங்கராவடர்த்தமாயன்வேதனுக்கரியாய்போற்றி
துங்கராவணன்வெற்பேந்துந்தோள்வலியடர்த்தாய்போற்றி
பொங்கராவதனைமிக்கபூணெனவணிந்தாய்போற்றி
சங்கராபோற்றியென்றேதாணுவைப்போற்றிநின்றார். ( )

நாயகன்றனையிவ்வாறுநரமிருகர்தாம்போற்றச்
சேயதாமரைநேர்கையாற்றிருவுளமகிழ்ந்தணைத்தே
வாயுவுமியாவராலுமடர்க்கொணாவலியுந்தம்பா
னையமுந்தந்தோமென்றேநீங்கினனிலாவணிந்தோன். ( )

பொருமலையனையதிண்டோட்புருடமாமிருகர்தாமுங்
கருமலையனையவேங்கைக்கடகளிற்றினையடர்த்த
மருமலைவேணியாற்குமகிழ்ந்தினிதுறைபொற்கோயி
றிருமலையம்பொன்வேய்ந்தசிகரகோபுரமுஞ்செய்தார். ( )

புலர்வதன்முன்னெழுந்துபுனற்சிவகங்கைமூழ்கி
மலமகல்விபூதிநானமானதநானஞ்செய்து

குலவரையனைத்துஞ்சென்றுகோட்டுப்பூமுதலாயுள்ள
பலமலர்தெரிந்தெடுத்துப்பழுதறக்கொண்டுபோந்தே. ()

மற்றிணையிலாதபொன்னிமஞ்சனம்வடித்தெடுத்துத்
துற்றநல்லிண்டைமாலைதொடைபலதொடுத்துச்சேர்த்துக்
குற்றமிறிருமேற்பூச்சுக்குறைவினைவேத்தியங்க
ளுற்றபூசனைக்குவேண்டுமுபகரணமுமமைத்தே. (௧௨௯)

அருக்கியந்துவாரபூசையைம்பூதசுத்திசெய்து
திருக்கரநியாசம்பண்ணிச்சிந்தையாங்கமலந்தன்னி
லிருத்தியசோதிலிங்கமியன்மனோபாவத்தான
மருக்கமழ்மலர்களாதிவகுத்தினிதிறைஞ்சியேத்தி. (௧௩௦)

துகளறவிவ்வாறுகச்சுத்தியினடைவியற்றிப்
புகலறுதானசுத்திபுரிந்தபின்விசேடமாகத
திகடருமருக்கியத்தாற்றிரவியசுத்தியாக்கி
வகையுறநாதாந்தஞ்சேர்மந்திரசுத்திசெய்தே. (௧௩௧)

ஐந்துகவ்வியத்தினாலுமருங்கனிகருப்பஞ்சாறு
முந்துசர்க்கரைசெழுந்தேன்மொய்ம்புளவிளநீராலுஞ்
சந்தனக்குழம்பினாலுஞ்சங்கதீர்த்தத்தினாலுஞ்
சிந்தைகூரிலிங்கசுத்திதிருந்தவேசெய்ததற்பின். (௧௩௨)

ஐந்துபூதங்களாதியடைவினிற்குடிலையீறா
மந்திரவாகனத்தின்மத்தனையாவாகித்துப்

ாபந் துகின் மணிப்பூண் சாந்துபரிமளத்தொடைகள் சாத்தி
ழந் திவலபோகாங்கமுறையினிற்பூசைசெய்தே. (௧௩௩)

ண் ணுநைவேத்தியாதிநாதனுக்கினிதமைத்தே
ண்ணிலையன்பினாலுபசாரமீரெட்டாலும்
ண்ணியசெபத்தினாலும்பரவியதுதிகளாலும்
ண்ணியன்றனக்குமிக்கபூசனைவிதம்புரிந்தே. (௧௩௪)

வேறு.

ஞ்சொல்கூரநூறாயிரமாண்டுதான்
ஞ்சமேவிவிடைகொண்டுபோந்தருந்
ஞ்சமேன்மைதருமாடகேசன்வாழ்
ஞ்சகிலமலையிடைமேயினார் (௧௩௫)

வேறு.

ண்டமிழ்ப்புகழ்வீறுந்தருமபுத்திரன்வேள்விக்குப்
ண்டரீகத்தின்மிக்கபுருடமாமிருகர்தம்மைக்
ாண்டுவந்திடவேவேண்டிக்கோதிலாவீமன்றானு
ண்டலமனைத்தும்போற்றுமழுவையம்பதிவந்துற்றான். ()

வேறு.

ழுமால்வரைநேர்புயவீமனெம்பிரானைத்தொழுதேத்தி
ழவாபுரியாயடியேற்குவழிக்குத்துணையாய்வருகவெனத்
ாழுதேவிடைகொண்டவனருளாற்றொலையாவழியுந்தொ

லைத்தேறித், தழல்சேர்புருடாமிருகருறைதடஞ்சேர்வெற்
பினிடஞ்சேர்ந்தான், (௩௩௭)

விரைவிற்றண்டாயுதத்தினுடன்வெற்பிற்போந்தவிறல்வீமன்
நரமாமிருகர்தமைக்கண்டுநெடுங்காதேதஇன் றடுங்கோபத் [ப்
திரமாகண்டீரவத்தொடுபோர்செயவந்திடுவெங்கயமென்ன
பொரவாவென்றானங்கவர்தம்பூசைவேளைதனிற்போந்தே.

கடிமாமலர்கொண்டரன்பாதங்கருதிப்போற்றுங்கருத்ததி
னுன், முடியால்வணங்கிச்சிவபூசைமுடித்துப்பொரவந்திடு
முன்னே, கொடிதாம்புருடமிருகர்தமைக்கொண்டேகுவ
தோர்குறிப்பெண்ணிப், படிமேற்றண்டாயுதமுதவிப்பணி
ந்தேதின்றான்பகைவீமன் (௩௩௯)

வேறு.

அன்னவன்செய்கைகண்டேயவனையம்மிருகர்நோக்கி
முன்னநீபொரவாவென்றுமொழிந்தனையெனையிப்போது
நின்னையான்பொரவந்தெய்தநிராயுதனாகிநின்று
மென்னையோவென்னவீமனெதிர்மொழிபுகலலுற்றான். ()

ஒன்றியபதவேகத்தினேடுவனியானிங்கென்னை
மன்றல்சேர்சோலைசூழுமழுவையம்பதிகடந்து
சென்றிடுமுன்னங்கிட்டிச்செறிந்தெனைப்பிடிப்பாயாகில்
வென்றனையென்றேயோடவிரைந்தனன்வீமசேனன். ()

ரத்தியம்மிருகர்வந்துதொடுமுன்னம்வயிரத்தூணைக்
கருத்துறுபோதணைந்துகாண்டகுமிலிங்கமாகத்
கிருத்தகுமவ்விலிங்கந்தெரிசித்துமிருகர்தாமங்
கருச்சனைமுடிக்குமுன்னமவனுமங்ககலலுற்றான் (கசஉ)

தெற்றெனமழுவைதன்னிற்சென்றொருபதத்தைவைத்தாங்
குற்றபூந்துருத்திதன்னிலொருபதந்தன்னைவைத்தே
வெற்றிசெய்திடுவேனென்றவீமனைக்குறுகிவந்து
பற்றியேபின்னர்வைத்தபதந்தனைப்பிடித்தபோதில். ()

ங்கியான்வென்றேனென்றேயிகனரமிருகர்கூறப்
பாங்குறுமழுவைதன்னிற்பயிலுமுன்பிடியாதவ்வூர்
நீங்கியவெனைப்பிடித்தனீதியோவென்னவீமன்
றங்கள்சொல்வழக்குத்தீரத்தருமபுத்திரர்முன்சென்றார். ()

சொற்றவங்கவர்சொற்கேட்டுச்சொன்னவெல்லையினீர்சென்று, பற்றினிரொருதாள்வீமன்பதமொன்றுபெயர்த்து
வைத்தா, னுற்றவிவ்வழக்கினாலேயொருபதமுமதேயென்று
குற்றமின்மொழியினாலேகூறினன்றருமமிக்கான். (கசரு)

பயந்திடவவன்மொழிந்தநடுநிலைமொழியைக்கேட்டே
யுயர்ந்தருவலிமைபெற்றபுருடமாமிருகர்தாமு
மியைந்திடுவாரமின்றியிசைத்தனைவழக்கையென்று
வியந்திடுமகிழ்ச்சியாலேவிடுத்தனர்வீமன்றன்னை. (கசசா)

மாதுபருயத்திடாமல்வழித்துணையாகத்தன்னைப்
பாதுகாத்தினிதளிக்கும்பசும்பொன்முத்தினைவணங்கற்
காதரவுளத்திற்பொங்கவருஞ்சமர்கடந்துவென்றிப்
போதணிபுயங்கொள்வீமன்போந்தனன்மழுவைதன்னில்.

வேறு.

நிறைசிவகங்கையினீரின்மூழ்கியே
மறைபலபோற்றியவயிரத்தூணரைக்
குறைவறுநறுமலர்கொண்டிறைஞ்சியே
முறையினிற்பூசனைமுழுதியற்றினன். (௧௪௮)

வேறு.

வியனுறுமுலகுதன்னின்விழிபடைத்ததனுளுள்ள
பயனெலாம்பெறுவதற்குப்பணிதியின்சிறப்பினாலே
யயனுமேயன்றிமிக்கவிசித்திரமாஞ்செய்கை
மயனுமெண்ணரியசுற்றுமாளிகைதனைவகுத்தான். (௧௪௯)

வேறு.

தீர்த்தமணிசடைப்பரமன்றனக்குவைப்பாந்திருநடமாளிகைதன்னிற்சிறப்புநோக்கி, வாய்த்ததுநன்றெந்தைபிரான்றனக்குமிக்கவாய்ந்தமாளிகைப்பெருமாளென்றுநாமஞ், சாத்திமதிசாத்துசடைவயிரத்தூணர்தமைத்தெரிசித்தகமகிழ்

ந்து தன்னோர்மேன்மை, யேத்தியினிதிறைஞ்சவ்விடைமபற்று
மீளவியல்வீமன்றருமன்றன்னிடத்திற்சென்றான். (௧௫௦)

வேறு.

பொருந்தியமழுவைதன்னிற்புருடமாமிருகர்போற்ற
வரந்தரும்வயிரத்தூணார்வந்தவாறுரைத்தோமிப்பா
லருந்திறற்றிருநடஞ்செய்தன்றுமார்க்கண்டனுக்கா
வரந்தருமேன்மைதன்னுன்மழுவாடியாதல்சொல்வாம். ()

தலச்சருக்கமுற்றிற்று.

---

## இரண்டாவது
## மழுவாடிச் சருக்கம்.

---

வேய்ந்தநீள்சடைமிருகண்டன்மெய்த்தவப்பயனு
வாய்ந்தவெண்ணிரண்டாண்டுபெற்றவனிடத்துதித்தோ
னேய்ந்தசெய்கையினுலகெலாமொடுங்கமாய்ந்திடினு
மாய்ந்திடாவொருமுனியுளன்மார்க்கண்டனென்பான். (௧)

தன்னருந்தவப்பயத்தினுற்றருமனைச்சதித்தோன்
றுன்னரும்பலவுகாந்தகற்பங்களுந்தொலைத்தோன்
முன்னருந்தவமுனிவருமுடித்திடற்கரிதா
யுன்னருந்தவத்துன்னிநின்றுறுபயனுற்றான். (௨)

பெருத்தமாலயர்பெறும்பதமெண்ணிலாதனவுங்
கருத்திலின்புறுமதிசயமியாவையுங்கண்டோ
மருத்தியாகவேயண்ணலாரம்பலத்தாடு
நிருத்தமொன்றுமேகண்டிலமெனவுளநினைந்தான். (௩)

வேறு.

விடம்பயில்கண்டனாராடல்வேளையிற்
றடம்பயில்பாற்கடலாடச்சார்ந்தன
மிடம்பயில்கதிரவனெழுந்தவேளையிற்
குடம்பையினுறங்குறுங்குடிஞைபோலவே. (௪)

வேறு.

பொருந்தியவருந்தவத்தாற்புலிமுனியரவின்கோவுந்
திருந்தவம்பலத்துளண்ணறிருநடங்காணப்பெற்றார்
பெருந்தவந்தன்னிலெய்தப்பெறுதவுமுளவோவென்றே
யருந்தவங்கருத்திலுற்றானணிநடங்காண்பதற்கே. (௫)

பாரியகதிரோன்சோதிபரந்தெவ்விடத்திலேனுஞ்
சூரியகாந்தந்தன்னிற்சுடரதுதோற்றக்கண்டோங்
கூரியதவத்தின்பேறுகுறைவறக்கொடுப்பதற்கே
சீரியதலந்தானென்றுதேடுதல்வேண்டுமென்றே. (௬)

அடைவினிலாரூர்காசியம்பலந்திருக்காளத்தி
படையினிலாரஞ்சிந்துமாகாளந்திருவானைக்கா

விடைமருதருணைகாஞ்சியிவைமுதலாகக்கங்கைச்
சடையவனினிதுவாழுந்தலமெலாஞ்சஞ்சரித்தான். (௭)

போகமேவிரும்புவோர்க்குப்பொன்னகராகிச்செல்வ
மோகமேவிரும்புவோர்க்குமுழுநிதியளகையாகி
யோகமேபயின்றபேருக்குயர்சிவலோகமாகு
மாகமேவியபொன்மேடைமழுவைநன்னகரைக்கண்டான்.()

அன்னகர்தன்னிலெய்தியருஞ்சிவகங்கையென்னு
நன்னதிதன்னின்மூழ்கிநாதனூர்வயிரத்தூணர்
சன்னிதிதன்னிற்சென்றுதாழ்ந்தினிதிறைஞ்சிப்போற்றி
யுன்னியவரமனைத்துமுதவுவாய்தமியேற்கென்றே. (௯)

சடையவன்றன்னைப்பொன்னித்தடந்திரைச்செழுநீராட்டித்
தொடைநறுமலர்கள்சாத்திச்சோடசவுபசாரங்க
ளடைவினிதியற்றியேத்தியருச்சனைவிதியனைத்து
மிடையறாநேயந்தன்னிலியற்றியேமகிழ்ச்சியுற்றான். (௧0)

மேதகுமறிஞர்ஞானவிழியினுக்கன்றியெட்டா
நாதனூர்பரமானந்தநாடகந்தன்னைமிக்க
காதல்கூருனக்கண்ணுற்கண்டிடவேணுமென்னு
மாதரந்தன்னையெய்தியருந்தவம்புரியலுற்றான். (௧௧)

எண்டிசைபரவும்வேணியிளந்திங்கட்கொழுந்திறேடே
தெண்டிரைக்கங்கைதாங்குஞ்சிற்பரன்றிருநடந்தான்

கண்டிடும்பரமானந்தக்கடலமுதருந்துதற்கே
யுண்டியுமொழிந்துநின்றானுறுபசிவிளைப்பான்போல. (௧௨)

அங்கனலூன்குஞ்சூழவாயிரங்கதிர்படைத்த
பொங்கனலூடிநின்றான்புனிதனாரருளினாலே
வெங்கனல்பொருந்துநெற்றிவிழியினைப்பெறுதன்முன்னே
செங்கனல்வெம்மைதன்னைச்சீலிக்கத்தொடங்குவார்போல்.

இன்னிலைச்சாந்தியென்னுமெருவிடுத்திதயமென்னு
முன்னியநாத்தங்காலிலோங்குமெய்ஞ்ஞானமென்னு
மன்னியவிதைதெளிக்குமாமுனிமாறாமாரி
தன்னையேகுறித்துநின்றான்றவப்பயிர்விளைப்பான்போல. ( )

பருவரன்மனதிசைந்தபனிமதியொழியவுள்ளே
மருவியவண்ணல்சென்னிமதிப்புனல்வழிந்துபொங்க
விரவியவிருபுரத்துவிழிப்புனல்பொழியநின்றா
னருவினைத்தாபமென்னுமழல்வெம்மைதவிர்ப்பான்போல.

வேறு.

அருகாவோரைந்தெழுத்துரைக்குமாதரத்தளவேயல்லாது
சருகாவடிவுந்தன்மனமுஞ்சலியாதியற்றுந்தவந்தன்னிற்
பெருகாறணியுஞ்சடாமவுலிப்பெருமான்றன்னைத்திருநடத்தி
லொருகாறன்னினிறுத்துதற்கேயொருகாற்பாரிலூறநின்றான்.

வேறு.

தந்திடுங்கனிகிழங்குசருகுதண்ணீரதன்பின்
மந்தமாருதத்தைமிக்கமருந்தெனப்பசிக்கமைத்தான்
சிந்தையின்படியேமன்றுட்டிருநடங்காணப்பெற்ற
வைந்தலையரவின்பான்மையருந்தொழிலியற்றுவார்போல்.

சுத்தியாலங்கியொப்பார்சுத்தர்தங்கருணையாலே
நித்தியத்துவம்படைத்தநிலைபெறுந்தவத்தினாலே
பத்தியால்வருடங்கோடிபயிலருந்தவத்துநீங்கா
தத்தியின்மயமேயாகியாவியைக்காத்ததாகும். (௧௮)

வேறு.

நண்ணியதிருநடநாடுங்கண்களி
னுண்ணிகழ்களங்கமதொழிக்கும்வாறுபோ
லெண்ணியவருந்தவமியற்றும்வெம்மையாற்
கண்ணினுள்வெளிறியகனலின்வட்டமே. (௧௯)

வேறு.

உறங்கியேமூலாதாரத்துள்ளினுமொளிப்பநாளுந்
திறங்கிளர்சுழுனைமார்க்கந்திறந்துறச்செலுத்தவோங்கிப்
பிறங்கியகனனுனம்மாபிரமரந்திரங்கடந்தே
புறங்கிளரங்கமெங்கும்புழுங்குறப்புகுந்ததன்றே. (௨௰)

வேறு.

பெருந்தகைமுதுகினிற்பிரம்பினோங்கடி
பொருந்தியதுலகெலாம்பொருந்தும்வாறுபோ
லருந்தவனிடத்தினுண்டாகிமீதெழு
மிருந்திறலனலமுமெங்குஞ்சென்றதே. (உக)

அறைதருமவ்வனலாற்றெருணையலே
யிறையவவளித்தருளென்றுசென்றுதா
முறையிடவேண்டியேமுனிவர்தேவருங்
கறைபயில்கண்டர்தங்கயிலைசேர்ந்தனர். (உஉ)

வேறு.

கிளர்ந்தபேரறிவின்மிக்ககேண்மையோரறிவேயென்னத்
தளர்ந்திடாதோங்கிநின்றதருமத்தின்மகிழ்ச்சியென்ன
வளந்தறிந்திடுதற்கெட்டாவண்ணன்மெய்ப்புகழேயென்ன
வளர்ந்திடுங்கயிலைவெற்பின்வளஞ்சிலவிளம்பல்செய்வாம்.

தருகதிர்சிகரமேவுசந்திரகாந்தத்தூடே
வருகலையிளநிலாவின்வழிந்திடுகின்றதெண்ணீர்
பெருகலெம்பிரானிருக்கப்பெற்றவக்கிரிதானுண்ணெக்
குருகியானந்தக்கண்ணீரொழுகுதலெனவிளங்கும். (உச)

நீலமாமணியின்சாரனிறைதருபளிக்குச்சாரல்
கோலமாணிக்கச்சாரல்குதிகொளுமருவித்தெண்ணீர்

சாலவேயமுனைகங்கைதழுவியசோணையாறு
போலவேபெருகியெங்கும்புடைபரந்தோடுமோதோ. (௨௫)

வேறு.

ரீறியன்முழவுறுபெருமுழக்குடன்
வீறியகயிலையோன்விடைமுழங்கவே
சேறியமுகிலெனச்செய்யவேளினி
தேறியபுள்ளுமங்கெதிர்நடிக்குமால். (௨௬)

குறைந்திடாவிழவெனக்கோடுகுங்குமஞ்
செறிந்திடுகவரிவால்சிறந்தசந்தகி
லுறைந்திடுசோலைகளோங்குபல்பொரு
ணிறைந்திடுமாவணநிகரதாகுமால். (௨௭)

நுகர்தருகனியெனநோக்கியோர்கவி
பகலவன்றன்னெதிர்பாய்தல்காட்டல்போற்
றிகழ்கதிர்ச்செங்கதிர்சென்றுபாய்வன
விகலொடுசோலையிலெழுந்தமந்தியே. (௨௮)

வேறு.

கூர்த்தவக்கயிலைவெற்பிற்குளிர்மழைபொழிந்துதுன்றி
யார்த்தநீலமேகமமர்ந்திடுகின்றகாட்சி
யோர்த்தழும்மதமுழக்கமிசைந்திடுமிபமுரித்துப்
போர்த்திடுந்தவளமேனிப்புனிதனைப்போல்விளங்கும். (௨௯)

குகைதொறுமருவுகின்றகொடுவேங்கைகுளிர்பனிக்குட்
டகைபெறுமடிவாரத்துத்தன்னிழறன்னைக்கண்டே
பகைகொள்வெம்புலியதென்றேபாய்ந்தபோதெதிர்ந்துபாயு
மிகைதன்னைக்கண்டேமேன்மேல்வெய்யபோர் விளைக்குமன்றே.

வேறு.

கன்னியர்தோள்களாற்கடிந்தவேய்பல
மன்னியகவரிவால்வளைத்தடர்ந்தன
துன்னியவங்கவர்சுரிகுழற்குநேர்
முன்னியவெம்பகைமுடித்தல்போலுமே. (கூக)

வேறு.

மிக்கவானுறநிமிர்ந்தவிரிமலரசோகினூடே
கொக்கிறகணிமந்தாரக்கொந்தலர்குலாவுதோற்றந்
தக்கவண்டங்கடந்துதழற்பிழம்பாகிநின்ற
முக்கணன்றன்னைத்தேடமுயன்றிடுமெகினம்போலும். ()

வேறு.

பொங்கெழின்மதிகதிர்புறமிரண்டுற
வங்கதிர்பான்முகிலடர்ந்தவக்கிரி
சங்கவெண்டோடுகுண்டலம்பொற்றோடணி
மங்கைபங்காளனேர்வடிவுபோலுமே. (கூகூ)

மெத்துசிரிரவிவிண்விரவுநீடொளி
யத்தகுகங்குலினகற்றும்வெவ்விருள்

ஈத்தார் தங்கயிலையைத் தொழவகன் றிடு
பத்தர் தம்வெவ்வினைப் படலம்போலுமே. (௲௪)

வியனுறு நெடுவரைமிக்கசாரலி
னயனுறு திங்களினணிமறுத்தனை
வியனுறு தம்பினமென்றுநாடியே
முயலுடனுழுவையுமுடுகிப்பாயுமால். (௲௫)

வேறு.

கயிலையாமக்கனகிரியின் பாங்கரிற்
பயில்வயாவையும் பானிறமாதலான்
மயில்கடோற்றுவமன்னிநின்றுடலாற்
குயில்கடோற்றுவகூவுங்குரல்களால். (௲௬)

வேறு.

ஆரணன்றனதன்னமேயறிந்திடாதயர
வாரணந்தனைத்தெளிந்திடாதமரர்கோன்மயங்கச்
சீரணங்கியவுருத்திரன்மழுவிடைதேடப்
பூரணங்கொளச்சோதியேபொழிவதப்பொருப்பு. (௲௭)

துன்றுமக்கிரிச்சோதிவெண்ணீறணிந்துதயப்
பன்றியின்றிரளாங்ககன்றூழ்வரைபயில
லன்றுதேடியவாதியையனந்தமாமுருக்கொண்
டின்றுதேடுதற்கிசைந்திடுஞ்செங்கண்மாலென்ன. (௲௮)

மீதணிந்தபூஞ்சோலையினடந்திடும்விரகாற்
காதணைந்தபொற்குண்டலங்கழன்றதுகவர
மாதளங்கனிவித்தினைமருவுபூங்கோங்கின்
போதணைந்துகைவருந்துவர்பொன்னகர்மடவார். (௩௯)

வேறு.

நிலைபெறப்பயின்றுதன்னிழலிற்கின்னரர்
தொலைவில்சிற்பரன்பெருந்துதியுரைக்கவே
தலையசைத்தருங்கணீர்தருதல்போல்வன
வுலவையுற்றசைந்துதேனொழுகுசோலைகள். (௪0)

ஒண்மலர்புழுகுகொண்டுலவைபோற்றிட
வண்மைசேர்கவரிசாமரையிரட்டவே
முண்மருவியசுழன்மூங்கில்பாடவே
வெண்மலையரசுதான்வீற்றிருக்குமே. (௪௧)

ஆன்றபோதளியொழுங்கமர்ந்ததாருவிற்
கான்றிடுசூரியகாந்தச்செஞ்சுட
ரூன்றியசிகரிவேளுடலினெற்றிமேற்
றோன்றுகண்ணழல்விடுசுத்தர்போலுமே, (௪௨)

தேசுறுமரம்பையர்செய்யதாள்பட
வாசமாரசோகமென்மலர்தளுக்கியே
பாசடைமீதுறப்பரவுதேக்குட
ஞசினிகைவிரித்தலர்தல்போலுமே. (௪௩)

வேறு.

நீடியோங்கியவடிமுடியளவிடாநிலையா
லேடலர்ந்திடுமிதழிமானரவணியியலாற்
சூடுகெங்கைவெண்டிங்கள்சேர்மவுலியாற்சுருதி
தேடருமபரய்பொருளெனச்சிறந்ததச்சிலம்பு. (௪௪)

வேறு

தெருணெறிமுனிவருந்தேவரியாவருங்
கருணையங்கடறனைக்காணவேண்டியே
மருணெறியறநெறிவாசன்மேவியே
யருணெறிநந்தியோடறிக்கைசெய்தனர். (௪௫)

புந்தியோடிருகைவாய்புதைத்துநந்தியும்
வந்தனர்விண்ணவர்வணங்கவென்னவே
கந்தரவிடத்தினன்கடைக்கணேவலான்
முந்துறவவர்தமைமுன்னிருத்தினன். (௪௬)

வேறு

கின்னரர்முதலோரன்பாற்கீதத்தின்விதமேபாட
நன்னரம்பினின்வழாமனூரதரிசைபயிற்றத்
துன்னரங்கினிக்கத்தேவதுந்துபிமிகமுழங்க
வின்னரம்பையர்நடிக்கும்வேளையின்மெல்லச்சென்றே. ()

வேறு

பண்டகுமொழியுமைபங்கர்செஞ்சடைத்
துண்டவெண்பிறைநிலாச்சோதிகண்டென
வண்டர்களண்ணல்பாலணுகிச்சென்னிமேற்
கொண்டகைப்பங்கயங்குவியநின்றனர். (ருஅ)

வேறு

மிக்கதோருதயவெற்பின்விளங்கியகதிரோனென்னத்
தக்கமாமணிப்பொற்சிங்காதனத்திருந்தருளும்பொற்புஞ்
செக்கர்வானருகுதாழச்செறிந்தவெண்மேகமென்னத்
தொக்கதோர்வெண்பட்டாடைதுலங்கியமருங்குங்கண்டார்.

வளையிளங்கொடிதழைக்கும்வாமமுமணிகளார
நிரைபலநீலமாக்குநீலமாமிடறுநீங்காப் [கைத்
புனையில்செஞ்சுடிகையென்னப்போந்தகண்ணுதலுங்கந்
திரையிலாசறுவெண்டிங்கட்செம்பொன்மாமுடியுங்கண்டார்.

மொய்த்திடுவேதமென்னுமொய்யளிமுரன்றுசூழச்
சித்திரநிலத்திலம்பொற்சிலம்பெனுமெகினந்துன்னப்
பத்திசேர்நவமணிப்பொற்பதுமபீடத்தின்மீது
வைத்தமெய்ஞ்ஞானவாசவனசமெல்லடியுங்கண்டார். (ருக)

அட்டவீரட்டஞ்செய்தேயணிபெறுகணைக்காறன்னிற்
கட்டழகமைந்தவீரக்கழலுறுகவினுஞ்செவ்வி

வட்டவாண்முகமதென்னும்வனசத்தினிருமருங்கு
மிட்டீ குண்டலமாணிக்கமிளங்கதிரிரண்டெங்கண்டார். (ருஉ)

தடுத்திடுமிமைப்பிலாததமதருங்கண்களூன்றி
யடுத்தகண்ணேறுதீரவண்டர்நாயகன்பொற்றாளின்
முடித்தலைமிசையணிந்துமுழுமணிச்சோதியாலே
யெடுத்தனர்திருவாலத்தியிந்திரரிமையோரெல்லாம். (ருங)

மாகமேற்புளகஞ்செய்யவானந்தக்கண்ணீர்பொங்க
மோகமாமந்தகாரமுழுவதுநீங்கமிக்க
சோகமேதவிரநின்றுதுதித்தனர்துதிமிக்கானே. (ருச)

பழமறைதனக்கு மெட்டாப்பாதபங்கயனேபோற்றி
தொழுநினைந்திடுவோர்தங்களன்பமேதணிப்பாய்போற்றி
தழல்விழிகொண்டுவெற்றித்தனுவேளையடர்த்தாய்போற்றி
யழகியவுமையோர்பங்காவண்ணலேபோற்றிபோற்றி. (ருரு)

சகலமும்படைப்பாய்போற்றிதருமுறைகாப்பாய்போற்றி
யிகலுறவழிப்பாய்போற்றியாவையுமறைப்பாய்போற்றி
திகழவேபரமானந்தத்திருவருள்தருவாய்போற்றி
யகிலநாயகனேபோற்றியண்ணலேபோற்றிபோற்றி. (ருசா)

பொய்மையில்புகழாய்நின்னைப்புகழ்ந்திடற்கெளிதோவென்
னையமர்கண்டன்றன்னைவணங்கியிவ்வாறுபோற்றி [மே

மெய்ம்மையிலடியோமிங்குவிண்ணப்பஞ்செய்வதொன்று
செம்மைசேரருளால்வேண்டுந்திருச்செவிசாத்தவென்றார் ()

விரிகடறனிலெழுந்தவிடந்தணித்தன்றளித்தாய்
திரிபுரவசுரர்செய்ததீங்கையுந்தவிர்த்தாயன்று
வரிவிழியுமையோர்பாகாமார்க்கண்டன்றவத்திஞெங்கு
மெரிதருகனலின்வெம்மையின்றுதீர்த்தருள்வாயென்றார்.

வேறு

இன்னணமிமயவரியம்புவாசகந்
தன்னருட்டிருச்செவிசாத்தியெம்பிரா
னுன்னியநங்கருத்துங்கள்வேண்டுகோள்
முன்னிலையாகவேமுற்றிற்றென்றனன். (௫௯)

கருவுளங்கடிந்தமார்க்கண்டமாமுனி
மருவுளம்விரும்பியவரங்கொடுத்துநும்
வெருவுளநீக்குதும்விரைந்தியாமெனத்
திருவுளஞ்செய்தனன்றேவநாயகன். (௬0)

புடைபயில்கணம்பலபூதஞ்சூழ்ந்திட
வடையுலகளித்துப்பின்னளித்தமாதுட
னடைபயில்கயிலையினலம்படைத்திடும்
விடையைமேற்கொண்டனன்வேதநாயகன். (௬க)

சூட்டிய சடையின் மேற்சொரியுமாரமு
தூட்டிய தவத்தின் மாசகன் றுதேய்வுறு
நீட்டியவட்டமேயிசைந்த திங்கள்போற்
கோட்டியகொற்றவெண்குடைநிழற்றவே. (சாஉ)

பரந்தவெண்ணீற்றுப் பதத்தானனச
சுரந்தசெஞ்சடைமதிசொரிநிலாவெனத்
திருந்திடுங்கங்கையின்றிரைகடாவெனப்
பொருந்தியகவரிகள்புடையிரட்டவே. (சாங)

வேறு

தனியானைமுகன் கந்தனிவர்தத்தம்பரிமேற்கொண்டுவரக்
கனியார்மொழியாருமைபங்கன்ககனத்தவரேபுடைசூழப்
பனியார்மலர்மாமழைபொழியப்பலவந்தரதுந்துபிமுழங்க
முனியாவருள்சேரெம்பெருமான்முனிவன்றனக்குமுன்னின்றான். (சாச)

வேறு.

அருந்தவந்தன்னின்மிக்கசத்தனுகியும்
பெருந்தகைதனைத்தொழப்பெற்றவாதர
வுரந்தருமூன்றுகோலுறைத்தெழுந்தெதிர்
திருந்துகைகூப்பியேசென்றிறைஞ்சினன். (சாரு)

நடம்பெறவருந்துவோனடத்தல்கண்டபின்
குடம்பையிறருவெனக்குடிகொள்புட்களு

மிடம்பயில்பிரசமைத் திருக்குமிக்களு
முடம்பெனவகன் றனவுண்ணடுங்கியே. (௬௬)

[illegible]றறியவாமமனவநதுமமயயினைப
பற்றியேயுராஞ்சியபலவிலங்குடன்
புற்றெழுசெடிபலபொருந்துமெய்யினி
லுற்றவாளரவமுமோடலுற்றன. (௬௭)

அங்கமேபுளகமுற்றவசமெய்திடப்
பொங்கியவிழிகளிற்புனல்கொழித்திட

துங்கமாமுனிமிகத்துதிக்கலுற்றனன். (௬௮)

வேறு

பாவனைகடந்தாய்போற்றிபராபரமானாய்போற்றி
மூவருமானாய்போற்றிமுத்தியின்வித்தேபோற்றி
மேவரும்பொருளேபோற்றிவேறெனநின்றாய்போற்றி
தேவநாயகனேபோற்றிசிற்பராபோற்றிபோற்றி. (௬௯

தொண்டருக்கெளியாய்போற்றிசுருதியின்பொருளேபோ
சண்டவெங்காலன்றன்னைத்தாளினாற்றடிந்தாய்போற்றி [
கண்டகர்க்கரியாய்போற்றிகருணைவாரிதியேபோற்றி
யண்டர்நாயகனேபோற்றியண்ணலேபோற்றிபோற்றி. (எ

வேறு.

இருகையஞ்சலிசிரத்தேந்தியோடித்
தருமுனியினையனவன்போடேத்தவே
திருவுளமகிழ்ந்திளந்திங்கள்வேணியான்
மருவியசெழுந்திருவாய்மலர்ந்தனன். (எக)

உ
யிற்றைநாள்வருந்தல்கண்டியாமகிழ்ந்தனங்
கற்றமாமுனிவநீகருதுநல்வர
ைவ. (எஉ)

சிறுமையேனீங்குனைத்தெரிசனஞ்செயப்
பெறுவதிலதிகமாம்பேறுமுள்ளதோ
வறிதியீதாயினுமடியனேன்கருத்
துறுவதோராதரமுண்டென்றோதுவான். (எங)

புன்பலபோகமும்புரந்தராதியர்
மின்புரைவாழ்க்கையும்வேண்டிலேனியா
னின்பரானந்தநீணிருத்தங்கண்டுள
மின்புறவேண்டினனெனவிளம்பினன். (எச)

இன்னவாறருண்முனியியம்பக்கேட்டபின்
முன்னவன்றனதுசெம்முகச்சரோருகப்
புன்னகையாகியபுதுநிலாவெழ
வுன்னருங்கருணைகொண்டொன்றுரைத்தனன். (எரு)

வேறு.

வண்மைசேர்வசந்தமேவுவைகாசித்திங்கடன்னின் ௰
வெண்மதிநிறைவுபெற்றவிசாகமாநாளதன்னி
லுண்மைமெய்ஞ்ஞானநல்குமுயர்பதிதன்னிலுன்றன்
கண்முனேநடிப்போமென்றார்கண்கண்மூன்றுடையவண்ணல்.

தவளமாகயிலைவெற்புத்தன்னிலுந்தக்கமேன்மை
யிவளவென்றுரைக்கவொண்ணுவித்தலந்தன்னிலின்பப்
பவளவாயுமையிறேடுபோனந்தநடனங்காட்டு
மவளவுமருந்தவஞ்செய்யென்றனனண்டர்நாதன். (எஎ)

தருந்திறன்முகிலைநோக்குஞ்சாதகமென்னவிண்ணின்
விருந்துறுநிலவைநோக்கும்வியப்புறுசகோரமென்ன
வருந்தியாதரவினுலேவைகலோருகமதாக
விருந்தனனருந்தவத்தோனெம்பிரானுடனேக்கி. (எஅ)

வேறு.

இருந்தவன்மிக்கபேரின்பமெய்தவும்
பொருந்தியவாழ்க்கையோர்போகமெய்தவும்
பிரிந்திடுதுணைமையோர்பெருகுகாதலால்
வருந்தவும்வந்ததால்வசந்தகாலமே. (எகூ)

வேறு.

மாமாவிளைஞர்மணிமார்பிலுற
வாமாறுதிளைத்தவருங்குருதிக்

காமாயுதமென்னகவின்பெறவே
தேமாவினிறைந்தனசெந்தளிர்கள். (௮0)

பாகூர்மொழிமங்கையர்பைங்களபச்
சேகூர்முலைநீங்கியசிந்தையர்பால்
வாகூருமதன்படைவந்ததெனக்
கூகூவெனல்போல்வகுயிற்குரலே. (௮௧)

தளர்வேபெறநீங்கினர்தம்முயிரைக்
களவேகொளவந்திடுகாமனுட
னுளவேசெய்துலாவியவொற்றெனவே
யிளவேனிலெழுந்தனவெங்கணுமே. (௮௨)

மீனந்தருகேதனன்மெய்க்களிகூர்
பானந்தருபாடல்பயிற்றிடுமா
வானந்தநல்வீணையதாகியவா
மானந்தவனந்தொகுவண்டிசையே. (௮௩)

வேறு.

பிரிந்திடுமவர்மனம்பெருமயக்குற
விருந்திறன்மாரவேளெதிர்விடுத்திடு
மருந்துறுதுகளெனமலர்வனந்தொறும்
பொருந்துவதென்றல்சேர்பூநறுந்துகள். (௮௪)

இந்துவினிளநிலாவெதிர்கொழித்திடச்
சிந்தியவமுதத்தின்றிவலையென்னவும்

புந்திசேர்சிலைமதன்புகழுதென்னவு
முந்துமல்லிகைநிரைமுகையவிழ்ந்தன. (௮௫)

அளிப்பதோர்துணைவரையகன்றமாதர்போற்
களிப்புறுதொடுங்குவகானமாமயில்
வெளிப்படுமங்கவர்விழிகொணீரெனத்
துளிப்பனசோலைகடூயதேன்மழை. (௮௬)

ஒளிக்குமாடவருடனூடறீர்ந்தவர்
களிக்குமுன்வெண்மலர்கதம்பந்தேடவு
மளிக்குமின்புற்றன்றாரந்தேடவும்
பளிக்குவேதிகைபலபரவும்வெண்ணிலா. (௮௭)

துவரிதழ்மங்கையர்சேனைசூழ்ந்திடக்
கவரியேயிரட்டமென்கமுகின்பாளைக
ளிவர்தருமலர்ப்பொழிலிராசகந்தனி
லுவரிமாமுரசுவேளுறைந்துவாழுமே. (௮௮)

கவர்ந்தவேல்விழிச்சியர்கர்மலீலையை
யுவந்திடுமிளைஞர்மாலுரைத்தல்வேண்டுமோ
நவந்தருவசந்தனுன்ஞானயோகியர்
தவந்தருஞ்சிந்தையுந்தளர்வுகூருமேல். (௮௯)

வேறு.

இத்தருவசந்தகாலத்திடபமாமாதந்தன்னி
லுத்தமமெனமுன்னூல்வந்துறுவதற்கடுத்தநாளின்

மெய்த்திறலரக்கர்போரான்மெலிந்திடுமமரரெல்லா
மத்தர்முன்முறையிடச்சென்றடைந்தனர்கயிலைதன்னில். ()

மொய்ம்மலர்ப்பொழிந்துவிண்ணோர்முறையிடக்கேட்டமு [த்தன்
செம்மைகூர்வதனபத்மந்திருநகைநிலவரும்பக்
கைம்மழுவங்கையேந்திக்கடைக்கணித்தருளமிக்க
வம்மழுவசுரர்சேனையடர்த்துடன்மீண்டதன்றே. (௬௧)

வேறு.

திடந்தருமம்மழுச்செங்கையேந்தியே
யடர்ந்தவெம்பகைதணித்தமரர்போற்றவே
யிடந்தமாயன்வகுத்திட்டமண்ணிடை
நடந்தரனாடியந்நகரடைந்தனன். (௬௨)

கொண்டசெங்கதிரொருகோடிபோலவே
துண்டவெண்மதிநிலாச்சோதிதோன்றவே
விண்டசெந்தாமரைவிழிகளிக்கவே
கண்டனனரனைமார்க்கண்டமாமுனி. (௬௩)

வேறு,

தடவுறுமண்டத்துலவியவம்பொற்சடையாடத்
தொடரொளிபம்பிச்சுழறருகொன்றைத்தொடையாடக்
கடலமுதங்கக்கியசிறுதிங்கட்கலையாடத்
திடமுறுவெங்கட்பரசுறுசெங்கைச்சிவனாடும். (௬௪)

பிறழ்தருகங்கைத்திருநதிபொங்கிப்பெரிதாடப்
புறமுறுவெண்டிக்குறநிமிர்செம்பொற்புயமாடக்
குறைவறுமங்கத்தரியயன்முண்டக்குழையாடத்
திறலுறுவெங்கட்பரசணிசெங்கைச்சிவனுடும். (௬௫)

இகலுறுகங்கைத்திரைபொருமென்கொக்கிறகாடக்
கொகுடிநறுங்கொத்திணைதருசங்கக்குழையாடப்
பகைதருதந்தத்துளையுமிழ்நஞ்சப்பணியாடத்
திகழ்தருவெங்கட்பரசுறுசெங்கைச்சிவனுடும். (௬௬)

திருவரைசெம்பொற்புலியதளாடத்திருமார்பத்
திருள்கடிவேணிப்பிறைபொருமேனத்தெயிறுடப்
பரிபுரமாடப்பாதவிஞேதப்பதமாடத்
திருநகையாடப்பரசுறுபாணிச்சிவனுடும். (௬௭)

வேறு.

அரகரவோசைதழைத்திடவமரர்கள்பூமழைதூர்த்திட
நிரையிமையோர்கடுதித்திடநிலைதருபூமிபதைத்திட
விரிபுனல்வேலைகொதித்திடவிடமுமிழ்சேடனெளித்திட
மருவுடுராசிநடுக்குறமழுவுறுபாணிநடித்தனன். (௬௮)

இலகியகுணலைநடித்திடுமியல்கணமிருகைகள்கொட்டிட
வலகைகள்கரணமியற்றிடவடியவருயர்கதிபெற்றிட
வுலகினிலுயிர்கள்களித்திடவுறுமருவினைகளொளித்திட
மலகரிபெளளியிசைத்திடமழுவணிபரமனடித்தனன். (௬௯)

திடமுறுபிரமர்புரந்தரர்செயசெயவெனவெதிர்கும்பிட
வடவிரியதிரநெடுந்திசைமருவியவரைகள்சுழன்றிட [திட்
விடர்கெடமுனிவர்மகிழ்ந்திடவினன்மதிதிசைகள்பெயர்ந்
வடவூறுமழுவணிசங்கரனணிநடவடைவுபுரிந்தனன். ()

நந்திமுழக்கிடமத்தளநங்கைமகிழ்ச்சிபடைத்திடத்
துந்துபிமிக்கமுழக்கதுதொந்தமெனச்சதிபெற்றிட
வுந்திடசச்சபுடத்தடைவொன்றுபதக்கிரமத்தினின்
வந்துமழுப்புனைசங்கரன்மன்றினிடத்தினடித்தனன் (௧0௧)

வேறு

மணியுறுகுடமுழாவாணனெற்றிடப்
பணிலங்கண்முழக்குறப்பானுகம்பனுந்
தணிவில்பிங்கிருடிகைத்தாளமொற்றவே
யணிநடம்புரிந்தனனண்டர்நாயகன் (௧0௨)

வேறு

தும்புருநாரதர்தேசுதுதிக்கத்தூன்றியமாமறையோசை
முழக்கக்,கம்பிதசரமரைராசியிரட்டக்கந்தருவாதிகள்வீணை
யியக்கக், கிம்புருடாதிகள்கீதமிசைக்கக்கிண்கிணிதாளினி
லோசைகுயிற்றச், செம்பதவானுறுமாதர்நடிக்கச்செங்கை
கொண்மான்மழுவீசனடித்தான் (௧0௩)

வேறு

அழுந்துபேரன்பொடுமொனந்தத்தொடு
செழுந்திருவடிகளைச்செங்கைகூப்பியே

றொழுந்திறன் றோத்திரம்புரிந்துசோர்ந்துளம்
விழுந்தனனெழுந்தனன் மிக்கமாமுனி. (௧௦௪)

புண்ணியமுனிவனைப்புரிந்துநோக்கியே
பண்ணியநின்றவப்பயன்முடித்தன
மெண்ணியதேதினமெனவிசைத்தனன்
றிண்ணியமழுவணிதெய்வநாயகன். (௧௦௫)

ஈண்டவனருள்செயவிருகைகூப்பியே
யாண்டுதோறிற்றைநாளவதிதன்னினற்
றூண்டவம்புரிதலித்தலத்தியான்றொழு
வேண்டுவனென்றனன் மிக்கமாமுனி. (௧௦௬)

அருண்முனிவேண்டுகோளருள்புரிந்தியாம்
விரவுவைகாசியின்விசாகநாடொறும்
புரிதிருநடஞ்செயப்போதுமிங்கெனத்
திருவுளஞ்செய்தனன்றிரோபவித்தனன். (௧௦௭)

அந்தநாளவதிதன்னிலற்றைநாண்முதல்
வந்துமார்க்கண்டனும்வணங்கியேத்தவே
பைந்தமிழ்மழுவையம்பதிகொண்மன்றினிற்
சிந்தைகூர்திருநடஞ்செய்வனெம்பிரான். (௧௦௮)

வேறு

மருமலர்மழைகடவிவானவர்வணங்கியேத்தக்
கருமழையனையகூந்தற்கவுரிகண்டினிதுபோற்றப்

போருமழுவங்கையேந்திப்புனிதனின்றுடலாலே
பெருமழுவாடியென்னும்பெயர்பெறுமந்தமூதூர். (கoகூ)

மழுவாடிச்சருக்கமுற்றிற்று.

---

## மூன்றுவது
## சிவகங்கைச்சருக்கம்.

தெரிசித்துமார்க்கண்டன்றன்சீர்பெறப்பரசுபாணி
தரிசுத்தசிலம்பலம்பத்தாண்டவம்புரிதல்சொன்னோம்
பரிசுத்தபோதமாக்கும்பஞ்சபாதகங்கடீர்க்கும்
வரிசைக்காவேரித்தீர்த்தவளந்தனைவிளம்புவோமே. (க)

வேறு.

தயங்குசீதளநிழறருஞ்சோலைசூழ்வாச
மியங்குசீகரவசிகரந்தருமிருமருங்கு
நயங்கொடெண்டிரைக்கரங்களானவமணிகொழிக்கும்
புயங்கப்பொன்னிநன்னதியெனுமொருநதியுளதால். (உ)

ஆசினூலறிசான்றவரறிவெனவாழ்ந்துப்
பேசுநன்னெறியரசர்தம்புகழெனப்பெருகிக்
காசினன்பெரும்புலவர்தங்கவிதைபோலினிதா
யேசலற்றமாசிந்தைபோற்றண்ணளியிசையும். (ங)

மலையளித்திடும்வல்லியைப்புல்லியவன்பாற்
றலையலைத்திடுந்தண்புனறுங்கியதகையாற்
றொலைவறத்தனையடைந்தவர்வினைதொலைத்திடலாற்
கலைமதிச்சடைக்கண்ணுதலாமெனக்கதிக்கும். (௪)

மங்கவேமராமரத்துடன்மருதினையடர்த்துச்
சங்கமேபயின்றுளியைச்சேர்ந்திடுதகையாற்
பொங்குநீடுலகளந்தளிதரித்திடும்புகழாற்
றுங்கமாநதிமாயவனிகரெனத்தோன்றும். (௫)

திரளுமாமணிப்புற்புதக்கொங்கையின்சிறப்பால்
விரளவுந்தியசுழியினாற்கன்னிபோல்விளங்கும்
புரளலாகுதிமுகத்தினிற்பொருதிரைகொழிக்குந்
தரளராசியாற்பொருனைநன்னதியெனத்தயங்கும். (௬)

ஆலவேல்விழியரிவையர்குழுமிநின்றாடு
நீலவேணியாணீலவேணியுமெனநிகழுங்
காலிமேய்ந்திருகரையினுங்கவின்மடைபொழியும்
பாலினாலுயர்பாலிநன்னதியெனப்பயிலும். (௭)

ஆடன்மங்கையரணிமுலைக்குங்குமவளறு
னீடிலங்கியகுடகிரிக்காவிரிநிறத்தாற்
பாடல்வண்டிசைப்பாடலைப்பரிமளமலரின்
றேடலம்புறுசோணைநன்னதியெனத்தோன்றும். (௮)

வேறு.

நிரம்புமாசைபயின் றுகிலைபெறு
தரும்புபூமணிச்சந்தமணிபெற
வரம்பிழைத்திடமாதரைநாடியே
விரும்புகாமுகரென்னவிளங்குமால். (௯)

ஐந்திணைத்துறைமேவியணிபெறத்
தந்தபல்பொருளாற்றமிழாகியே
சிந்துபல்லவஞ்சேருந்தருப்பயின்
றுந்துகீதமுமொப்பெனத்தோன்றுமால். (௧௦)

வேறு.

நன்னதிமவுலிவேய்ந்தநாதனூர்வயிரத்தூணர்
சன்னிதிபொருந்தப்பெற்றதன்மையாற்சகத்திலுள்ள
வெந்நதிதானுமொவ்வாவியல்பெறுபொன்னியென்று
மந்நதிசிவகங்கைப்பேராயதங்கனுதிதன்னில். (௧௧)

வேறு.

அனுதினம்பிழைசெய்வார்க்குமன்புளோ
ரினிதமைந்துநன்கீட்டுதல்காட்டல்போன்
மனிதராடித்தம்வல்வினைதீர்க்கவும்
புனிதமாகியபுண்ணியநல்குமால். (௧௨)

நைவதானநரருருவங்களைத்
தொய்விலாதசுரருருவாக்கலா

லுயவதாகவுருவுதர்ந்தநம்ப
தெய்வமாமருந்தொத்ததத்தீர்த்தமே. (௧௩)

புள்ளுமேவியபுத்தருசந்துதான்
வெள்ளமீதில்விரும்பிநின்றாடினர்
கள்ளமேவியகாயத்தழுக்கல்லா
லுள்ளமேவுமழுக்குமொழிக்குமால். (௧௪)

வேறு.

செயம்பெறுகங்கையாற்றிற்செய்தருந்தருமநீதி
யியலுறுச்சுசேனனென்பானென்புதான்வந்துவிழப்
பயிலவங்கவன்றான்செய்தபாதகமனைத்துந்தீர்ந்து
கயிலைமால்வரையிற்சேர்ந்தகதைதனைக்கட்டுரைப்பாம். ( )

பலம்பெறுதருமநீதிப்பாண்டிநன்னாடுதன்னி
லிலம்படனெனும்பேர்பெற்றவிருபிறப்பாளன்றன்பா
லலம்புதொல்பாற்கடற்குளாலம்வந்துதித்ததென்னச்
சொலும்படியவனிடத்திற்றோன்றினன்சுசேனனென்பான்

வேறு.

காலனூழிக்கடுங்கனல்வெம்மையுஞ்
சீலமில்லவர்தீவினையீட்டமு
மூல்லவாணவமோகவிருட்சியு
மாலமுந்திரண்டாலன்னகாட்சியான். (௧௭)

Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
THIRUVANMIYUR MADRAS



வேறு.

வாதைசெய்யுந்தனிநச்சுமாமரமேவுளர்வமதன்னவளரும
வன்றனை, யாதரம்பெறநாலிரண்டாகியவாண்டுதன்னிலரும
றைவேதியன், நீதிலாதவுபநயனந்தனைச்செய்துவைதிகஞ்
செப்பியபான்மையா, லோதுவிக்குந்தொழில்வல்லனாகியவு
பாத்தியாயரிடத்திலுய்த்தானரோ. (௧௮)

வேறு.

பாதகவரவினுக்குப்பாலினையுதவமேமன்மேமல
வாதையேபுரியுநஞ்சம்வழங்கிடுமாறுபோல
வோதலேபுரிந்தளிக்குமுபாத்தியாரவர்தமக்குத்
தீதுசேரபகாரங்கள்செய்தனன்சுசேனனென்பான். (௧௯)

தரையினிற்றுயிலும்போதுதாளினைப்பிடித்திழுத்தும்
விரைவுடனெழுவதன்முன்வெளிப்படாதகலகின்று
முரைதருமுபாத்தியார்தாமோதுவித்திடுமிடத்திற்
புரைதருமுண்ணிறைத்தபொய்க்குழிசமைத்தும்வைப்பான்.

கைதவவச்சுசேனன்கறிபயிர்தனக்குத்தெண்ணீர்ப்
பெய்திடென்றுரைக்கின்முற்றும்பிடுங்குவன்மூலமாகச்
செய்ததிங்கென்னேயிந்தத்தீங்கெனவையிற்கூட
வைதல்கண்டடிக்கவந்தவுபாத்தியார்தமையடிப்பான். (௨௧)

வெளுத்திடக்கொடுத்தசோமன்வெவ்வேறுகிழித்தெறிந்து
மெழுத்துடன்படிப்போர்தங்களேடுகள்பலகிழித்துஞ்

செழித்திடுமகத்திலுள்ளதிரவியந்தானியங்க
ளொழித்தயல்வீடுதன்னிலுறுவிலைதனக்குவிற்றும். (உஉ)

எடுத்துவாதெண்ணீரென்றேயேவிடிற்றெண்ணீர்மொள்ளு
கடத்தினைத்தகர்த்தும்வீடுகாத்திருந்திடுகவென்னி [ங்
லுடைத்தருங்கலமனைத்துமுறியெல்லாமிறக்கியாங்கே
யடுத்திடுந்தயிர்பால்வெண்ணெயருந்தியுச்சிட்டஞ்செய்தும்.

சந்திவந்தனைகளேதுந்தான்செயாதிருந்துஞ்சந்தி
வந்தனைசெய்வோர்தம்மைவவ்வியேநகைப்பானென்றுன்
முந்தியவைதிகத்தின்முறைமைசேரொழுக்கமெல்லா
நிந்தனைசெய்தவன்றனித்தமையுரைக்கவற்றோ. (உச)

ஆனினைமேய்த்துவாவென்றறைந்திடிலதனைமிக்க
கானகந்தனிற்றுரத்திக்கைகடந்திடவகற்றிப்
போனபின்மீளவந்து புலியதுகவர்ந்ததென்றே
தீனமாமொழிகள்கூறிச்சென்னிதொட்டாணைசொல்வான் ()

உற்றிடுசிம்பத்தின்கன்றோங்கியேவளர்ந்துநாளு
முற்றவங்கதன்கசப்புமுதிர்ந்திடுமாறுபோலப்
பற்றியவிளமையென்னும்பருவம்வந்தடுத்தபோது
துற்றிடுமவிவேகங்கள்சூழ்ந்ததங்கவனிடத்தில். (உசா)

கோமளவிளமையானுங்கூறியசரசத்தானுங்
காமலீலைகள்விளைக்குங்கண்முதல்விகாரத்தாலு

மாமறையோதுவிக்குமுபாத்தியார்நங்கைதன்னை
நாமமார்சுசேனனென்பானுடொறும்வசிகரித்தான் (௨எ)

வெய்யகோபம்பொருந்தமெலிந்திடுமுளத்தனாகிப்
பையவேயவனுறங்கும்பக்குவந்தன்னிற்சென்று
கையினையுறப்பிடித்துக்கவர்ந்தனன் வலிமைதன்னால் (௨அ)

கொண்டவெங்கோபநீங்கிக்குறித்தமந்திரவாதத்தா
லண்டியேவசீகரிக்கவாடிடுமரவம்போல
மண்டியமருந்தினோடுமந்திரவசிகரத்தா
லொண்டொடிதானுநாளிலுடம்பாடுமவன்பாலுற்றாள் (௨௯)

அருத்தியேபயிலுகின்றவாங்கவனிளமைதன்னிற்
கருத்தினால்வசமேசெய்துங்காமக்கோட்டியிலுறைத்தே[ஞ்
விருத்தனாங்கிழவன்றன்பால்விருத்தமுற்றவன்பாற்செய்யு
சரித்திரவுபசாரங்கடானுநாடொறுமொழிந்தான் (௩0)

இங்கவனிளமைநீங்குமென்றவள்கருப்பந்தன்னைப்
பங்கமேபடுத்தல்கண்டுபைந்தொடிவெகுண்டுகூறச்
சங்கைதானென்றுமின்றித்தானுறக்கைப்பிடித்த
மங்கையைப்போலவந்தமடந்தையையுறப்புடைத்தான். ()

வேறு

பைந்தொடிதானவன்புடைக்கவலறக்கேட்டுப்
பன்னுறுமவன்புரிந்தபழிகளியாவும்

வந்தமுறைவிளங்கியிருசெவிகண்மூடி
வாத்தியார்தம்மிடத்தின்மாணுக்கன்று
னிந்தவவசாரங்கள்செய்யுமாறிங்
கிவற்கென்னவென்றிருகைவிரித்திரங்கி
யந்தவூரந்தணரெவரும்புறம்பதாக்கி
யாங்கவர்களிருவரையுமகற்றினர்கள். (௩௨)

உன்றனலென்னுழுக்கமுங்குன்றினேன்
றுன்றியேபயில்சுற்றமுநீங்கினே
னின்றியானிதற்கென்செய்வனென்றவள்
றின்றயர்ந்திடநீத்தயல்போந்தனன். (௩௩)

நேசமின்றியவடனைநீங்கியே
தேசமெங்குந்திரிந்துவருந்தியே
மாசிலாவொருமாநகரெய்தியே
வேசிதன்னைவிரும்பியணைந்தனன். (௩௪)

வேறு

இறப்பினுமுன்றனோடேயிறந்துமற்றிறந்துமீளப்
பிறப்பினுமுனக்கேவந்துபாரியாப்பிறப்பேனென்றால்
மறப்பதிங்குன்னையென்றன்மனுயர்நீங்கியென்றே
யுறப்பொருள்கவருமட்டுமுரைத்தவள்பசப்பலுற்றாள். ()

பரத்தினிலறிவைவைத்தபான்மையோரமைத்தவூழின்
பெருத்தமெய்வாழ்க்கைதன்னைப்பேணியேயிற்றல்போலக்

கருத்தினைப்பிறர்பால்வைத்துக்காசிடத்தாசையாலே
யருத்திசேர்கலவிமோகமளவறப்புரிதலுற்றாள். (௩௫)

முந்தவேயணைந்தபோதுமுறைபலவிகற்பங்கூறி
வந்தபோதெதிர்சென்றிங்கேவருகவென்றுரப்புல்லிக்
கொந்தலரடைக்காய்சாந்தங்கொடுத்துநல்விருந்துசெய்தே
யந்தமிலுபசாரங்களவனுடன்புரிதலுற்றாள். (௩௭)

சற்றொருகருமந்தன்னிற்றணந்தவன்மீளுங்காலை
யிற்றைநாணின்னைக்காணுதிருந்தியான்வருந்தினேனென்
றுற்றமெய்வாட்டந்தன்னொடுதிர்த்தகண்ணீருங்காட்டி
நற்றியபான்மைபோலுநாடகம்புரிதலுற்றாள். (௩௮)

காண்டகுபருத்தமீன்கள்கவர்ந்திடப்புன்மீன்கோர்த்துத்
தூண்டிலில்விடுத்தல்போலத்தொகும்பொருள்கவர்தனுடி
யீண்டியகளபமாலையிலைபிளவினிமையாக
வேண்டியவுணவுமுற்றும்விதமுறப்பணித்தலுற்றாள் (௩௯)

விழவெதிர்கோடற்கென்றும்விருந்துபசரித்தற்கென்று
முழமிகுமாடைக்கென்றுமுற்கடன்றீர்த்தற்கென்று
மழகியபூணுக்கென்றுமடிமைதான்கோடற்கென்று
மழிவசமாகுமெண்ணெய்மயிரெனப்பொருள்கவர்ந்தாள் ( )

வேறு

இதமிகப்பொருட்கீடாங்கலவியின்
விதகுயத்துக்கோலமார்மடந்தைபா

னுதவுதற்கங்குறுபொருள்வேண்டியே
பதைபதைத்துத்திரிந்தனன்பாதகன். (௬௧)

வேறு

வளைவுறுபொருள்சோதிக்குமணலொடுவழுக்குமெண்ணெ
யளவியகுத்துக்கோலோடயர்சொக்குப்பொடிமுட்குல்லா
துளைதருகன்னக்கோல்வெஞ்சுரிகைமுண்ணெரிஞ்சிமற்றுங்
களவுகொள்வதனுக்கேற்றகருவிகளனைத்துங்கொண்டே ()

சைவரேபோன்றுநான்குசாதியிலுள்ளார்போன்று
மவ்வவரிடத்திற்சென்றேயவரவர்பழகக்கூறிச்
செவ்வியநினைவுட்கொள்ளச்செறிதரும்பொருளனைத்தும்
வவ்வியேயகன்றதற்பின்மற்றொருவடிவங்கொள்வான். ()

அறத்தினல்வழிவிரும்புமரசன்றன்மனையினின்று
புறத்தினிற்றனியேபோந்தபுரோகிதனொருவனம்பொன்
னிறத்தபல்கலன்கள்பூண்டுநேர்படவாங்கவன்பா
னுறத்தெதிர்நடந்துசென்றானுழைகண்டபுலியேயென்ன ()

வேறு.

விஞ்சுநான் மறையோனு மவனைக்கண்டேமெய்நடுங்கி
யோடியேவீழ்ந்தொதுங்கிக், கெஞ்சினன்பற்காட்டிக்கரங்
குவித்துக்கேட்டதெல்லாந்தருவனெனைவிடுகவென்றே, யஞ்
சினன் பிரமகத்திவிளையாதோவென்றலறினனங்கவனையரு
ளொன்றின்றித், துஞ்சினனெனுமளவுந்தடியான்மோதிச்
சூறைகொண்டான்குண்டலமுந்துகில்கண்முற்றும். (௬௫)

வேறு.

மண்டியங்கவனைக்கொன்றுவாங்கியபொருளனைத்துங்
கொண்டுவந்தவடனக்கேகொடுத்தவளுடனேகூட
வெண்டியமனத்தனாகிவெறிதருமதுவுமூனு
முண்டியுமொருகாலத்திலுணலுற்றானுணர்விலாதான். ()

நிறைந்திடுபுனலிற்கூடநிமிர்ந்திடுங்கமலமந்நீர்
குறைந்திடும்போதுதானுங்குறுகியதோற்றம்போலச்
சிறந்திடும்பொருளுக்கீடாய்ச்செய்திடுமுபகாரங்கண்
மறந்தனள்கையிலுள்ளவான்பொருடொலையக்கண்டே. ()

வேய்தருதோளிநாளுமிக்கவனொருவன்றன்னைத்
தோய்தலுற்றவனைக்கொண்டேதுரப்பதுமல்லாற்றீல்வாய்
நாய்தனைப்போலவாசனனுகொளுவகையரற்றுந்
தாய்தனைக்கொண்டுநீத்தாள்சற்றும்வந்தணுகாவண்ணம். ()

பின்னுமாங்கவடனக்கேபெரும்பொருளுதவுதற்கு
மன்னுகல்லதரிற்சென்றுவருமவர்தீம்மைக்கோறன்
முன்னியவவனைவந்துமுனிந்ததோர்கொடியவேங்கை
யுன்னியவாறெவர்க்குமூழ்வினையிசையாதென்றே. (௪௯)

அழிந்திடுமவன்றன்னூனையருந்தியோர்கழுகுவானி
லெழுந்திடும்போதுகவ்வியெடுத்திடுமென்புநேரே
செழுந்திருமழுவைமேவுஞ்சிவகங்கைப்புனலினூடே
விழுந்ததுநரகினாடுவிழாதவனுய்வதற்கே. (௫௦)

வேறு.

கொடியன்பாலக்கணமேவந்த தூதர்குத்தென்பார்வெட்
டென்பார்கொலைசெய்தோனைப்,பிடியென்பார்பெரும்பாசக்
கயிற்றினாலே பிடித்திறுகக்கட்டென் பார்பெயர்த்துக்கைகா
லொடியென்பா ருதையென்பாரோங்கிச்சீறியுறியென்பார்த
லைமண்டையுடையவாளாற், றடியென்பார்தடிகொண்டு மே
னியெல்லாந்தகரென்பார்கொண்டகன்றார்தருமனூட்டில். ()

வேறு.

மைக்கணமனைய தூதர்மலைந்தவன் றனைக்கொண்டேகு
மக்கணந்திருவுள்ளத்திலடைந்தருங்கருணை கூரு
முக்கணன்கடைக்கணேவன்முறைசெயனுடியிற்கு
மெய்க்கணநாதர்தம்மைவிரைவுடனழைத்துரைப்பான். ()

திருந்தியசிவகங்கைக்குட்செறிந்ததென்பெனவெனுமல்
வருந்தநம்மையன்றன்னைவலியபாசத்தாற்கட்டி
யிருந்திறற்றருமன்றாதரியமபுரியேகலுற்றார்
விரைந்தவன்றன்னைச்சென்றுவிடுவித்துவருகவென்றான்.

தொடுவெங்கவசமெய்யினராய்ச்சூலஞ்சுழலவிழிசுழலக்
கடுவெங்கோபமனஞ்சுழலக்கடியவிமானந்தனிலேறி
யடுவெங்காலன்றனையடர்த்தோனடியானவனையணுகாமல்
விடுமின்விடுமினெனமுடுகிவிரைந்தேவந்தார்சிவன்றூதர். ()

வேறு.

மையுருவனைய தூதர்மடிந்திடவோங்குகின்ற
வெய்யசூலத்தாற்குத்திமீண்டிடாவகைதுரந்தே
மையனதேவலாள்களஞ்சனீயஞ்சலென்றே
கையுறவவனைக்கூடுங்கயிற்றையும்விடுவித்தார்கள். (௫௫)

கவலைகூர்தருமன்றூதர்கணநாதர்தம்மைநோக்கி
யவனியிலிவன்செய்பாவமளவிடலரிதெவர்க்குஞ்
சிவனிடத்தன்புதானுஞ்செய்திலன்சிறிதுமென்று
லிவனைநீர்விடுக்கவந்ததென்னெனவவருரைப்பார். (௫௬)

வாழ்ந்திடுவயிரத்தூணர்மழுவைசேர்சிவகங்கைக்குள்
வீழ்ந்ததிங்கிவன்றனென்புவிடுவித்தோமதனாலியாங்க
டாழ்ந்திடுங்குலத்தோரேனுந்தருஞ்சிவகங்கைதோய்ந்தோர்
சூழ்ந்தவர்தொடுவோர்தம்மைத்தொடாதகன்றிடுமினென்றார்

உரம்பயில்சிவகணங்களோங்குணர்விலாதான்றன்னை
விரும்புகற்பகப்பூமாலைவிரைகமழ்விமானத்தேற்றி
யரம்பையர்கவரிவீசவடார்ந்துகந்தருவர்பாடச்
சரம்பயில்வேகந்தன்னிற்சார்ந்தனர்கயிலைவெற்பின். (௫௮)

யகய

யருணன்வந்துதித்தபோதிலகன்றிடுமிருளேயென்ன
மருண்மலநீங்கியண்ணன்மலர்ப்பதந்தொழுதிறைஞ்சித்
தருணவேணியினோன்றன்பாற்சாரூபம்பெற்றுறைந்தான்.

இங்கிதுவன் றிமிக்கவிருந்தவத்தொருவனிட்ட
சங்கைகூர்சாபநீங்கத்தரும்பல்தீர்த்தந்தேடிப்
பொங்குதெண்டிரையுலாவும்புனற்சிவகங்கைதன்னிற்
பங்கயமடந்தையாடும்பான்மையும்பகர்தல்செய்வாம். (௯௦)

கிட்டணமுனிவனென்பான்கிளர்வடிவெங்கும்வெண்மைக்
குட்டமேபொருந்துகின்றகோலமதெதிரேகண்டு
மட்டவிழ்புண்டரீகமனையில்வாழ்திருமடந்தை
வெட்டெனநகைத்தாள்கொத்துவெண்டளவலர்ந்ததென்ன.

நன்றுநன்றெனப்பூமாதுநகைபுரிந்திகழ்ந்தபோது
வொன்றியவெமதுமேனியுற்றிடுசுவேதநோக்கி
நின்றுநீநகைத்தலாலேநீயுமிங்கெமைப்போலாக
வென்றருஞ்சாபமிட்டானிந்திரைதனைத்தவத்தோன். (௯௨)

ஆமையினுறுப்பதென்னவைம்புலனடக்குவோனுந்
தீமையில்லவளைச்சாபஞ்செய்தவக்கணமேசெய்ய
பூமியிலவளையோகும்புன்னகைபுரிந்ததென்ன
நாமயிறன்னைப்போலுநன்னிறந்தனைப்படைத்தாள். (௯௩)

வாடினளுடனதுவெண்மைவடிவுகண்டதனைத்தீர்க்க
நாடினள்வினையகற்றுநற்புனற்றீர்த்தமெங்குந்
தேடினள்மழுவைமேவுஞ்சிவகங்கைதீர்த்தங்கண்டே
யாடினள்புண்டரீகத்தாலையத்துறையுமங்கை. (௯௪)

வேறு.

பாங்குமேவியபாற்கடறன்னிடை
யோங்கியேயன் றுதித்திடுமாறுபோற்
றீங்குவெண்மைசிவகங்கைமூழ்கவே
நீங்கியாசினிறத்தோடெழுந்தனள். (சுரு)

வேறு.

பரவுந்திருநன்னதிமூழ்கிப்பாவந்தீர்ந்துபாவனமாய் [சி
மருவுந்தீர்த்தமென்பெயரான்வழங்கவேண்டுமெனவிறைஞ்
யரவிந்தமலர்த்திருமழுவையரனைப்போற்றிவரம்பெறலாற்
றிருவின்றீர்த்தமெனப்பெயருஞ்சிறந்ததந்தச்சிவகங்கை. ()

வேறு.

தேடிவந்துசிவகங்கைதண்புன
லாடுவார்பெறுமப்பயன்சொல்வதென்
கேடின்மேன்மையைக்கேட்பவர்சொல்பவர்
நாடுவோர்க்கும்பரகதிநல்குமால். (சுஎ)

சிவகங்கைச்சருக்க முற்றிற்று.

---

நான்காவது

## வைத்தியநாதச்சருக்கம்.

உயிருற்றபொய்கைநாட்டிலோங்கியமழுவைதன்னிற்
செயிருற்றவினைகடீர்க்குஞ்சிவகங்கைமகிமைசொன்றேம்

வயிரத்தூணண்ணன் மிக்கவயித்தியநாதரென்னும் [வாம்.
பெயர்பெற்றிவ்வுலகில்வீற்றும்பெரும்புகழ்விரும்பிச்சொல்

ஈட்டியவறத்தினலுமியலிசைத்திறத்தினலுங்
காட்டியவளத்தினலுங்கருணைசேருளத்தினலும்
பூட்டியவளத்தினலும்பூண்டபொன்னணிகளாலு
நாட்டினிற்புகழ்சேர்பொய்கைநாட்டியனவிலலுற்றும். (உ)

செய்கையான்மிக்கநாடுதிங்கண்மும்மாரியென்றும்
பெய்கைகுன்றுதநாடுபெருவளம்படைத்தநாடு
சைகையான்மாறனுடுதனக்கிணையானநாடு
பொய்கைநன்னதிசூழ்நாடுபுகழ்நாடுபொய்கைநாடு. (ங)

வேறு.

வெறிபொருந்துவமெல்லளிவர்க்கங்க
ணெறிபொருந்துவநீண்மணிநேர்படு
பறிபொருந்துவமீன்படுபொய்புனல்
பொறிபொருந்துவபூமடற்கஞ்சமே. (ச)

வேறு.

வயல்கடோறும்விளைப்பதவித்தையேவாயினுங்கவிளைப்பதவித்தையே, கயலடக்கவிரும்புனற்கஞ்சமேகளொருள்ளம்விரும்புனற்கஞ்சமே, யியல்பினியாவருமாண்டார்கலியையேயேதுநன்னதிமாண்டோர்கலியையே, செயலலுந்திவசங்கரத்தானமேதிசைகளெங்கணுஞ்சங்கரத்தானமே. (ரு)

வேறு.

வயல்பொருந்துவநென்மாரிவாய்ந்தபைம்
புயல்பொருந்துவபொன்மாரிபுன்மைதீர்ந்
தியல்பொருந்துவவில்லறமேயினோர்
செயல்பொருந்துவதிங்கண்மும்மாரியே. (சா)

வேறு.

வளங்கொள்பூங்கழனியின்மடையடைப்பதூந்
துளங்குகன்னியர்சிறுசோறமைப்பதுங்
குளங்களின்றடத்துமிழ்கோட்டுமுத்தமுங்
களங்கமின்றியநெடுங்கரும்பின்முத்தமும். (எ)

செய்வளையுழுபடைசெறியவாமைகண்
மெய்வகையுறுப்பெலாம்விரைந்தடக்குவ
பொய்வகைப்புலன்வழிபுகாதுசான்றவ
ரைவகைப்பொறிகளுமடக்கல்போலவே. (அ)

வேறு.

உத்தமரிடத்துத்தானமுதவுவார்போலமிக்க
வித்தினைவிளைவிடத்துவிதைத்திடவிரும்புவாரும்
சுத்தநல்விரவிவட்டந்தொலைத்திடுமிருளின்கூட்ட
மொத்துழல்கின்றதென்னமுதுபகடோச்சுவாரும். (கூ)

வேறு.

அளவியவிழிப்பகையாயகோபமோ
விளைவுறுமதன்கணையாயவெஞ்சமோ

வளவயற்கஞ்சமுமணங்கொணீலமுங்
களைவதுகடைசியர்களைகளென்னவே. (௰)

உடங்கிளர்செங்நெலினீனுங்குநெட்டிலை
யடங்கியேயுள்ளுறவமருநெற்கரு
திடங்கொளுமறிஞர்தஞ்சிந்தைமீதினி
லிடங்கொணல்லறிவினினீட்டம்போல்பவே. (கக)

நிலங்கிளர்கழனியுணின்றசாலிக
ளிலங்குபச்சுடம்புடனேர்ந்துசூலதாய்த்
துலங்கியபயோதரஞ்சுரப்பவின்றபி
நமால். (கஉ)

பண்ணமர்சொற்றரும்பழனமெங்கணுந்
ஞ்சாலிகடலைவளைந்தன
வேதனைக்காத்தளித்திடு
மண்ணிணையன்பொடுவணங்கல்போலுமே. (கங)

சொன்மலைமள்ளர்கடொகுத்தசாலியி
னென்மலையாகவேநிறைந்தபோர்பல
பொன்மலையொன்றுடன்பகைத்தபொன்னிறப்
பன்மலையடர்ந்தெழும்பான்மைபோலுமே. (கச)

கன்றெதிர்சென்றிடக்கனைக்குமேதியி
னொன்றியமடிதிறந்தொழுகுபானதி

துன்றியவயன்மடைதுறந்துகாரெறுஞ்
சென்றிடவதன்மணஞ்செறியுஞ்சாலிகள். (௧௫)

வேறு.

நிலைகொள்வானகமளந்திடநிமிர்ந்திடுமரம்பை
மலையினெட்டிலைமண்டலத்தொருபுடைமறைப்ப
வலைநெடுங்கடலுதித்திடுமாயிரங்கதிரோன்
றலையிவாவரவடர்ந்திடுங்கதிரெனத்தயங்கும். (௧௬)

வேறு.

ஏறுமாலையினிக்குநெருங்கிய
சாறரம்பையின்சாறுகுதேனுடன்
யாறுபோலப்பெருகியவனியைச்
சேறுசெய்துதிசையளறுக்குமால். (௧௭)

கரும்புதந்தகதிர்மணிமுத்தினம்
விரும்புபுன்னைவியன்பொழிறாறறிய
வரும்புதன்னொடணிபெறத்தோற்றலாற்
சுரும்பினம்பலசூழ்தரமொய்க்குமால். (௧௮)

வேறு

கருதியகேதகைக்கானமீதினின்
முருகவிழ்வெண்மலர்முகையவிழ்ந்திடக்
குருகெனவஞ்சியேகுலவுவாவியி
லருகுறுமீனினமஞ்சியோடுமால். (௧௯)

வேறு.

நறைமலர்மாலைபொற்பூண்ணவமணிமிகவும்பூணா
வறைமலர்மடவாருக்குமங்கிலாக்குறையுமேம
நிறையவேகொடுப்பதற்குநிலத்தினிவிரப்போரில்லாக்
குறையுமேயன்றிப்பொய்கைநாட்டினிற்குறையொன்றின்றே.

வேறு.

பேசுமேன்மைப்பெரும்பொய்கைநாட்டினி
னூசிலாதவணிவளங்கூறினம்
வாசநனல்வயல்சூழ்மழுவையின்
றேசுதன்னைச்சிறிதுவிளம்புவாம். (உக)

நன்னலந்தருநானிலமங்கைதன்
பொன்னிறாமிப்பொய்கைநன்னாடது
துன்னுமாமணிசூழ்ந்திடும்பல்பதி
மன்னுநாயகமாமணியிந்நகர். (உஉ)

துலங்குபல்லியங்கடேவதுந்துபியாகவெங்கு
கலந்திடுசோலையெல்லாங்கற்பகச்சோலையாக
வலங்கல்சேர்கூந்தன்மாதரரம்பையராகமிக்க
நிலங்கிளரமரர்லோகநிகரெனவிளங்குமால். (உங)

எவரெவர்தாமுஞ்செல்வத்தெண்ணருங்குபேரராக
நவநிதியவையனைத்துநாடொறுந்தழைத்துவீற

வுவமையின்வளமனைத்துமொழிவறத்தழைக்கையாலே
யவனியிற்றுலங்கவந்தவளகைமானகரேபோலும். (௨௪)

வேறு.

பூந்தலத்திருமங்கைபொருள்பல
காதலிக்குங்கருவூலமாமென
மாதிருக்குமலர்த்தவிசென்னவே
மேதினிக்குள்வியப்பவிளங்குமால். (௨௫)

மிலைந்ததண்மதிவெண்மதில்சூழ்ந்திட
வலைந்ததெண்ணீரகழ்ப்புறத்தண்டலை
பலந்தருந்திருப்பாற்கடலின்புறங்
கலந்துசூழ்ந்தகருங்கடல்போலுமே. (௨௬)

வேறு.

மைச்செறிகுழலியர்வாணெடுங்கணு
லொச்சியம்பயின்றுநீரொதுங்குங்கெண்டைகள்
கச்சணிகொங்கையின்கவின்படைத்திடும்
பச்சிளநீர்களைப்பகைத்துமோதுமால். (௨௭)

வேறு.

பணிவில்சண்பகப்பைம்மலர்மீதினி
லணிகொள்புன்னையரும்பியவெண்முகை
தணிவிலம்பொற்றனத்தியர்நாசிகை
மணிகளென்னவயங்கிவிளங்குமால். (௨௮)

வேறு.

காதியசெழுந்திரைக்கவரிவீசிடக்
கோதறுபாசடைக்குடையெடுக்கவே
தாதவிழ்தாமரைத்தவிசின்மீதினி
லோதிமம்வண்டிசைக்குளங்களிக்குமால். (உசு)

வேறு.

மகளிர்செவ்விவளந்தருநன்னதி
முகிணெடுங்கண்முகங்குழல்போல்வன
நிகழுமவாவியிறவ்செந்தாமரையுநன்
னிகழுநீலமுநீலச்சுரும்புமே. (௩0)

வேறு.

விம்முதெண்புனலகழ்விரவிச்சூழ்ந்திடு
மைம்முழுநீலமாமதிற்புறந்தவழ்
செம்முகில்வெண்முகிற்றிரளடங்கலும்
பெய்ம்முகில்வடிவெனப்பிறழத்தோன்றுமால். (௩க)

பான்மைசேர்கிரணவப்பருதிமண்டலம்
வான்மிசைநன்பகல்வயங்கித்தோன்றவே
மேன்மருவியபரிவேடவட்டமே
போன்மணியெறிந்திடும்புரிசைவட்டமே. (௩உ)

முருகுலாவுவமலர்ச்சோலைமொய்த்திடுங்
குருகுலாவுவநெடுங்குளங்கள்கோதையர்

பெருகுலாவீதியிற்பிறங்குகாமுக
ரருகுலாவுவமதனைந்துபாணமே. (௩௩)

புதியவெண்சுதைதிறம்புனையுமாடமேற்
றுதியமைமடந்தையர்வதனந்தோன்றிட
வுதயமால்வரைமிசையுதித்தபூரண
மதியமென்றலர்வனவாவிநீலமே. (௩௪)

வேறு.

வநதிரவிகளிலங்கும்வா
சந்திரகாந்தமேடைத்தளந்தொறுந்தோன்றலாலே
சுந்தரவடிவுபெற்றதோகையரினேஞர்க்கெல்லா
மந்தரமாதரென்னுமதியம்மவிளைப்பமாதோ. (௩௫)

நாளரவிந்தந்துன்றுநறும்புனல்வாவிவெம்போர்
வேளரவிந்தந்துன்றும்வீதிகள்குவிகந்தீட்டும்
வாளரவிந்தந்துன்றுமாளிகைப்புறங்கண்மாதர்
தாளரவிந்தந்துன்றுந்தமனியமேடையெல்லாம். (௩௬)

வேறு

செறித்திடுமரகதந்திகழுமேடைமே
லெறித்திடுஞ்சோதியையிளம்புலென்னவே
பறித்திடநாடுவபருதிவாசியுங்
குறித்திடுமதியினுட்குலவுமானுமே. (௩௭)

தேசுறுவரையெனத் திகழுமேடைமே
லேசுறுநவமணியெறிக்குஞ்சோதியா
லாசறுகதிரவனம்பொற்றேருறு
வாசிகள்பலபலவனங்கள்காட்டுமால். (௩அ)

துங்கமாமேடைமேற்றுணைவர்தம்முடன்
பொங்குமாதரவுறப்பொருந்துமாதரார்
கங்குலின்வருமதிக்களங்கந்தீரவே
கொங்கையிற்குங்குமச்சேறுபூசுவார். (௩௯)

அயில்விழிமடந்தையராடரங்கினிற்
பயிறருயாழொடுபாடுமின்னிசை
மயிலுறுசண்பகவனத்திற்கூவுறு
குயிலுடனெதிர்குயில்கூவல்போன்றவே. (௪0)

பொழிறொறுஞ்சுழல்வனசுரும்புபொங்குநீர்ச்
சுழிதொறுஞ்சுழல்வனதூய்நெடுங்கய
லுழிதருமாளிகையோங்குசாளர
வழிதொறுஞ்சுழல்வனமாதர்கண்களே. (௪க)

ஓங்குபொன்மாளிகையுத்திரம்பல
தாங்கியகதிர்மணித்தம்பமெங்கணு
நீங்கருந்தமதுமெய்ந்நிழலக்கன்னியர்
பாங்கியர்போலெதிர்பரிந்துலவுவார். (௪உ)

வேறு

ஒன்றுசெம்பொனலகினொதுக்கவு
முன்றிலெஞ்சியமுத்தினந்தத்தையர்
சென்றுலாவியசெந்தாளருகுறத்
துன்றுசெம்மணிக்கோலந்துலங்குமால். (௪௩)

அனுதினங்கதிராரமளந்துசெங்
கனிகள்வீதியிற்கன்னியர்கொள்ளுவார்
தனிநயந்தருந்தம்மொழிதன்னுடை
யினிமைகாணவிசைந்தனர்போலவே. (௪௪)

வேறு.

தத்தையர்தொழுந்தையலைமாதுளை
வித்தெனக்குழைமணிவிளக்கங்கண்டுதங்
கைத்தலத்தெடுத்திடக்கனிகொள்கோவையின்
கொத்தெனத்துகிர்நிரைகொத்தியெய்க்குமால். (௪௫)

வளமைசேர்மதனன்போர்மயக்கமேவிய
விளமையோர்மனமுலைந்திடுதல்காட்டல்போற்
கிளர்முலைமடந்தையர்கீதம்பாடியே
யுளமுடனொண்மணியூசலாடுவார். (௪௬)

நகில்கிளர்மடந்தையர்நறுங்குழற்கிடு
மகில்புனைதூபமீதடர்ந்துதோன்றவே
துகில்புனைகலாபமேசூழத்தோகைகண்
முகிலெனவியமுடன்முயங்கியாடுமால். (௪௭)

வேறு.

கையின் மாதர்கழங்கெறிசெம்மணி
மொய்யிலங்குமுறுவலின்முத்தமாய்ப்
பையவேயிருபார்வையினீலமாய்ச்
செய்யவாயினுற்செந்துகிராகுமால். (சஅ)

வேறு

மாகலைபயின்றிடுமகிணர்கைதொட
வாகலையெழுந்தவென்றலையதீபமேற்
பாகலைமொழிச்சியர்பாணியெற்றவு
மேகலைமணிதொறும்விளக்கின்சோதியே. (சகூ)

மண்ணமருலகெழுவகைமுடிக்கென
கென
கென
மண்ணமர்பல்லியம்பலமுழங்குமால். (ருo)

உறைவயன்மருதமாயோங்குமப்பதி
குறைவில்பொன்மேடையாற்குறிஞ்சியாகியே
பொறைமலர்ச்சோலையாற்புறவுமாகியு
நிறைபுனற்றடங்களானெய்தலாகுமே. (ருக)

வேறு

மண்ணினுக்கரிதாகியவளமெலாம்பயிலும்
புண்ணியப்பயனுகுமிப்பொன்னகர்தமது

விண்ணிடத்தினுமதிகமதாகியவியப்பாற்
கண்ணிமைத்திடாதிருந்தனர்கடவுளரேல்லாம். (ருஉ)

வேறு.

ஏகநாயகனிங்கேயிருத்தலான்
மாகர்வந்துவளம்பெறநாடலாற்
போகமுத்தியளிக்கும்புதுமையா
ளுகர்நாட்டினுமிக்கதந்நன்னகர். (ருங)

வேறு.

தாட்சிறைபிரமவர்க்கந்தன்னிடந்தோன்றுந்தக்க
னுட்சியேதருநாளஞ்சங்காரமீன்றிடுதலென்ன
மாட்சிகூர்சோதிபெற்றுவயங்குதாரகைகளென்னுங்
காட்சிசேரிருபத்தேழுகன்னியர்தம்மைப்பெற்றான். (ருச)

அங்கணவிலாதவிண்ணோராதரித்திடவுநீத்தே
பொங்குயரழகுமிக்கப்பொருந்துதண்ணனியுங்கொண்ட
பைங்களபங்கொள்கொங்கைப்பாவையர்தம்மைமுற்றுந்
திங்கடான்வேட்பதற்குச்சிந்தைகூர்ந்தினிதளித்தான். ()

வேறு.

ஓதிமநறுமலரோடையாவினுஞ்
சீதளமானதஞ்சிறத்தல்போலவே
மாதர்கள்பலரினுமருவுரோகணிக்
காதரமுற்றனனமுதமேனியான். (ருசா)

திங்களினுரோகணிதவிரமற்றுள
மங்கையர்தந்தைபால்வந்திறைஞ்சியே
திங்கடானுரோகணியிடத்திற்சிந்தையுற்
றெங்களையிகழ்ந்தனனென்றுரைத்தனர். (௫௭)

இவர்சொலத்தக்கனுங்கெய்தித்திங்களா
மவனைநீவாரமதின்றிமங்கைய
ரெவரிடந்தனினுமொத்திசைகவென்னுரை
தவறிடினுன்னையான்சபிப்பனென்றனன். (௫அ)

வேறு.

மாமனுந்தக்கன்சொன்னவார்த்தையையிகழ்ந்துமீள
நாமனுதரமேசெய்கைநன்றலவென்றிடாமற்
சோமனுங்குரோகணிக்கேதுவக்குறுமனத்தனுனன்
காமனல்வருந்துவோர்கள்கழிவரோகருமச்செய்கை. ()

வேறு.

மீளமாமனுரைவெறுத்துத்திங்கடா
ளுமேதங்களைநலக்குஞ்செய்கையைத்
தாளுறவணங்கியேதந்தைதன்னுடன்
வாளமர்விழிச்சியர்வந்துரைத்தனர். (௬0)

மைக்குழன்மங்கையர்வசனங்கேட்டபின்
மிக்கதன்னுரைதனைவெறுத்தபான்மையா
லுக்கிரமாங்கயரோகமெய்தவே
தக்கனுமவன்றனைச்சாபமிட்டனன். (௬க)

மேவலிகூர்தக்கனும்விரும்பிக்கூறவு
மூழ்வினையாலவனுரைமறுத்தலாற்
றாழ்வுறவிந்துமெய்தளர்ந்துநின்றனன்
வாழ்வரோவொருதலைவாரஞ்செய்தவர். (௩௨)

தாங்கருமுனிவினாற்சாபமிட்டபி
னாங்கவன்றனைப்பணிந்தறிவிலேன்செயுந்
தீங்கினைப்பொறுத்தருந்தீயநோயினை
யீங்கியானீங்குமாறியம்புகென்றனன். (௩௩)

பணிவொடுசந்திரன்பரவிப்போற்றவே
தணிந்திடுகோபமாந்தக்கன்மிக்கதோர்
மணிதிகழ்மழுவைவாழ்வயிரத்தூணராற்
பிணியதுதவிர்ந்திடப்பெறுதியென்றனன். (௩௪)

துயர்கெடவங்கவன்சொலவிடுத்தபின்
வயல்செறிமழுவைவாழ்வயிரத்தூணினை
யியலுடனருச்சனையியற்றிமாதவ
முயலலுற்றனனெடுமுயல்கொண்மேனியான். (௩௫)

அங்கவனனந்தநாளருந்தவஞ்செயச்
சங்கரனங்கவன்றனக்கிரங்கியே
வெங்கணநாதர்சூழ்விடையின்மேலுமை
மங்கைதன்னுடனெதிர்வந்துதோன்றினன். (௩௬)

நதியணிசெஞ்சடைநாயகன் றனை
மதியெதிர்கண்டுதன் மனமகிழ்ந்திட
விதியொடுமாதவன் வேதநாடுறுந்
துதிகடந்திடுபுகழ்துதிக்கலுற்றனன். (சுஎ)

வேறு.

எங்குமாய்நின்றாய்போற்றியென்னையாட்கொண்டாய்போ
பங்கமாமின்பதுன்பப்பற்றறுத்திடுவாய்போற்றி [ற்றி
யங்கணாபோற்றிகுன்றாவானந்தவடிவேபோற்றி
கங்கைவேணியனேபோற்றிகடவுளேபோற்றிபோற்றி. ()

உணர்வதற்கரியாய்போற்றியுயிர்க்குயிரானாய்போற்றி
குணமவைகடந்தாய்போற்றிகுணப்பெருங்குன்றேபோற்றி
யணுவினுக்கணுவேபோற்றியதுவிதுவானாய்போற்றி
யிணையிலாதவனேபோற்றியெனவெதிர்போற்றிநின்றான்.

வேறு.

நின்றவனுரைத்திடநீலகந்தர
னுன்றனதருந்தவத்துளமகிழ்ந்தன
நன்றுநீவேண்டியநல்வரத்தினை
யின்றுவேண்டிடுகவென்றினிதுரைத்தனன். (எ0)

எந்தைதானிவ்வணமினிதியம்பவே
வந்தனைபுரிந்திடுமதியுமண்ணலே

தந்திடுந்தக்கனுர்சாபமானதில்
வந்தீவிந்நோய்தனைமாற்றிடென்றனன். (எக)

மூக்கணன்றிங்களின்முதிர்தவத்துடன்
றக்கன்வெஞ்சாபமுந்தவறுறுவகைப்
புக்கதோர்பக்கமேபொலிவுகூரவோர்
பக்கமேகுறைந்திடும்பான்மைநல்கினன். (எஉ)

வியனுறுசந்திரன்வெய்யநோயினு
லயர்வுறுதளித்தலினன்றுதான்முத
னயமுறுவயித்தியநாதனென்றிடும்
பெயர்படைத்தனனிளம்பிறைகொள்வேணியான். (எங)

வேறு.

உருக்கடுக்கையினேந்தியோங்கியவயிரத்தூணர்
மருக்கமழ்மழுவைதன்னில்வயித்தியராதல்சொன்னேங்
கருத்துறுதிருமால்விந்தைகாளிவெங்கனலோன்கந்தன்
மருத்துவராருக்கன்றேவர்மாதவம்புரிதல்சொல்வாம். (எச)

வைத்தியநாதச்சருக்கமுற்றிற்று.

---

ஐந்தாவது,

## தேவாதிச்சருக்கம்.

திருமாதொருதாளிணைவருடத்திரைவாருதியின்கலைபுனைந்த
வொருமாதொருதாளிணைவருடவுகளுந்திருப்பாற்கடலூடே

தருமாயிரநீள்கணபணங்கொடையங்குமனந்தசயனத்திற்
கருமாமுகிலின்றிருவுருவக்கண்ணன்கமலக்கண்வளர்ந்தான்

விழித்தாங்கனந்த சயனத்தின் மிசையேயெழுந்துநகை
கூரு, மழைத்தாழ் குழற்றிருமாமடந்தைவதனும்புயத்தை
யெதிர்நோக்கிப், பிழைத்தாங்கவனியெனுமடந்தைப்பெய
ரேகூறியயர்வதனு, லழைத்தான்வேழமூலமெனவழைக்கச்
சென்றவடன்மாயன். (௨)

வேறு.

கரியமான்மறுபெயர்கட்டுரைக்கவே
மருவியசெந்துவர்வாய்துடித்திடப்
பொருவிழிசிவந்திடப்புருவமேற்கொளு
முருவமர்செந்திருவூடலுற்றனள். (௩)

வேறு.

மின்னேயெனதுபிழைபொறுக்கவேண்டுமெனவேவிரை
மலர்த்தாண், முன்னேவணங்குமாயனையுமுனிந்தேதணியா
முனிவெய்தி, யன்னேயிதுவுந்தகுமோவென்றடிசென்றிறை
ஞ்சியரம்பையர்கள், பின்னேதொடர்ந்துவந்திடவும்பெயர்
ந்தங்ககன்றாடிருமாது. (௪)

வேறு.

உவந்திடுமெம்மைநோக்கியுளத்தினிற்புவியையெண்ணி
நவந்தரும்பெயரெமக்குநவின்றனன்னாரணன்று
னவ்ன்றனதாகந்தன்னையகன்றிடாதணைவதற்குத்
தவம்புரிந்திடுவெலென்றுத்தலம்பலதேடலுற்றாள், (௫)

மன்னுமான் மணிமார்பெய்தமா தவம்புரிதல்வேண்டி
யன்னமென்னடையினுளுமன்னமேவடிவதாகிப்
பன்னெடும்பதிகளெல்லாம்பறந்துசென்றிறைஞ்சிமீளத்
தன்னிகராகவோங்குந்தவத்துறைதன்னிற்புக்காள். (கூ)

வேறு.

பொருகடலோசையும்பொருது பூவணை
யுரகமேல்விழிகளுமுறங்குறுமலே
மரகதமேனியான்வனசமாமயில்
விரகவேதனையினுன்மிகமெலிந்தனன். (எ)

வேறு,

மாறுகொண்டலர்மடந்தைமாதவம்புரிதல்வேண்டி
யாறணிசடையான்றன்பாலடைந்தனளறனோடெம்மை
வேறுகண்டிடதலாலேவிடுத்தெனையகன்றுளெங்கோன்
பேறரும்வல்துபாகம்பெறுவதேகருமமென்றே. (அ)

வேயினையனையதோளாண்மீளவந்தணைவதற்கும்
பாயுமால்விடையினுன்றன்பாகமேபெறுவதற்கு
மாயவன்வயிரத்தூணர்மழுவைமாநகரிலெய்தி
யாயிரங்கோடிகாலமருந்தவம்புரிதலுற்றான். (கூ)

நெடியமாலருந்தவத்தானெடிதுநாள்வருந்தக்கண்டே [க்
படிகமால்வரைமேற்றேன்றும்பவளமால்வரைதானென்ன
கடியவெள்விடைமேல்கொண்டுகவுரியோர்பாகம்வைத்த
வடிகள்பேரருளினலேயாங்கவன்றன்முன்னின்றான். (க0)

சிற்பரன்றன்னைக்கண்டேசெங்கண்மாலங்கவன்றன்
பொற்பதமுறவணங்கிப்புளகமேமெய்யரும்ப
வற்புதமகிழ்ச்சிதன்னுலானந்தக்கண்ணீர்பொங்கச்
சொற்பலவிதம்பொருந்துந்துதிகளாற்றுதிக்கலுற்றான். (௧௧)

வெங்காளகூடந்தன்னைமிடற்றினிலணிவாய்போற்றி
செங்கனன்மழுவொன்றேந்தித்திருநடஞ்செய்தாய்போற்றி
சங்கவெண்குழையாய்முக்கட்சங்கரபோற்றிநாயேற்
கிங்கனமருள்புரிந்தவீசனேபோற்றிபோற்றி. (௧௨)

புண்ணியவடிவமாயன்போற்றிநின்றெதிர்வணங்கத்
திண்ணியபுரமெரித்தோன்றிருவுளந்தனின்மகிழ்ந்தே
மண்ணினிலருந்தவத்தான்வருந்தினைமாயனேநீ
யெண்ணியவரந்தானேதிங்கியம்புவாயெனவிசைத்தான். ()

முடிநதியண்ணல்கூறமுகில்வண்ணனிருகைகூப்பிக்
கொடியிடைதனக்கோர்பாகங்கொடுத்தநீமற்றைப்பாக
மடியனேன்றனக்குநல்கியரவிந்தமலரின்வாழும்
வடிவிழியென்றுநீங்காவரமுநீதருவாயென்றான். (௧௪)

நாகமேற்றுயில்வோன்கூறநாதனுந்திருவுளத்திற்
கோகனதத்தின்மின்னைக்குறித்தபோதவள்வந்தெய்த
வாகீதென்றும்பூமாதகன்றிடாவரத்துடன்றன்
பாகமுமவனுக்கீய்ந்துபராபரன்மறைதலுற்றான். (௧௫)

பயனறிமுனிவன்மிக்கபார்க்கவனென்போனுசைத்
துயரெலாங்கடிந்தபாரத்துவசன்றன்கன்னிதன்னை
யயர்வுகூர்மூகனென்னுமரக்கன்முன்கேட்டதற்பின்
னயமுறவேதமார்க்கநன்மணம்புரிந்துகொண்டான். (௧௫)

ஓதுநூலவையனைத்துமுணர்ந்திடும்பார்க்கவன்று
னீதியால்வழங்கியோங்குநித்தியவேள்விதானு
மாதிவைதிகமார்க்கத்திலதிதிசற்காரந்தானு
மாதினோடில்லறத்தில்வழுவறப்புரியுநாளில். (௧௭)

பத்திமெய்ஞ்ஞானமேவும்பார்க்கவமுனிவனென்பான்
முத்தியேவிரும்புகின்றமுனிவர்தங்குழாத்தினோடே
மெத்தியசகம்படைத்தவேதனைத்தொழுதல்வேண்டிச்
சத்தியலோகந்தன்னிற்சார்ந்திடுவேளைதன்னில். (௧௮)

மூகனுமரக்கனந்தமொய்குழற்கிச்சைகூர்ந்து
மாகவீதினிலிறங்கிமனையினுட்போதக்கண்டே
யாகமேநடுநடுங்கியலறியவ்வணங்குதானும்
யாகசாலையினுட்போந்தாளிருகைகணெறித்திட்டஞ்சி (௧௯)

பின்னையேதுடர்ந்துசென்றுவிரும்பியான்முன்னங்கேட்ட
நின்னையேமுனிவன்வேட்கநினைந்திடுமொறுதானிங்
கென்னையென்றவளைக்கூறியாகசாலையினிலங்கி
தன்னையுமிதற்குச்சான்றுசாற்றெனவவனுரைத்தான். (௨௦)

MAHAMAHOPADHYAYA
DR U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR ... MADRAS

வேறு

பொருதலுமருந்துயர்பொருந்துசாபமே
தருதலுங்கருதலாற்றழலுமஞ்சியே
யொருதலைதுணிந்திடாதுரையொழிந்தன
னிருதலைக்கொள்ளியினெறும்புபோலவே. (உக)

வேறு

துய்யகோகனகன்பாற்செல்சுருதிமாமுனிவன்பற்றுஞ்
செய்யகோலங்கொளங்கைதீண்டியங்கவன்பிடிக்க
வையகோவென்றுநின்றேயலறவுமவளைக்கொண்டே
வெய்யகோபத்தினோடுவிரைந்தருந்தூரஞ்சென்றான். (உஉ)

கைத்தலம்பிடித்தவன்றன்ககனமார்க்கத்தினோடே
யுய்த்திடமெய்நடுக்கமுற்றிடுமடந்தைதன்பா
லத்தகுமரக்கன்றன்னையடர்த்திடுங்கணறனக்கு
வித்தெனக்கருப்பநீங்கிவீழ்ந்தனன்சிவனென்பான். (உ௩)

அடர்ந்தவக்கனலதென்னவவனியின்விழுந்தமைந்தன்
விடுஞ்சுடர்ச்சோதிதன்னின்மீதெழுங்கனலினாலே
கடுந்திறல்வாளரக்கன்கணத்தினிலெரிந்துவீழ்ந்தான்
நெடுஞ்சடையண்ணல்கண்ணுனீறெழுமதனனென்ன. (உச)

முன்மகத்தழலுமஞ்சுமுகனுமரக்கன்றானுஞ்
சொன்மிகவழுகினாலேதுகளுறத்துயரநீங்கித்
தன்மகன்றனையுங்கொண்டுசெரிகுழன்மனையிற்போந்தா
ணன்மகப்பேற்றின்மிக்கநலந்தருவனவொன்றின்றே. (உரு)

பாங்குளமுனிவன்றானும்பங்கயத்தவசின்மீதி
லோங்குநான்முகனைக்கண்டேயுன்னியவரங்களெய்தித்
தாங்கருமகிழ்ச்சிகூர்ந்துசத்தியலோகந்தன்னை
நீங்கியேகதுமெனத்தன்னெடுமனைதன்னிற்போந்தான். ()

ஆங்கவன்வரவுகண்டேயடியிணையெதிர்வணங்கி
யீங்கெழுந்தருள்கவென்றேயிசையுமாதனத்திருத்தி
யோங்குபேரன்பினாலேயுபசரித்ததற்பினந்தப்
பூங்கொடியவன்றனக்குப்புகன்றனள்வரலாறெல்லாம் (உஎ)

முசியுடன்வளரைக்குமுனிமுனிந்தனலைநோக்கி
நிசிசரன்மங்கைதன்னைநேர்ந்திடமெலிந்தபோது
வுசிதமாம்வசனமொன்றுமுரைத்திலையாதலாலே
சுசியுடனசூசிதானுந்துய்த்திடென்றுய்த்தான்சாபம். (உஅ)

ஓதியசாபந்தன்னாலுளமெலிந்தனலோன்றானு
மாதவமுனிவன்றன்னைவணங்கியேயினிதுபோற்றி
நீதருகொடியசாபநீங்குமாறருள்வாயென்ன
மேதகுமுனியிரங்கிவெங்கனறனக்குரைப்பான். (உகூ)

கல்விசேரறிஞராடுகாவேரிநதிவடக்கில்
வல்வினைப்பிணிகடீர்க்குமழுவைமாநகரந்தன்னிற்
செல்வமாம்வயிரத்தூணின்செய்யதாமரைத்தாள்போற்றிச்
சொல்விதமுளத்தடக்கித்தொழுதிடர்தொலைப்பையென்றன்

அறையுமங்கவன்சொற்கேட்டவக்கணந்தீயோன்றானு
மறையவனொடுமால்போற்றுமழுவைமாநகரிலெய்தி
நிறைபுகழ்வயிரத்தூணைநேயத்தாலருச்சித்தேத்தி
முறைமையிலாதரித்தான்முனிதருசாபந்தீர. (கூக)

நிரந்தரமருச்சித்தேத்திநின்றிடுங்கனலவன்றான்
புரிந்திடும்வயிரத்தூணின்பொருந்துபேரருளினாலே
யருந்தினுமசுசிதன்னையனுதினஞ்சுத்தனாகும்
வரந்தனையினிதுபெற்றுமகிழ்ந்துதன்பதியிற்போனான். ()

குலாவியகனகவெற்பிற்குளிர்நெடுஞ்சாரன்மீது
கலாபமாமயில்களாடுங்கற்பகச்சோலைதன்னி
லிலவிதழரம்பைமாதரேவல்செய்தினிதுபோற்ற
வுலவுபூங்கொடிபோல்விந்தையுலாவரும்வேளைதன்னில். ()

மறுகியமதவெங்கோபமகிடனாமசுரன்மிக்க
விறல்கொடோள்வலியினாலேவிண்ணுலகனைத்துஞ்சாடி
யுறுவசிதிலோத்தமாதரோவியமடவார்தம்மைக்
கறுவியேகவர்ந்துகொண்டுகனகமால்வரையிற்போந்தான்.

ஆலமார்கரியமேனியாமெனவுணருறும
னீலமானினிதானென்றேநினைந்திடுமவிவேகத்தால்
வேலுலர்வியநீண்மைக்கண்விசையமாமாதைக்கண்டே
மாலதாயுளமெலிந்தான்மகிடனாகியவரக்கன். (கூரு)

மதித்தவடன்னைநோக்கிமணமுலைதழுவவல்லா
விதத்ததோர்வசனங்கூறியிளநகைபுரிந்துசிந்தை
பதைத்திடுமெனைக்கடைக்கண்பார்த்திடலரிதேற்றாளா
லுதைத்திடப்பெறுவனேனுமுய்வன்யானெனவுரைத்தான்

என்றிவைபலவுங்கூறியிருந்துபேரிச்சைதன்னு
ளின்றவனயரக்கண்டுநீயெமக்காசைகூர்த
னன்றிநன்றென்றுசற்றேநகைபுரிந்ததிகோபத்தா
லொன்றுபல்படைகள்கைக்கொண்டேழித்தியென்னநின்றாள்

அண்டொணுவகைதான்விந்தையதிபயங்கரமாநிற்றல்
கண்டனன்மகிடன்றானுங்கடுங்கோபத்துடனெழுந்தே
சண்டவேயசுரசேனைச்சனமெலாமெதிரடர்ந்து [தார்
கொண்டதோள்வலியனைத்துங்கொடுஞ்சமர்தன்னிலுய்த்

உறையிடுகதிர்வாள்வீசியுருப்பசிமுதலாயுள்ளோர்
சிறையிடவவன்சிரத்தைச்சேதித்துப்பார்த்ததாலே
தறையிடாதுறமதித்துச்சமர்பொருமரக்கர்சேனை
குறையிடத்தருங்களத்திற்கோரைபோற்சாய்ந்தபோதில்.

அருகுறுமிரதச்சேனையரக்கனைக்கடகந்தாங்கு
மொருகையால்வானிலேற்றியோங்கியவாளான்வீசிப்
பெருகிவீழ்தருமவன்றன்பேருடற்குருதியெல்லாம்
பருகினள்கொடியவெம்போர்ப்படுத்திடுந்தாகந்தீர. (௪௰)

வேறு.

ஆயுங்கலைகளவைமுழுதுமகிலாண்டமுழுமுயிரும்பயந்த
தாயுமவன்றன்செங்குருதிதனையேயருந்துதவந்தன்னாற்
காயுமதவெங்கோபமுடன்கலகங்கருதியுலகெங்கு [டாள்.
மாயும்படிக்குநின்றடல்சேர்மலியுங்குருதிப்பதிகொண்

அதிகோபமிதற்கென்செய்கென்றவடானழுங்குமப்போது
மதில்சூழ்கமலமலர்வாவிமருவார்சோலைத்திருமழுவைப்
பதிவாழ்வயிரத்தூணைமிகப்பணிந்தேகோபந்தணிந்திடென
முதிர்வானெழுந்ததொருவசனமொழிதான்கேட்டு மகிழ்ற் [ருள்.

வேறு.

விண்பயில்வசனங்கேட்டவிந்தைதான்சிந்தைமீது
வண்புகழ்வயிரத்தூணைமழுவையின்வந்திறைஞ்சித்
தண்பயினதியிடத்திற்சரற்காலந்தனிற்றெளிந்த
தெண்புனலெனவுளத்திற்றெளிந்தனடெளியாக்கோபம். ()

ஆலங்காட்டாடுமண்ணலருந்தித்ததென்றபாதக்
கோலங்காட்டியபோதல்லாங்குழல்சாய்த்துநாணிநின்ற
சூலங்காட்டியமாகாளிதொடர்ந்துவந்தடர்ந்துநின்ற
சீலங்காட்டியவெம்பாவந்தீர்ந்தனள்மழுவைதன்னில். (௪௪)

அற்றமில்வெற்றிபூண்டவறுமுகக்கடவுடானுந்
துற்றிடுமுலகனைத்துஞ்சூரரைக்கொண்டலைத்துச்
சற்றுமன்பிலாதசிந்தைத்தாரகாசுரனைவேலாற்
செற்றிடும்வீரகத்திதீர்ந்தனன்மழுவைதன்னில். (௪௫)

அழலுறுகொடியகோபவரக்கர்வெம்போரினாலே
பழுதுறுமமரர்தம்மைப்பரிகரித்திடுதல்வேண்டி
மழுவையிலரனைத்தெய்வவயித்தியரிருவர்தாமுந்
தொழுதுசஞ்சீவனாதித்தொகைமருந்தனைத்தும்பெற்றார். ()

மன்னியகதிரோன்வெட்கமயினுடர்தேவியென்னுங்
கன்னிகையளித்தகன்னிகாயந்திடுகதிரவன்றன்
றுன்னியகிரணகோடித்துவக்கினுன்மெலிந்தவன்பாற்
றன்னிழறன்னைவைத்துச்சார்ந்தனடந்தைதன்பால். (௪௭)

அடைந்துழுதேவிவெய்யோனுயிரங்கதிர்களாலே
யிடைந்துமெய்வருந்தும்பான்மையியம்பிடக்கேட்டதந்தை
மிடைந்திடுகிரணகோடிவெம்மைகளனைத்துந்தீரக்
கடைந்தனன்கதிரோன்றன்னைக்கனலுமிழ்சாணையேற்றி. ()

மன்னியகிரணமெல்லாமழுங்கவேயழுங்கும்வெய்யோன்
றுன்னியகமலவாவிச்சோலைசூழ்மழுவையெய்திப்
பொன்னியன்மேனியானைப்பூசனைபுரிந்துபோற்றி
முன்னினுமதிகமானமொய்கதிர்ச்செங்கைபெற்றான். (௪௯)

தேவாதிச்சருக்கமுற்றிற்று.

---

## ஆறாவது
## வசிட்டச்சருக்கம்.

வையகந்தனையளந்தமாயவன்முதலாயுள்ளோர்
மெய்யுறுவரங்கள்பெற்றவிதம்பலவிளாந்துரைத்தாம்

பொய்யுரைவசிட்டன்றானும்பொருந்தியவியாதன்றானுங்
கையொடுநாவழுங்கக்காட்டியகதையுரைப்பாம். (௧)

பரந்தவாரிதிகள்சூழ்ந்தபருப்பதவேடுதன்னில்
வரைந்திடும்புகழேபெற்றமருதனும்பெருத்தமன்னன்
கரந்தவெங்கலியைநீக்கிக்காசினிதன்னிலுளும்
புரந்தனன்செங்கோலோச்சிப்புரந்தரனிவனேயென்ன. ()

கரும்பினுமினியசொல்லார்காமுறுமதவேளன்னான்
விரும்புகைவண்மைதன்னான்மிக்கமாமுகிலேயன்று
னிரும்புயவிறலின்மிக்கவிராவணன்றன்னைத்தானுந் [கான்
துரும்பெனவெண்ணும்பான்மைத்தோள்வலிதன்னின்மிக்

உயர்தருமணடயாதியுபகரணங்களெல்லா
மயர்விலாவிடத்திறுக்கியமரருமுருவுகொண்ட
வியனுறும்வியாதனந்தவேதநூன்முறைவழாம
லியலுறுசத்தந்தந்துவெனுமகிழியம்பலுற்றான். (௪)

வேறு.

அத்திரிநாரதனங்கிராவருள்
வைத்திடுசிந்தைகூர்வசிட்டன்றேவலன்
மெத்துசீர்க்கவுதமன்வியாதனேமுத
லித்தகுமுனிவரிங்கினிதிருந்தனர். (௫)

மறைநெறிவழாமலேமருதமன்னவன்
முறைதருவேள்வியின்முனிவரியாவரு

நிறைபயின்மன்னவர்நீதிவாழ்க்கையிற்
குறைவறமகிழ்புகழ்கொண்டிருந்தனன். (௬)

வேறு.

ஆதருங்கடவுடேறங்கொருமுனிவரதனென்பான்
மூதறிவதனுன்மிக்கமுனிவர்தங்குழாத்தெழுந்து
பேதமாநவக்கோளுள்ளும்பெருகொளிவினவுவான்போல்
வேதநூல்வகைதெரிந்தவியாதனைவினவலுற்றான். (௭)

சைவமேமுதலாயுள்ளசமயபேதத்தினுள்ளே
யவ்வவர்தெய்வம்வேறென்றறைதலாலதிகமான [கோ
தெய்வமேதின்னதென்றுதெளிந்திலேன்றெளிவின்மிக்
யுய்வகையயந்தீரவுள்ளவாறுரைசெயென்றான். (௮)

என்றபின்வியாதன்வேதமெவற்றினுமிக்கதெய்வ
மொன்றிலைமாயனல்லாலுண்மையீதுண்மையென்றே
மன்றினில்வலக்கைநீட்டவசிட்டருமேற்குமென்றார்
குன்றுநேரத்திகண்டகுருடர்தாங்கூறல்போல. (௯)

சிறுத்தவெண்டிங்கள்வேணிச்சிவன்பெருந்தகைமைதன்னை
மறுத்திடும்வியாதன்றெய்வமாலெனவெடுத்ததைதான்
வெறுத்தபுன்சமயமோடவென்றதுசைவமென்றே
நிறுத்தியவிசயத்தம்பநிகரெனநின்றதன்றே. (௧0)

வேறு.

பாங்குளார்பகர்ந்திடும்பாதகங்கள்கேட்
டீங்கிதுநன்றெனவியம்புவோர்களு

நீங்கருந்தீங்குறுநிலைமைகாணவே
மூங்கையாயிருந்தனன்முனிவசிட்டனும். (௧௧)

வேறு.

குறித்தவனியம்புகின்றகொடுமையைக்கேட்டபோதே
நெறித்தவெங்கனலிற்காச்சிநீட்டியநாராசத்தைச்
செறித்தெனவருத்தமெய்துஞ்செவிகளங்கையினான்மூடி
யறத்தின்மிக்கவர்நடுங்கியரகரவெனவகன்றார். (௧௨)

ஆங்கவரிருவர்தாமுமறிவிலாமையினால்வந்த
தீங்கினையாதினாலேதீர்த்திடக்கடவோமென்றே
தாங்கருந்துளக்கமெய்தித்தலைசாய்த்துப்புலம்பிச்சிந்தை
யேங்கியேநடுநடுங்கியென்செய்வோமென்றயிர்த்தார். (௧௩)

சத்தியமெனவியாதன்சாற்றொணாவசத்தியத்தாற்
கத்தியமொழியைக்கேட்டுக்கடுகடுத்துவணமேறி
மெத்தியவிவேகமில்லாவியாதன்றனறிவுதன்னைச்
சுத்தியதாக்கவந்துதோன்றினன்றுளபத்தாரான். (௧௪)

பங்கயக்கண்ணன்றன்னைப்பரிந்தெதிர்கண்டபோதே
யங்கணியிருபதங்களவனியில்வீழ்ந்திறைஞ்சிப்
பொங்கியவிழிநீர்சிந்தப்புகல்வதொன்றறியாராகி
யிங்கெமக்கருள்வாயென்றேயிருவரும்வணங்கிநின்றார். ( )

தொழுதெழுமவரைநோக்கிச்சொரிபெருங்கருணைகூர்ந்தே
யெழுபுவிமுழுதுமுண்டாலிலையினிற்றுயிலுமாயோன்

செழுமைகூர்வதனமென்னுஞ்செய்யதாமரையினூடே
யெழுகியவமுதமென்னவொருமொழியுரைக்கலுற்ருன். ()

உனக்குநாயகனதுண்மையுணர்வரிததனல்லோகந்
தனக்குநாயகனென்றென்னைச்சாற்றியதொக்குமேனு
மெனக்குநாயகன்ருன்கண்ணுவிரதிநாயகனைவிழச்
சினக்குநாயகனேயென்ருன்சிங்கநாயகனுமானன். (கஎ)

அழித்தலேயன்றியாக்கியளித்திடுமெம்பிரானை
யொழித்துநீயெம்மைத்தானேயுலகநாயகனென்றென்றே
வழுத்தல்போலுரைத்தல்செய்தாய்மற்றுமவ்வுரைதான்சா
பழித்தலேயலதெமக்குப்பரிவுளபுகழ்ச்சியன்றே. (கஅ) [லப்

துதிபுரிந்தெமக்காளாகிச்சுருதிநான்முகனெமக்கு
மதிகமாஞ்சிவனதுண்மையறிந்திடாதிகழுவோரு
மதிமுடியானுக்காளாய்நம்மையிங்கிகழுவோரு
மதிகதிருள்ளமட்டுமழுந்துவர்நரகுதன்னில். (க௯)

எவரெவர்தமக்கியற்றுமேதங்களனைத்துநீங்கச்
சிவனருள்புரியவல்லன்றீங்கினையவன்பாற்செய்யு
மவர்வினைதவிர்ப்பதற்குமாங்கவன்ருனேயன்றிப்
புவிதனிற்பிறராலெம்மாற்போக்குதற்கெளியதன்றே. (உ0)

ஆதலாலியாவராலுமகற்றெணுவினையுநீங்கித்
தீதிலாநெறியுஞ்சேர்வர்சிவனிடத்தன்புகூர்வோ

ரீதலான்மற்றென் றில்லையென்பதற்குமதுதன்பா
லோதலாலதற்கிசைந்தவுபாயமொன்றுளதிங்கென்றான். ()

திருத்தவத்துறையின்கீழ்பாற்றிருந்தியோசனையிடத்திற்
கருத்துறுகளங்கநீக்குங்காவேரிவடதடத்திற்
பொருத்தகுமழுவார்செங்கைப்புனிதனூரினிதுவாழும்
பெருத்தகுமழுவையென்றுபெயர்பெறும்பதியொன்றுண்
[டால். (உஉ)

வேறு

முந்தலம்புறுமொய்புனற்காவேரிவடபா
லெத்தலங்களுநிகரெனவியம்புதற்கரிதாய்க்
கைத்தலந்தனின்மழுவணிகடவுள்வீற்றிருக்கு
மத்தலம்பயின்றருந்தவம்புரிந்திடுமென்றான். (உங)

அடைவில்வ்வணமவன்சொலவருச்சனைவிதங்க
ளிடைதேதரன்றனக்குரியயற்றிடுமளவுந்
திடமதாகவேநாவுடன்செங்கையும்வழங்கக்
கடவதென்றுரைத்தகன்றனன்பங்கயக்கண்ணன். (உச)

மின்னலந்தருபங்கினன்வேணிமேற்றங்கும்
பன்னலந்தரும்படர்திரைப்பகீரதிமுதலாய்
நன்னலந்தருதென்புலநதியெலாங்கடந்து
பொன்னலந்தருபொன்னியங்கரைதனிற்போந்தார். (உரு)

அந்நதிக்கரையடைந்தனரங்கண்மாலன்று
சொன்னதிக்குறும்பதியிதுவாமெனத்துணிந்து

நன்னதிச்சடைநாதனூர்நலங்கொள்பொற்கோயிற்
சன்னதிக்கெதிர்பொருந்தினர்தமதுளங்களிக்க. (உ௬)

முன்னுறுஞ்சிவகங்கையம்புனலிடைமூழ்கித்
துன்னுறும்பலசிந்தையிற்றுயர்பலதொலைத்துப்
பொன்னுறுந்தனிப்புரிசைசூழ்வரிசைகூர்மழுவை
மன்னுறுந்திருக்கோயிலைக்கண்டனர்மகிழ்ந்தார். (உ௭)

வேறு

திருந்துபைங்கோங்கசோகுசெண்பகமகிழ்மந்தாரம்
பொருந்துமாதவிபலாசுபுன்னையங்கொன்றைவில்வங்
குரந்தைமல்லிகைவெண்முல்லைகரவீரம்வெட்சிபிச்சி
செருந்திபாதிரிநெருங்குந்திருநந்தவனமுங்கண்டார்.(உ௮)

தோரணம்பலநெருங்கச்சுத்தகீதங்கள்பாட
வாரணம்பலமுழக்கவாகமஞ்சிலர்பாராட்டக்
காரணந்தருபுராணக்கலைபலசிலர்விளம்ப
வாரணந்தொழுதுலாவுமடாவிழாத்தெருவுங்கண்டார்.(உ௯)

ஒன்றியகதிர்வெண்டிங்களொதுங்கவேயுயர்ச்சிபெற்றுத்
துன்றியவண்டகோளந்தொடங்கியிர்கின்றகாட்சி
யன்றரன்புரமெரிக்கவங்கையால்வளையாவம்பொற்
குன்றெனவோங்குகின்றகோபுரநிரையுங்கண்டார். (௩௦)

அரனுருவிந்துநாதவருஞ்சுடர்தன்னைத்தாங்கும்
பிரணவவடிவமென்னப்பெருந்திருக்கோயில்சூழ்ந்து

புரணமாம்வயிரத் தூணின்பொங்கொளிவளர்ந்ததென்னக்
கிரணவெண்சுதைபுனைந்தகிளர்நெடுமதிலுங்கண்டார். (௩க)

முகரவேலெறிந்துமுன்னாண்முருகவேடுளைத்தபோது
பகருறுமன்றில்வெற்பிற்பயிலிடைவெளியதென்னச்
சிகரகோபுரமீதோங்கச்செறிமணிப்புடைவனைந்த
மகரதோரணநெருங்குவாயிலுஞ்சிறப்பக்கண்டார். (௩உ)

துன்றியமுகிலினூடேதூங்குசஞ்சலமேதீர
வென்றிகொள்வரமேமேவண்டிமின்கள்வந்திறைஞ்சுமாப்போ
லொன்றியபரதமார்க்கத்துருத்திரகணிகைமாதர்
நின்றுகைக்காந்தள்காட்டுநிருத்தமண்டபமுங்கண்டார். ()

பண்டருதுதியினோடும்பாவினைவியப்பினோடுங்
கொண்டபேரன்பினோடுங்குவித்தசெங்கைகளோடு
மண்டர்களுடனெருங்கவரகரவோசையார்க்குந்
தொண்டர்கள்சூழ்ந்திறைஞ்சுஞ்சுற்றாலையழகுங்கண்டார். ()

அரும்பியமந்திரத்தோடாகமபேதமெல்லாம்
விரும்பியகிரிகைச்சைவவேதியர்மறைமுழங்கக்
கரும்பொடுதயிர்பானெய்தேன்கனிமலர்பொரியினோடுந்
தரும்பலவேள்வியாகச்சாலையின்சிறப்புங்கண்டார். (௩ரு)

அளவில்பாலமுதமென்மேலமைத்தல்கண்டண்ணலார்தங்
களமதுநீங்கியோங்குங்காளகூடமதாமென்னத்

தளர்வுறுபணிவிடைப்பேர்சமைத்திடுங்கனவின்மேன்மேல்
வளர்புகையோங்குமம்பொன்மடைப்பள்ளிச்சிறப்புங்கண்
[டார். (௩௬)

திருவலகிடுவாரெங்குந்திருமெழுக்கிடுவார்மாலை
மருமலர்தொடுப்பார்தூசில்வடித்தமஞ்சனநிறைப்பார்
தருநறுங்களபஞ்சேர்ப்பார்தளிகைசேரமுதமைப்பார்
பருவிளக்கிடுவார்தங்கள்பரபரப்பதனைக்கண்டார். (௩௭)

பூத்திரள்கொண்டுநின்றுபோற்றுவார்நகைகள்தூவிப்
பாத்திரமங்கையேந்திப்பணிமாறிநிற்பார்மிக்க
காத்திரமுறவணங்கிக்கைகொட்டிநிற்பார்கண்டு
நேத்திரங்களிப்பார்தம்மினெருக்குறுஞ்சிறப்புங்கண்டார்.

பிறைபலதணிக்குமம்பொற்பெலிபீடந்தனையிறைஞ்சி
மழவிடைதனைவணங்கிவாரணமுகம்படைத்த
வழகியபிள்ளையார்தம்மடியிணைக்கண்டுபோற்றித்
தொழுதவனனுக்கைபெற்றுச்சூழ்ந்துபொற்கோயில்புக்கார்.

ஓதுநான்மறைகளின்னுமுணர்வருமுண்மையாகி
யாதிமாலயனுந்தேடற்கரியதோர்பொருளதாகிப்
பாதிவெண்மதிபைங்கொன்றைபகிரதிமவுலிதாங்குஞ்
சோதியாம்வயிரத்தூணைத்தொழுதுபூசனைபுரிந்தார். (௪0)

மலர்கொடுவணங்கிவாய்த்தமாளிகைப்பெருமான்றன்னை
யிலகியவாளார்கண்ணியிருபதமலரிறைஞ்சி

யுலகுயிராகியேநின்றோங்கியபரசுபாணி
துலங்கியநடமும்போற்றித்தொழுதனர்தண்டிதன்னை ()

துதித்துடன்மகிழ்ந்திவ்வாறுதோழுதுடன்போந்துதொன்மை
பதிக்கொரேவிடையிற்கிழ்பாற்பர்ன்னசாலையிலிருந்து [ப்
மதித்தரன்றனதுபூசைவழிமுறையியற்றிப்பொன்னி
நதித்தடந்தன்னின்மிக்கநற்றவம்புரியலுற்றார். (௪உ)

வேறு

அருந்திடுமுணவெலாமடைவினீங்கியு
மெரிந்திடுமைங்கனலிடத்தின்மேவியும்
வருந்தியேபனிவெயின்மழையிலெய்தியும்
புரிந்தனர்நெடிதுநாட்புகலருந்தவம். (௪௩)

வேறு

இவ்வண்ணமிவர்தவத்திலிடைந்திடக்கடைந்ததுப்பிற்
செவ்வண்ணமேனியுண்ணறிருவுளந்தனிலடைந்தே
யுய்வண்ணமளிப்பதற்கேயுமையுடன்கயிலைபோலு [றார்.
மெய்வண்ணவிடைமேற்கொண்டுவெளிப்படவவர்முன்னின்

கணங்கள்பூதங்கள்சூழக்கடிமலர்மாரிசிந்த
விணங்குதுந்துபிகளார்ப்பவிந்திராதியர்கண்டேத்த
வணங்குடனென்றினின்றவண்ணலார்தம்மைக்கண்டே
வணங்கியம்முனிவர்சிந்தைமகிழ்வுடன்றுதிக்கலுற்றார். ()

ஆணவப்படலநீக்கியருள்வழிகொடுப்பாய்போற்றி
காணுமப்பொருளுங்காணுங்காட்சியுமானாய்போற்றி.

பூணதிச்சடையாய்போற்றிபுனிதநீறணிவாய்போற்றி
தாணைவந்தருவாய்போற்றிசங்கராபோற்றிபோற்றி. (௪௯)

வினையிரண்டற்றமேனிமெய்ஞ்ஞானந்தருவாய்போற்றி
தனையுயிரறிந்தபோதுதன்னையுந்தருவாய்போற்றி
அனைவுயிற்றவதரிக்குமரும்பிறப்பொழிப்பாய்போற்றி
புனைமதிச்சடையாய்போற்றிபுனிதனேபோற்றிபோற்றி.

செருப்பினாலுதையவங்கைச்சிலையினாலெறியவில்லா
லொருப்படவறையவங்கையோங்கியபிரம்பாலோச்ச
விருப்புடனிருந்தாயெங்கள்வெய்யபாதகமுமின்று
பொருப்பமரமலைபங்காபொறுத்திடவேண்டுமென்றார். ( )

ஆக்கியேயளித்தழிக்குமண்ணலேநின்னையன்றி
யூக்கியவறிவிலாதோமுரைத்தனம்பிறிதோர்தெய்வம்
வாக்கினாற்காயந்தன்னான்மனத்தினால்வந்ததீங்கை
நீக்குவாயடிமையானோநேயத்தாவெனவுரைத்தார். (௪௯)

பேணியங்கவர்நின்றேத்தும்பெருந்துதிதனிலிரங்கிச்
சேணிலாவணிந்தவண்ணறிருவுளமிகமகிழ்ந்தே
பாணியும்பெருகிமிக்கப்பகிரதிபோலவோங்கும்
வாணியுமவர்க்குமுன்போல்வழங்குதற்கருள்புரிந்தார். ( )

பொய்மைகூறுமதுதீங்குபொறுத்தனம்பொய்மையின்றி
யிம்மையுமறுமைதானுமெய்துதற்கெம்பாலன்பு

மெய்ம்மைகூர்ஞானவாழ்க்கைவீடுமிங்களித்தோமென்று
செம்மைகூர்மொழிவிளம்பிச்சிற்பரன்றிரோபவித்தான். ()

துன்பமானவைகடீரச்சொல்லுடனுவழங்க
வன்பிணியவைதவிர்த்தவயித்தியநாதன்றன்னை
முன்புசென்றினிதுபோற்றிமுனிவரரிருவர்தாமு
மன்புடன்வணங்கித்தத்தமாச்சிரமத்தடைந்தார். (ருஉ)

வசிட்டச்சருக்கமுற்றிற்று.

## ஏழாவது
## அகத்தியச்சருக்கம்.

வருந்தியவியாதனவ்வசிட்டமாமுனி
யருந்தவம்புரிந்திடுமடைவிசைத்தனம்
பொருந்தியமழுவையிற்பொதியமால்வரை
யிருந்தவனருந்தவமியற்றல்கூறுவாம். (க)

உருப்பசிதன்னுடனுவகைகூர்ந்தவள்
பொருப்பணிகொங்கையிற்போகங்கொள்ளவே
மருப்பயில்பொதியமால்வரையில்வந்தனன்
விருப்பமர்மித்திரனென்னும்விண்ணவன். (உ)

மேயவாங்கவடனைமித்திரன்கருத்
தாவலேபுரிந்திடுமந்தவேலையிற்

ருவுறுமேல்கடறழங்குமாவொலி
தேவர்தம்மடந்தைதன்செவியிற்புக்கதால். (௩)

மிக்கடல்கூரவான்மிசையெழுந்ததி
ரக்கடலோசையினதிசயத்தினு
லிக்கடல்காண்குதுமியாமிங்கென்னவே
மைக்கடல்விழியினுண்மனத்திலூற்றனள். (௪)

திருந்துமக்கடல்வளஞ்சென்றுகண்டியான்
வருந்துணைசிந்தைநீவருந்திடேலெனப்
பொருந்தமித்திரனுடன்புகன்றுமேற்றிசை
யருந்திரைக்கடற்றுறையருகுபோந்தனள். (௫)

வேறு.

கருங்கடல்காணவந்தக்காரிகையகன்றபோதே
பெருங்கடலென்னமோகம்பெருகியமித்திரன்ற
னருங்கடன்முரசம்பெற்றவனங்கவேளேந்துபாண
நெருங்கடல்புரியவிந்துநிலையதுகுலையநின்றான். (௬)

இவ்வண்ணநலிந்துநீங்கியெய்திடுமித்திரன்ற
னுய்வண்ணமின்றியேவிந்தொழிப்பதென்றெனவேயெண்
சைவமாம்பயிர்தனக்குந்தமிழுக்கும்வித்ததாகத் [ணிச்
தெய்வகும்பத்தினூடேசெலுத்தினன்விந்துதன்னை. (௭)

வேறு.

பெண்களிற்றக்கவள்பெருமகிழ்ச்சிகூர்
கண்களித்துள்ளமுங்களித்தல்கூரவே

விண்களித்திடமுரல்விளரிசெவ்வழிப்
பண்களித்திடுகடற்பான்மைகூறுவாம். (அ)

கடலுறுபரதர்மீன்கவர்தல்வேண்டியே
படவுதோறுயர்த்தகைப்பந்தநீடொளி
திடவரைகடைந்திடச்சிதறியெங்கணும்
வடவையின்சுடர்பலவயங்கல்போலுமால். (கூ)

செழுந்திரைமீதினிற்றிமிதிமிங்கில
மெழுந்துடன்வீழ்ந்திடவிரைக்குந்தெண்கடல்
கொழுந்திருவெழவரைகொண்டுவானவ
ரழுந்தவேகடைந்தநாளதிர்த்தல்போலுமே. (க0)

நிரந்தரஞ்சஞ்சலநீங்கிடாமலே
பரந்தருந்திசைதொறும்பணிகொள்வாரிதி
துரந்துவேள்கணைபொரச்சோருமித்திர
னரந்தைகூருளந்தனிலாசைபோலுமே. (கக)

பங்கமாயாவரும்பருகொணாதெனுஞ்
சங்கைகூர்வெம்பழிதவிரவோர்முனி
யங்கையாற்பருகவுண்டார்வதெண்ணியே
பொங்கியாலிப்பதுபோலுமாக்கடல். (கஉ)

தாழ்வுறுபரத்தியர்சமைத்தசிற்றிலைச்
சூழ்வுறுகடற்றிரைதொடர்ங்கழிப்பது

வாழ்வினிலாசைகொண்மனிதர்வாழ்க்கையை
யூழ்பினைபிறிதுவந்தொழித்தல்போலுமே. (கங)

தருமெழிலுருப்பசிதன்னைத்தான்பெறுந்
திருவெனக்கருதியேதிரைக்கரங்களா
லருகுறத்தழுவவந்தணைதல்போலவே
பொருதிரையுலாவுறும்புணரியோதமே. (கச)

தெள்ளுவாரிதிதனிற்றெளிபெரும்புன
லள்ளியேமீதெழுந்தடருமைமுகி
னள்ளுறப்புகுந்தமைமகாகமால்வரை
யுள்ளுறத்தெளிந்துமீதோங்கல்போலவே. (கரு)

சங்கமேவியநெடுஞ்சலதியெங்கணும்
பொங்குவெண்டிரைபலபொருதெழுந்தன
துங்கமாலரவின்மேற்றுயில்பொருந்தவே
யெங்கணுங்கவரிகளிரட்டல்போலவே. (கசா)

குரைகடலலைமணற்குன்றிலேறியே
நிரைகொள்வெண்சங்கமேனிலவெறித்திடத்
திரைகளாலொதுங்கியசெம்மணித்திரள்
விரைமலர்த்தடமிசைவெயிலெரிக்குமால். (கஎ)

அலைகெழுநெடுங்கடலதனிலெங்கணு
மலையுறவோங்கியவங்கராசிக

ஞால்கினையடர்ந்திடுமுகாந்தவெள்ளமே
னிலைகின்றபதிபலமிதத்தல்போலுமே. (கஅ)

மேவியபலவளமிக்கவேலையிற்
ருவியபுலாறனைத்தவிர்ப்பதற்கென
நாவியின்மணமொடுநலங்கொள்புன்னைக
டேவியவெண்மலர்த்துகள்பரப்புமால். (ககூ)

விலையின்மேற்பரதவர்வேலைமீதினில்
வலையினுன்மீன்பலவசிகரிப்பது
தலைமைசேர்புலமையோர்சகத்துமீதுள
கலையெலாமறிவினுற்கவர்தல்போலுமே. (உ0)

திருந்துசொற்பரத்தியர்சிறைப்புளோச்சவே
யுரந்தருதடமிசையுணங்கன்மீன்பல
துரந்திடலுருப்பசிதூயபார்வையாப்
பொருந்துகோகத்தொடும்பொருதல்போலுமே. (உக)

வாய்ந்திடுகோகமும்வளையும்பாங்குறப்
போந்தநீலோற்பலம்பொருந்துபூங்கழி
பாய்ந்திடுதிகிரிவெண்பணிலமங்கையி
லேந்தியகரியமாலெனவிளங்குமால். (உஉ)

எங்குமெய்கருகியேயெறிந்துவாய்நுரை
பொங்கியமயக்கொடுபுரடிரைக்கட

றுங்கமால்கைவரைசுழலவன்றெழும்
வெங்கனல்விடத்தினுன்மெலிதல்போலுமே. (உங)

திசைவருமுலவையாற்செறிந்தவேலைக
ளசைவுறத்தடந்தொறுமடர்ந்தநீள்பனை
மிசையெழுசெவ்வழிவிளரியாழுறு
மிசையினுற்றலையசைத்திடுதல்போலுமே. (உச)

பொருந்துநன்னதிகளாற்புனல்கொள்கொண்டலால்
விரிந்திடல்குவிவுறுமிக்கவாரிதி
யருந்திறைகவரவுமறத்தினல்கவுந்
திருந்திடுமன்னவர்செல்வம்போலுமே. (உரு)

வேறு.

புடைவளைபரவைதன்னிற்பொங்கியதிசைகளெங்குந்
தடையறவெழுந்துமீதுதாவியமகரராசி
யிடைதளருருப்பசிக்காயிடைந்திடுவருணன்றன்மேற்
படைபொரவென்றிமாரன்பதாகைகணிரைத்தல்போலும்.

சீதளநிலாவெறிக்குந்திங்கள்வான்மிசையேதோன்ற
வோதமேபெருகுவேலையுடன்றெழுந்தொலிக்கும்பான்மை
மீதெழுமதவேள்கொற்றவெண்குடைதன்னைநோக்கி
யாதரவதனுன்மிக்கவவன்முரசார்த்தல்போலும். (உள)

தாவியசலதிமோதுந்தடந்தனிலடர்ந்துவாச
மேவுபூந்துகளடர்ந்தவிரிமலர்தருமுட்டாழை

பார்வையர்க்காசைகூரும்பாய்புனற்கரசனுற்ற
தேவர்மாமயிலைக்கண்டேதிகழ்மடலேந்தல்போலும். (உஅ)

சங்கமர்கடல்களேந்துந்தரளங்கள்விரளமாகப்
பொங்கியபவளக்காட்டிற்பொருந்தியேதிருந்துகாட்சி
மங்கலநதிகடன்னைமணஞ்செயவணங்குவேலை
வெங்கனறன்னிலங்கைவெஞ்பொரியீறைத்தல்போலும். ()

வேறு.

மொய்த்திரைசலதிகண்மோதியேயெழு
மத்திரைக்கடல்வளமனைத்துநோக்கியே
சித்திரமெனுமெழிற்றெய்வமாமயின்
மித்திரனிடந்தனின்மீண்டுபோந்தனள். (௩0)

அத்திருவனையவளாங்கணேந்திட
வித்துணைவருந்தியானிருந்தயர்ந்திட
வைத்துநீயகன்றுதாமதித்ததென்னென
மித்திரனவளுடன்வெகுண்டுகூறியே. (௩க)

மண்ணினிற்புருரவாமணம்பொருந்திய
நண்ணிடமானுடநாரியாகவே
விண்ணிழிந்தேகெனவெய்யசாபமும்
பண்ணினனங்கவள்பரதவிக்கவே. (௩உ)

கோபமேபெருகியகொடியமித்திரன்
சாபபேநல்கிவான்றனையடைந்திடத்

தீபமேனிகரெழிற்றெய்வவஞ்சியப்
பாடமேதுறந்திடப்பாரடைந்தனள். (௩௩)

வேறு.

இனிமைதேர்வயாவுமின்றியீன்றிடும்வருத்தமின்றிப்
புனிதமாந்திங்கள்பத்தும்புகலின்றியொருகும்பந்தான்
றனியெழுகடலடக்கித்தமிழ்க்கடல்விரிக்கவல்ல [றே.
முனிவனைமுனிவர்க்கெல்லாமுதன்மையாய்த்தோற்றிற்றன்

வேறு.

பயிலுமக்குடத்திலுற்பவித்தமாமுனி
துயிலுறுவிண்ணவர்சூழவெற்பினின்
மயிலினைவிதிமுறைமணஞ்செய்தின்புறுங்
கயிலையாதிபன்றனைக்காணச்சென்றனன். (௩௫)

உருகுளம்பூண்டிடவுமையைவேண்டிடக்
குருபரன்றிருமணக்கோலங்கொண்டிடும்
பெருகழகெனுங்கடல்பிறங்குகண்களாற்
பருகினனலைகடற்பருகுமாமுனி. (௩௬)

கின்னரர்நாரதர்கீதம்பாடவே
நன்னலவரம்பையர்நடம்பயிற்றிடப்
பொன்னணைமீதினிற்பொருப்பின்மாக்கட
லின்னருளண்ணல்வீற்றிருக்கும்வேளையில். (௩௭)

நயந்திடும்விண்ணவர்நாதனைத்தொழு
தியைந்துநீரிருந்திடுமித்தலங்களி

லுயர்ந்ததுமேதினியொருபுறந்தனில்
வியந்ததுசிறுத்திடவேண்டுமென்றனர். (௩௮)

அம்புவிசமதலமாவதற்குநீ
விம்பமார்பொதியமால்வெற்பிற்போகென
வும்பர்நாயகன்றிருவுளமகிழ்ச்சியாற்
கும்பமாமுனிதனைக்குறித்துரைத்தனன். (௩௯)

மதிபெறுகுருமுனிமாசிலாதகன்
முதிர்பெறுசெந்தமிழ்முழுதுந்தந்திடுந்
துதிபெறுகயிலைவாழ்சோதியேவலாற்
பொதியமால்வரையுறப்போதும்வேலையில். (௪௦)

வெம்மைகூர்பானுவைவிந்தநோக்கியே
செம்மைநீண்மேருவைத்தினமுஞ்சூழ்ந்தனை
யெம்மைநீசூழ்ந்திடாதிருந்தகாரணம்
பொய்ம்மைநீர்மொழியறப்புகலுகென்றதால். (௪௧)

அங்கனமொழிந்திடவரன்றனாணையாற்
றுங்கமால்வரைதனைச்சூழ்வதன்றியே
யிங்கெனதிச்சையன்றெனவியம்பினன்
பொங்கிருரெக்குமேழ்புரவித்தேரினன். (௪௨)

என்றவனியம்பலுமியல்கொண்மால்வரை
யன்றுமூவுலகினையளக்கவேண்டியே

நின்றமாயவனெனநிமிர்ந்தசெம்பொனின்
குன்றுடன்வெம்பகைகொண்டெழுந்ததால். (௪௩)

குன்றுதானுடகக்குன்றுபோலெழ
வின்றுநாமக்கிரியிரண்டுஞ்சூழொணு
தன்றியேகாவிடினளவுபொய்த்திடு
மென்றுளந்தயங்கினனேழுவாசியோன். (௪௪)

கயிலையைநீங்கியேகங்கையாதியாப்
பயிலுறுநதிபலபடிந்துசந்தனச்
சயிலமீதுறவருந்தபோதனன்றனை
வெயிலவன்கண்டெதிர்விரும்பிக்கூறுவான். (௪௫)

வேறு.

வெறுத்துமேருவினேடோங்குவிந்தமால்வரையினீட்டங்
கறுத்திடுங்கடலினீளக்கனபிழையாயவிண்ணி
னிறுத்தியேயெனையளிக்கநீயலாதில்லைவேறு
மறுத்துரைசெய்திடாமன்மகிழ்ந்தருள்செய்கவென்ருன். ()

அந்தவாசகங்கள்கேட்டவகத்தியன்கதிரோன்றன்னைச்
சிந்தைநீமெலிந்திடாதேசெம்பொன்மேருவைவளைத்தோர்
தந்தபேரருளினலேதாழ்த்துவன்றணியூடே
விந்தமால்வரையையென்றேவிடுத்தனன்வெய்யோன்றன்னை.

அகத்தியன்றனுமந்தவடர்பெருங்கிரியைநோக்கித்
திகைத்திதன்வலிமையெல்லாஞ்செற்றிடர்களைவதற்கே

மிகைத்திடுந்தவமியற்றவேண்டுமாலெனநினைந்துச்
சகத்தினின்மேன்மைபெற்றதலம்பலதேடலுற்றான். (௯அ)

வேறு.

கும்பந்தனில்வந்துதித்தமுனிகுறிக்குந்தலங்கள்பலதேடி
விம்பந்தருசேரங்கையராம்விதிசேர்மழுவைப்பதிமேவி
நம்பந்தமெனும்பிணிதீர்க்குநாதாவென்றேநாதாந்தச்
சம்பந்தனையேசரணமெனச்சார்ந்தானிருகைதலைக்கொண்டே

வேறு.

அற்புதமுனிவன்மிக்கவகிலாண்டந்தன்னையாளுஞ்
சிற்பரன்வீற்றிருக்குஞ்சிறப்பினாற்செம்பொன்னாட்டிற்
கற்பகவனத்தின்வீறுகவின்பெறுபனைவனத்தின்
பொற்பினையினிதுநோக்கிப்புந்தியின்மகிழ்ச்சிகூர்ந்தான். ()

சொற்றகுவயிரத்தூணுஞ்சோதியைக்கண்டிறைஞ்சி
நற்றவனினிதுபோற்றிநயனங்கண்மிகக்களிக்க
முற்றவேகத்திலுமேலமுடிந்தருந்தவப்பேறெல்லாம்
பெற்றதுபோலவாங்கேபெரிதுளமகிழ்ச்சிகொண்டான். ()

ஆலமுண்டருளுமண்ணலருளினாற்றிசைபிழைத்துக்
காலமுந்தவறுவண்ணங்கதிரொதிர்தோன்றுமுன்ன
மூலமாமனலெழுந்துமுழுதுடல்படர்ந்துசெல்லச்
சாலயோகாசனத்திற்சமாதியின்மனமுறைத்தான் (௫உ)

வேறு.

அடியாரிச்சையறிபரமனவன்றனிச்சைதனைத்தீர்க்கக்[ண்டு
கொடியார்மருங்குறன்னுடனேகுலமால்விடையின்மேற்கொ
மிடியானவர்முன்னிருநிதியம்வெளிநின்றதுபோல்வெளிப்ப
ட்டு, முடியார்திங்கட்கன்றினுடன் முனிவன்றனக்குமுன்
னின்றான். (ருநு)

முடிசேரேந்துந்திருவுருவைமுன்னேகண்டுதன்னேரா
மடிநீர்மையுடன்பணிந்தேத்தியங்கம்புளகித்தவசமுற
வடிநீர்ததும்புங்கண்களிக்கமனமுங்களிக்கவாருதியைக்
குடிநீராக்கும்பெருமுனிவன்கும்பிட்டான்றன்குறைதீர.

வேறு.

ஆண்டகையிளம்பிறையமுதத்தாரைக
ளீண்டிடுவெங்கனறவிர்த்திரங்கியே
மூண்டருந்தவம்புரிமுனிவரம்பெற
வேண்டியவரந்தனைவேண்டிடென்றனன். (ருரு)

என்றரன்கருணைகூர்ந்தியம்பவம்முனி
புன்றலைநோக்கிவாய்புதைத்துவானள
வொன்றியவிந்தவெற்பொடுங்குதற்கியான்
வென்றிடுவரந்தரவேண்டுமென்றனன். (ருசா)

அந்தமாமுனிசொலவனந்தசித்தியும்
விந்தமால்வரைதனைவெல்லுமேன்மையுந்

தந்தனமெனமொழிதனதுபங்கினிற்
பைந்தொடியமர்பராபரன்பகர்ந்தனன். (௫௭)

அருந்தவன்வணங்கியேயன்புகூரவே
வரந்தனையினிதருள்வயிரத்துணர்பாற்
பெருந்தவமருளுடன்பெற்றுநீங்கியே
விரைந்துடன்பொருந்தினன்விந்தவெற்பினில். (௫௮)

வேண்டினன்றென்கடல்விளையவம்மென
வீண்டடைந்திடுகவென்றியம்பவங்கையா
னீண்டவானகமுறநிமிர்ந்தவெற்பினைத்
தீண்டினன்செந்தமிழ்சேர்ந்தமாமுனி. (௫௯)

செஞ்சொல்கூரகத்தியன்சிவகரந்தொடச்
சஞ்சிதமொழிந்திடுந்தன்மைபோலவே
விஞ்சுமாமுனிதொடவிந்தமால்வரை
யஞ்சியேநிலைகுலைந்தவனிப்புக்கதால். (௬0)

பூதலமீதினிற்புகுந்தமால்வரை
மீதினினடந்தியாமீளுமத்துணைப்
பாதலந்தன்னிலிப்படியிருந்திடென்
றோதியேதென்றிசையுறநடந்தனன். (௬௧)

கதிபெறுகதிரவன்கடக்கதுவெற்பினை
பதிபலநதிபலபரவியாடியே

முதிர்செழுந்தமிழ்தெரிமுனிவன்றென்றிசைப்
பொதியமால்வரையினிற்புக்கிருந்தனன். (௬௨)

வேறு.

சுத்தியாற்சைவாச்சாரத்துறையினாற்பொறையான்மிக்க
முத்திடாதினையாவின்சொன்மொழியினன்முதுநூலாய்ந்
தோர், புத்தியாற்சிவாலயங்கள்பூசைசற்காரஞ்செய்யும்
பத்தியாலோங்கும்பேர்கள்பலமுனிவாழிவாழி. (௬௩)

பொன்னிசூழ்மழுவைவாழும்புனிதராம்வயிரத்தூணர்
தன்னருட்சரிதைவாழிதழைபரிகலத்தோர்வாழி
நன்னெறியரசர்வாழிநான்மறைப்புலவர்வாழி
பன்னுசெந்தமிழோர்வாழிபணிசெய்வோர்வாழிதானே. ()

வல்வினைப்பிணிகடீர்க்குமழுவையம்புராணந்தன்னைச்
சொல்பவர்கேட்போரேட்டிற்சுகம்பெறவரைந்திட்டோரு
மல்வினையனைத்துநீங்கியவரவர்நினைத்தவண்ணஞ்
செல்வமுஞ்சிறப்பும்பெற்றுச்செகத்தினிலிருப்பர்தாமே.

இளம்பிறைமுடித்தவேணியிறைவராம்வயிரத்தூணர்
வளந்தருபுகழேபெற்றமழுவையம்புராணந்தன்னை
யுளந்தனின்மகிழ்ச்சிகூரவுரைசெய்தோர்வரைந்தோர்கேட்
டோர், கிளர்ந்தெழுசெல்வம்பெற்றுக்கிளையெலாந்தழைப்ப
வாழ்வார். (௬௬)

பொன்னியார்க்கண்டன்வீமன்புருடமாமிருகர்போற்று
மன்னியபுகழேபெற்றவச்சிரத்தூணர்வாழுந்
தன்னிகர்மழுவையானதலத்துயர்பெருமைதன்னை
முன்னருந்தவங்கள்பெற்றோர்முப்பொழுதினுங்கேட்பாரே.

அகத்தியச்சருக்க முற்றிற்று.

## மழுவைப்புராணம்

முற்றிற்று.



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

## அருளிச்செய்த

திருமழபாடி - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

களையும்வல்வினையஞ்சனெஞ்சேகருதார்புர
முளையும்பூசல்செய்தானுயர்மால்வரைநல்விலா
வளையவெஞ்சரம்வாங்கியெய்தான்மதுத்தும்பிவண்
டளையுங்கொன்றையந்தார்மழபாடியுளண்ணலே. (௧)

காச்சிலாதபொன்னோக்குங்கனவயிரத்திர
ளாச்சிலாதபளிங்கினனஞ்சுமுனாடினான்
பேச்சினாலுமக்காவதென்பேதைகாள்பேணுமின்
வாச்சமாளிகைசூழ்மழபாடியைவாழ்த்துமே. (௨)

உரங்கெடுப்பவனும்பர்களாயவர்தங்களைப்
பரங்கெடுப்பவனஞ்சையுண்டுபகலோன்றனை
முரண்கெடுப்பவன்முப்புரந்தீயெழச்செற்றுமுன்
வரங்கொடுப்பவன்மாமழபாடியுள்வள்ளலே. (௩)

பள்ளமார்சடையிற்புடையேயடையப்புனல்
வெள்ளமாதரித்தான்விடையேறியவேதியன்

வள்ளன்மா மழபாடியுண்மேயமருந்தினை
யுள்ளமாதரிமின்வினையாயினவோயவே. (௪)

தேனுலாமலர்கொண்டுமெய்த்தேவர்கள்சித்தர்கள்
பானெயஞ்சுடனாட்டமுன்னாடியபால்வணன்
வானநாடர்கள்கைதொழுமாமழபாடியெங்
கோனைநாடொறுங்கும்பிடவேகுறிகூடுமே. (௫)

தெரிந்தவன்புரமூன்றுடன்மாட்டியசேவகன்
பரிந்துகைதொழுவாரவர்தம்மனம்பாவினான்
வரிந்தவெஞ்சிலையொன்றுடையான்மழபாடியைப்
புரிந்துகைதொழுமின்வினையாயினபோகுமே. (௬)

கந்தவார்குழலாளுமைதன்னொருகூறுடை
யெந்தையானிமையாதமுக்கண்ணினனெம்பிரான்
மைந்தன்வார்பொழில்சூழ்மழபாடிமருந்தினைச்
சிந்தியாவெழுவார்வினையாயினதேயுமே. (௭)

இரக்கமொன்றுமிலானிறையான்றிருமாமலை
யுரக்கையாலெடுத்தான்றனதோண்முடிபத்திற
விரற்றலைந்நிறுவியுமையாளொடுமேயவன்
வரத்தையேகொடுக்கும்மழபாடியுள்வள்ளலே. (௮)

ஆலமுண்டமுதமமரர்க்கருளண்ணலார்
காலனாருயிர்வீட்டியமாமணிகண்டனார்

சாலநல்லடியார்தவத்தார்களுஞ்சார்விட
மாலயன்வணங்கும்மழபாடியெம்மைந்தனே. (௯)

கலியின்வல்லமணுங்கருஞ்சாக்கியப்பேய்களு
நலியுநாள்கெடுத்தாண்டவென்னுதனார்வாழ்பதி
பலியும்பாட்டொடுபண்முழவும்பலவோசையு
மலியுமாமழபாடியைவாழ்த்திவணங்குமே. (க0)

மலிகொள்மாளிகைசூழ்மழபாடியுள்வள்ளலைக்
கலிசெய்மாமதில்சூழ்கடற்காழிக்கவுணியன். (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## திருமழபாடி - பண் - கோல்லி.

திருச்சிற்றம்பலம்.

காலையார்வண்டினங்கிண்டியகாருறு
சோலையார்பைங்கிளிசொற்பொருள்பயிலவே
வேலையார்விடமணிவேதியன்விரும்பிட
மாலையார்மதிதவழ்மாமழபாடியே. (க)

கறையணிமிடறுடைக்கண்ணுதனண்ணிய
பிறையணிசெஞ்சடைப்பிஞ்ஞகன்பேணுமூர்
துறையணிகுருகினந்தூமலர்துதையவே
மறையணிநாவினன்மாமழபாடியே. (உ)

அந்தணர்வேள்வியுமருமறைத்துழனியுஞ்
செந்தமிழ்க்கீதமுஞ்சீரினால்வளர்தரப்
பந்தணைமெல்விரலாளொடும்பயில்விட
மந்தம்வந்துலவுசீர்மாமழபாடியே. (௩)

அத்தியினுரிதனையழகுறப்போர்த்தவன்
முத்தியாய்மூவரின்முதல்வனாய்நின்றவன்
பத்தியாற்பாடிடப்பரிந்தவர்க்கருள்செயு
மத்தனாருறைவிடமணிமழபாடியே. (௪)

கங்கையார்சடையிடைக்கதிர்மதியணிந்தவன்
வெங்கண்வாளரவுடைவேதியன்றீதிலாச்
செங்கயற்கண்ணுமையாளொடுஞ்சேர்விட
மங்கைமார்நடம்பயின்மாமழபாடியே. (௫)

பாலனாராருயிர்பாங்கினாலுணவருங்
காலனாருயிர்செகக்காலினாற்சாடினான்
சேலினார்கண்ணினாடனொடுஞ்சேர்விட
மாலினார்வழிபடுமாமழபாடியே. (௬)

விண்ணிலாரிமையவர்மெய்ம்மகிழ்ந்தேத்தவே
யெண்ணிலார்முப்புரமெரியுணநகைசெய்தார்
கண்ணினாற்காமனைக்கனலெழக்காய்ந்தவெம்
மண்ணலாருறைவிடமணிமழபாடியே. (௭)

கரத்தினாற்கயிலையையெடுத்தகாரரக்கனை
சிரத்தினையூன்றலுஞ்சிவனடிசரணெனா
விரத்தினாற்கைந்நரம்பெடுத்திசைபாடலும்
வரத்தினான்மருவிடமாமழபாடியே. (௮)

ஏடுலாமலர்மிசையயனெழின்மாலுமாய்
நாடினார்க்கரியசீர்நாதனுறைவிடம்
பாடெலாம்பெண்ணையின்பழம்விழப்பைம்பொழின்
மாடெலாமல்குசீர்மாமழபாடியே. (௯)

உறிபிடித்தூத்தைவாய்ச்சமணொடுசாக்கியர்
நெறிபிடித்தறிவிலாநீசர்சொற்கொள்ளன்மின்
பொறிபிடித்தரவினம்பூணெனக்கொண்டுமான்
மறிபிடித்தானிடமாமழபாடியே. (௧௦)

ஞாலத்தாராதிரைநாளினானாடொறுஞ்
சீலத்தான்மேவியதிருமழபாடியை
ஞாலத்தான்மிக்கசீர்ஞானசம்பந்தன்சொற்
கோலத்தாற்பாடுவார்குற்றமற்றார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருமழபாடி - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

அங்கையாரழலன்னழகார்சடைக்
கங்கையான்கடவுள்ளிடமேவிய

மங்கையாளுறையுமமழபாடியைத்
தங்கையாற்றொழுவார்தகவாளரே. (க)

விதியுமாம்விளைவாமொளியார்ந்ததோர்
கதியுமாங்கசிவாம்வசியாற்றமா
மதியுமாம்வலியாமமழபாடியு
ணதியந்தோய்சடைநாதனற்பாதமே. (உ)

முழவினான்முதுகாடுறைபேய்க்கணக்
குழுவினான்குலவுங்கையிலேந்திய
மழுவினானுறையும்மழபாடியைத்
தொழுமினுந்துயரானவைதீரவே. (ங)

கலையினான்மறையான்கதியாகிய
மலையினான்மருவார்புரமூன்றெய்த
சிலையினான்சேர்திருமழபாடியைத்
தலையினால்வணங்கத்தவமாகுமே. (ச)

நல்வினைப்பயனான்மறையின்பொருள்
கல்வியாயகருத்தனுருத்திரன்
செல்வன்மேயதிருமழபாடியைப்
புல்கியேத்துமதுபுகழாகுமே. (ரு)

நீடினாருலகுக்குயிராய்நின்
றாடினானெரிகானிடைமாநடம்

பாடினாரிசைமாமழபாடியை
நாடினார்க்கில்லைநல்குரவானவே. (௬)

மின்னினாரிடையாளொருபாகமாய்
மன்னினானுறைமாமழபாடியைப்
பன்னினாரிசையால்வழிபாடுசெய்
துன்னினார்வினையாயினவோயுமே. (௭)

தென்னிலங்கையர்மன்னன்செழுவரை
தன்னிலங்கவடர்த்தருள்செய்தவன்
மன்னிலங்கியமாமழபாடியை
யுன்னிலங்கவுறுபிணியில்லையே. (௮)

திருவினாயகனுஞ்செழுந்தாமரை
மருவினானுந்தொழத்தழன்மாண்பம
ருருவினானுறையும்மழபாடியைப்
பரவினார்வினைப்பற்றறுப்பார்களே. (௯)

நலியுநன்றறியாச்சமண்சாக்கியர்
வலியசொல்லினுமாமழபாடியு
ளொலிசெய்வார்கழலான்றிறமுள்கவே
மெலியுநம்முடன்மேல்வினையானவே. (௧௦)

மந்தமுந்துபொழின்மழபாடியு
ளெந்தைசந்தமினிதுகந்தேத்துவான்
கந்தமார்கடற்காழியுண்ஞானசம்
பந்தன்மாலைவல்லார்க்கில்லைபாவமே. திருச்சிற்றம்பலம். (௧௧)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசுநாயனார்

## அருளிச்செய்த

—·····⁂·····—

### திருமழபாடி - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நீறேறுதிருமேனியுடையான்கண்டாய்
நெற்றிமேலொற்றைக்கண்ணிறைத்தான்கண்டாய்
கூறாகவுமைபாகங்கொண்டான்கண்டாய்
கொடியவிடமுண்டிருண்டகண்டன்கண்டா
யேறேறியெங்குந்திரிவான்கண்டா
யேழுலகுமேழ்மலையுமானான்கண்டாய்
மாறானார்தம்மரணமட்டான்கண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே. (௧)

கொக்கிறகுசென்னியுடையான்கண்டாய்
கொல்லைவிடையேறுங்கூத்தன்கண்டா
யக்கரைமேலாடலுடையான்கண்டா
யனலங்கையேந்தியவாதிகண்டா
யக்கோடரவமணிந்தான்கண்டா
யடியார்கட்காரமுதமானான்கண்டாய்

மற்றிருந்தகங்கைச்சடையான்கண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே (உ)

நெற்றித்தனிக்கணுடையான்கண்டாய்
நேரிழையோர்பாகமாய்நின்றான்கண்டாய்
பற்றிப்பாம்பாட்டும்படிறன்கண்டாய்
புல்லூர்பலிதேர்பரமன்கண்டாய்
செற்றார்புரமூன்றுஞ்செற்றான்கண்டாய்
செழுமாமதிசென்னிவைத்தான்கண்டாய்
மற்றொருகுற்றமிலாதான்கண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே. (ங)

அலையார்ந்தபுனற்கங்கைச்சடையான்கண்டா
யண்டத்துக்கப்பாலாய்நின்றான்கண்டாய்
கொலையான்கூற்றங்குமைத்தான்கண்டாய்
கொல்வேங்கைத்தோலொன்றுடுத்தான்கண்டாய்
சிலையாற்றிரிபுரங்கள்செற்றான்கண்டாய்
செழுமாமதிசென்னிவைத்தான்கண்டாய்
மலையார்மடந்தைமணாளன்கண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே. (ச)

உலந்தார்தமங்கமணிந்தான்கண்டா
யுவகையோடின்னருள்கள்செய்தான்கண்டாய்
நலந்திகழுங்கொன்றைச்சடையான்கண்டாய்
நால்வேதமாறங்கமானான்கண்டா

யுலந்தார்தலைகலனாக்கொண்டான்கண்டா
யும்பரார்தங்கள்பெருமான்கண்டாய்
மலர்ந்தார்திருவடியென்றலைமேல்வைத்த
மழபாடிமன்னுமணாளன்றானே. (௫)

தாமரையான்றன்றலையைச்சாயத்தான்கண்டாய
தகவுடையார்நெஞ்சிருக்கைகொண்டான்கண்டாய்
பூமலரானேத்தும்புனிதன்கண்டாய்
புணர்ச்சிப்பொருளாகிநின்றான்கண்டா
யேமருவுவெஞ்சிலையொன்றேந்திகண்டா
யிருளார்ந்தகண்டத்திறைவன்கண்டாய்
மாமருவுங்கலைகையிலேந்திகண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே. (௬)

நீராகிநெடுவரைகளானான்கண்டாய்
நிழலாகிநீள்விசும்புமானான்கண்டாய்
பாராகிப்பௌவமேழானான்கண்டாய்
பகலாகிவானாகிநின்றான்கண்டா
யாரேனுந்தன்னடியார்க்கன்பன்கண்டா
யணுவாகியாதியாய்நின்றான்கண்டாய்
வாரார்ந்தவனமுலையாள்பங்கன்கண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே. (௭)

பொன்னியலுந்திருமேனியுடையான்கண்டாய்
பூங்கொன்றைத்தாரொன்றணிந்தான்கண்டாய்

மின்னியலும்வார்சடையெம்பெருமான்கண்டாய்
வேழத்தினுரிவிரும்பிப்போர்த்தான்கண்டாய்
தன்னியல்பார்மற்றொருவரில்லான்கண்டாய்
தாங்கரியசிவந்தானாய்நின்றான்கண்டாய்
மன்னியமங்கையோர்கூறன்கண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே. (அ)

ஆலாலமுண்டுகந்தவாதிகண்டா
யடையலர்தம்புரமூன்றுமெய்தான்கண்டாய்
காலாலக்காலனையுங்காய்ந்தான்கண்டாய்
கண்ணப்பர்க்கருள்செய்தகாளைகண்டாய்
பாலாருமொழிமடவாள்பாகன்கண்டாய்
பசுவேறிப்பலிதிரியும்பண்பன்கண்டாய்
மாலாலுமறிவரியமைந்தன்கண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே. (கூ)

ஒருசுடராயுலகேழுமானான்கண்டா
யோங்காரத்துட்பொருளாய்நின்றான்கண்டாய்
விரிசுடராய்விளங்கொளியாய்நின்றான்கண்டாய்
விழவொலியும்வேள்வொலியுமானான்கண்டா
யிருசுடர்மீதோடாவிலங்கைக்கோனை
யீடழியவிருபதுதோளிறுத்தான்கண்டாய்
மருசுடரின்மாணிக்கக்குன்றுகண்டாய்
மழபாடிமன்னுமணாளன்றானே. (க0)

திருச்சிற்றம்பலம்.

## திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அலையடுத்தபெருங்கடனஞ்சமுதாவுண்டு
வமரர்கடந்தலைகாத்தவையர்செம்பொற்
சிலையெடுத்துமாநாகநெருப்புக்கோத்துத்
திரிபுரங்கடீயிட்டசெல்வர்போலு
நிலையடுத்தபசும்பொன்னான்முத்தானீண்ட
நிரைவயிரப்பலகையாற்குலையார்த்துற்ற
மலையடுத்தமழபாடிவயிரத்தூணே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௧)

அறைகலந்தகுழன்மொந்தைவீணையாழு
மந்திரத்திற்கந்தருவரமரரேத்த
மறைகலந்தமந்திரமுநீருங்கொண்டு
வழிபட்டார்வானாளக்கொடுத்தியன்றே
கறைகலந்தபொழிற்கச்சிக்கம்பமேய
கனவயிரத்திரடூணேகலிசூழ்மாட
மறைகலந்தமழபாடிவயிரத்தூணே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௨)

உரங்கொடுக்குமிருண்மெய்யர்மூர்க்கர்பொல்லா
வூத்தைவாய்ச்சமணர்தமையுறவாக்கொண்ட

பரங்கெடுத்திங்கடியேனையாண்டுகொண்ட
பவளத்தின்றிரடேணைபசும்பொன்முத்தே
புரங்கெடுத்துப்பொல்லாதகாமனாகம்
பொடியாகவிழித்தருளிப்புவியோர்க்கென்றும்
வரங்கொடுக்குமழபாடிவயிரத்தூணே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௩)

ஊனிகந்தூணுறிகையர்குண்டராம்பாலலா
வூத்தைவாய்ச்சமணருறவாகக்கொண்டு
ஞானகஞ்சேர்ந்துள்ளவயிரத்தைநண்ணு
நாயேனைப்பொருளாகவாண்டுகொண்ட
மீனகஞ்சேர்வெள்ளநீர்விதியாற்சூடும்
வேந்தனேவிண்ணவர்தம்பெருமான்மேக
வானகஞ்சேர்மழபாடிவயிரத்தூணே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௪)

சிரமேற்றநான்முகன்றன்றலையுமற்றைத்
திருமாறன்செழுந்தலையும்பொன்றச்சிந்தி
யுரமேற்றவிரவிபற்றகர்த்துச்சோம
ஞெளிர்கலைகள்படவுழக்கியுயிரைநல்கி
நரையேற்றவிடையேறிநாகம்பூண்ட
நம்பியையேமறைநான்குமோலமிட்டு
வரமேற்குமழபாடிவயிரத்தூணே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௫)

சினந்திருத்துஞ்சிறுப்பெரியார்குண்டர்தங்கள்
செதுமதியார்தீவினைக்கேவிழுந்தேன்றேடிப்
புனந்திருத்தும்பொல்லாதபிண்டிபேணும்
பொறியிலியேன்றனைப்பொருளாவாண்டுகொண்டு
தனந்திருத்துமவர்திறத்தையொழியப்பாற்றித்
தயாமூலதன்மவழியெனக்குநல்கி
மனந்திருத்துமழபாடிவயிரத்தூணே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (சு)

சுழித்துணையாம்பிறவிவழித்துக்கநீக்குஞ்
சுருள்சடையெம்பெருமானேதூயதெண்ணீ
ரிழிப்பரியபசுபாசப்பிறப்பைநீக்கு
மென்றுணையேயென்னுடையபெம்மான்றம்மான்
பழிப்பரியதிருமாலுமயனுங்காணாப்
பரிதியேசுருதிமுடிக்கணியாய்வாய்த்த
வழித்துணையாமழபாடிவயிரத்தூணே
யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (எ அ சு ய)

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சுந்தரமூர்த்திநாயனார்

## அருளிச்செய்த

### திருமழபாடி - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேன்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழபாடியுண்மாணிக்கமே
யன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௧)

கீளார்கோவணமுந்திருநீறுமெய்ப்பூசியுன்றன்
றாளேவந்தடைந்தேன்றலைவாவெனையேன்றுகொணீ
வாளார்கண்ணிபங்காமழபாடியுண்மாணிக்கமே
கேளாய்நின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௨)

எம்மானெம்மனையென்றெனக்கெட்டனைச்சார்வாகா
ரிம்மாயப்பிறவிபிறந்தேயிறந்தெய்த்தொழிந்தேன்
மைம்மாம்பூம்பொழில்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
யம்மாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௩)

பண்டேநின்னடியேனடியாரடியார்கட்கெல்லாந்
தொண்டேபூண்டொழிந்தேன்றொடராமைத்துரிசறுத்தே
வண்டார்பூம்பொழில்சூழ்மழபாடியுண்மாணிக்கமே [ன்
யண்டாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௪)

கண்ணாயேழுலகுங்கருத்தாயவருத்தமுமாய்ப்
பண்ணாரின்றமிழாய்ப்பரமாயபரஞ்சுடரே
மண்ணார்பூம்பொழில்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
யண்ணாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௫)

நாளார்வந்தணுகிநலியாமுனநின்றனக்கே
யாளாவந்தடைந்தேனடியேனையுமேன்றுகொணீ
மாளாநாளருளுமழபாடியுண்மாணிக்கமே
யாளாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௬)

சந்தாருங்குழையாய்சடைமேற்பிறைதாங்கிநல்ல
வெந்தார்வெண்பொடியாய்விடையேறியவித்தகனே
மைந்தார்சோலைகள்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
யெந்தாய்நின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௭)

வெய்யவிரிசுடரோன்மிகுதேவர்கணங்களெல்லாஞ்
செய்யமலர்களிடமிகுசெம்மையுணின்றவனே
மையார்பூம்பொழில்சூழ்மழபாடியுண்மாணிக்கமே
யையாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௮)

நெறியேயென்மலனேநெடுமாலயன்போற்றிசெய்யுந்
தறியேநீர்மையனேகொடியேரிடையாடலைவா
மறிசேரங்கையனேமழபாடியுண்மாணிக்கமே
பறிவேநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. (௯)

ரார்முப்புரமுமெரியச்சிலைதொட்டவனை
பாரார்கொங்கையுடன்மழபாடியுண்மேயவனைச்
ரார்நாவலர்கோனாரூரனுரைத்ததமிழ்
ாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

மூவர் திருவாய்மலர்ந்தருளிய,

திருமழபாடி தேவாரப்பதிகங்கள்

முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41